விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 04 சனிக்கிழமை (18.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 150

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# கொழும்பில் இன்று வெற்றி விழா வன்னியில் விளக்கேற்றத்தடை

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தத்தில் அரசாங்கம் வென்றதை நினைவு கூரும் யுதத வெற்றி வாரம் இன்று கொழும்பில் கொண்டாடப்படுகிறது.

இதவேளை முள்ளிவாய்க்காலில் மரணித்தவர்களுக்கு வன்னியில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவதற்கு புலனாய்வுத் துறையினர் தடை விதித்துள்ளனர்.

யுத்த வெற்றி வாரம்கொண்டாட்ட வைபவம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையல்இன்றுநடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த வைபத்திற்கான இறுதி ஒத்திகைகள் காலி முகத்திடலில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்றன.

கடற் படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் வீரர்கள் இறுதி ஒத்திகைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை இன்று நடைபெறவுள்ள யுத்த வெற்றி கொண்டாட்ட வைபவம் காரணமாக காலை 5 மணியிலிருந்து வைபவம் நிறைவடையும் வரை கொழும்புநகரில் விசேட வாகனப் போக்குவரத்து திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த காலப்பகுதிக்குள் வாகன சாரதிகள் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக சிறிவர்தன தெரிவிக்கின்றார்.

இதேவேளைமுள்ளிவாய்க்காலில் மரணித்தவர்களை மே 18இல் நினைவுகூர்ந்து ஆலயங்களில், வீடுகளில் அல்லது பொது இடங்களில் விளக்கேற்றினால் இன் (20ஆம் பக்கம் பார்க்க)

## உறவுகளை நினைவு கூர திண்டாடும் வன்னி மக்கள்



யுத்த வெற்றிக் கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகள் கொழும்பில் மும்முரமாக இடம் பெற்று வருகின்றன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று சனிக்கிழமை, கொழும்பில் இடம்பெறவுள்ள இந்த யுத்த வெற்றி நிகழ்விற்காக கொழும்பு காலி முகத்திடலில் முப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து ஒத்திகைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஒத்திகையின் போது எடுக்கப்பட்ட படம்.

## இந்தியா வலியுறுத்தல்

(கொழும்பு)

13ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டாம் என இந்திய அரசாங்கம், இலங்கையிடம் கோரியுள் ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மன் குர்ஷித், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கு தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்தி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாகாணசபைகளின் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை ரத்து செய்ய இலங்கை அரசாங்கம் முயறசித்து வருவதா கத் தகவல்கள் வெளியாகி யுள்ளதாகத தெரிவித்துள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பிலான வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கமே மீறிச் செயற்படக் கூடாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதாகவே இலங்கை அரசாங்கம் உறுதியளித்திருந்தது எனவும், காணி காவல்துறை அதிகாரங்கள் ரத்து செய்யப்பட உள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

## தயா மாஸ்டரின் கோரிக்கையை ஐ.தே.க. நிராகரிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டரின் கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வட




மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிட தயா மாஸ்டர் கோரியதாகவும், அதனை நிராகரித்ததாகவும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த போது இது தொடர்பான பேச்சுவார்த் தை நடத்தப்பட்டதாகக் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மற்றும் வன்னியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இராணுவம் அவசியம்

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கில் யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும், பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இராணுவத்தினரின் பிரசன்னம் அவசியமானது என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுககு வழங்கியுள்ள செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், (20ஆம் பக்கம் பார்க்க)

## 'இலங்கை பௌத்த நாடு'

### சர்வ மத அமைப்பை சாடுகிறது பொது பல சேனா

(கொழும்பு)

இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமான நாடு என்பதை ஏற்றுக் கொள்ளாதவாகள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட வேண்டும் என பொதுபல சேனா கோரிக்கை விடுத்துள்ளது.


அத்துடன், இலங்கை [illegible] அமைப்புக்களை தடை செய்ய வேண்டும் எனவும், இவ்வமைப்புக்கள் சிங்கள பௌத்தர்களை அழிக்கும் நிகழ்ச்சி நிரலையே முன்னெடுப்பதாகவும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ([illegible] பக்கம் பார்க்க)

## தற்கொலை முயற்சி

### தாய் தப்பினார்; மூன்று குழந்தைகள் பலி

(தாண்டிக்குளம்)

வவுனியா தாண்டிக்குளத்தில் இளம் தாயொருவர் தனது மூன்று பெண் பிள்ளைகளுடன் கிணற்றில் பாய்ந்ததில், மூன்று பிள்ளைகளும் உயிரிழந்துள்ளனர். தாய் மட்டும் உயிர் தப்பியுள்ளார். இத் துயரச் சம்பவம்நேற்று இடம் பெற்றுள்ளது.



உயிர் தப்பிய தாயிடம் பொலிசார் விசாரணை செய்துவரு கின்றனர்.

உயிரிழந்த மூத்த பிள்ளைக்கு 3 வயதாகிறது. மற்றைய இரண்டு பிள்ளைகளும் ஒன்றரை வயதான இரட்டைக் குழந்தைகள் என்று பொலிசார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்த இந்தத் தாய் வவுனியா தாண்டிக் குளத்தில் கணவருடன் வசித்து வந்துள்ளார்.

கணவன் வேறொரு பெண் (19ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் 6 ஆயிரம் விதவைப் பெண்கள்!

(கிளிசொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 6 ஆயிரத்து 170 இற்கும் அதிகமான பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எனவே இக் குடும்பங்களின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்குச் சகல துறையினரும் பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென அவா கேட்டுக கொண்டார்.

வடமாகாண பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான கலந்துரையாடல ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

எமது மாவட்டத்தில் சுமார் 6 ஆயிரத்து 170 பெண்கள் போராலும் ஏனைய அனர்த்தங்களாலும் விபத்துக்களாலும் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 ஆவது ஆண்டு நினைவுகளுடன்...



திரைகடலோடி
திரவியம் தேடினும்
தீர்ந்து போய்விடுமோ
உம் தீராத அன்பு
உறைவிடங்கள் வேறாயினும்
தெய்வம் குடிகொள்ளுமிடம்
உள்ளம் எனும் பெருங் கோயில்

பத்தொன்பது ஆண்டென்ன
இருநூறு ஆண்டுகள் கடந்தாலும்
எம் விழிகளில் விளக்கேற்றி
இதயத்தில் உமை நிறுத்தி
பூசித்து பூஜை செய்வோம்

அமரர்

## ரி.ஜே.ஏ.செல்வரெட்ணம்

(முன்னாள் பொது சுகாதாரப் பரிசோதகர் - மன்னார்)

இல.828/1,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உம் நினைவுகளுடன் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(2663)




## விற்பனைக்கு

நியூ பேனார்ட் (NEW BERNARD) NO.1 புறொயிலர் இன கோழி குஞ்சுகள் எம்மிடம் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

"ஒவ்வொரு புதன்கிழமையும் கோழிக் குஞ்சுகள்" விநியோகிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
செல்வறெட்ணம்
70/11, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
0778448295, 0776176370 (சி-3353)

## ஆத்மா சாந்திப் பிரார்த்தனை

அமரர்

**நவரத்தினராசா சிவபாக்கியம்**

யாழ்ப்பாணம் கல்வி வலய முறைசாரா கல்விப் பெயர் பெற்ற அலுவலர் திரு.ந.சண்முகராசா அவர்களின் அன்புத் தாயார் நவரத்தினராசா சிவபாக்கியம் அவர்கள் 17/04/2013 அன்று சிவபதம் எய்தினார். அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வு 17/05/2013 இல் நிகழ்ந்தது. அவரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்
அ.சிவரூபன்
(பெயர் பெற்ற அலுவலர் முறைசாரா
கல்வி வலிகாமம் கல்வி வலயம்)
குடும்பத்தினர்.

(சி-3356)

## அறிவித்தல்

190 ம் கட்டை, நுணாவில் மேற்கில் இயங்கும் டிஷ்னா மகளிர் வாழ்வாதார பயிற்சி நிலையத்தினரால் "டிஷ்னா உற்பத்தி -இளைய தலைமுறையினருக்கான வாழ்வாதார பயிற்சி நிலையம்" என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட கடிதத்தலைப்பில் (Letter Head) ரஞ்சனா நவரத்தினம் என்ற எனது பெயரும், பதவிப் பெயரும், எனது அனுமதியின்றி, எனக்கு அறிவிக்காமலே Chair Person ஆகக் குறிப்பிடப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. எனக்கும் இந்நிறுவனத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. எனவே இக்கடிதத் தலைப்பை உபயோகித்து இந்நிறுவனத்தினர் இதுவரை மேற்கொண்ட மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள கடிதத் தொடர்பாடல்கள், நிதி தொடர்பான நடவடிக்கைகள் எவற்றிற்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உதவிப் பிரதேச செயலர், பிரதேச செயலகம், தென்மராட்சி. ரஞ்சனா நவரத்தினம்

(2767)

# உயிரிழந்த உறவுகளை நினைவு கூர உரிமையுண்டு

## பல்கலை.ஆசிரியர் சங்கத் தலைவர் உரை

(யாழ்ப்பாணம்)

உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதற்கு எமக்கு உரிமையுண்டு. எத்தனை தடைகள் வரினும் அந்த உணர்வு எமக்குள் என்றும் இருக்கும் என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஆர்.இராசகுமார் தெரிவித்தார்.

யாழ்.பல்கலையில் இறுதிக் கட்டப் போரின் போது உயிரிழந்தவர்களினை நினைவு கூரும் நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பலர் ஒன்றாக இறந்தவர்களினை வீடுகளில் நாம் நினைவு கூர முடியாது. இந்துக்களின் மரபும் அவ்வாறுதான் உள்ளது.

இறந்தவர்களினை நினைவு கூருவது என்பது யாருக்கும் எதிரான ஒரு செயற்பாடு இல்லை. நாங்கள் அவர்களுடைய ஆத்ம சாந்திக்காகத்தான் பிரார்த்திக்கின்றோம்.

எமது விரல்களில் ஒன்றைக் கேட்டால் நாம் கொடுப்பதற்குத் தயாரா? நாங்கள் தயாரில்லை. ஆனால் இன்று ஈடுசெய்ய முடியாதளவுக்கு உயிர்களினை இழந்து போயுள்ளோம்.

அதற்காக நாம் ஏனையவர்களிற்கு உயிரிழப்பு ஏற்படவில்லை அல்லது தமது துக்கத்தினை கொண்டாடக் கூடாது அல்லது அவர்களிற்கு துக்கமில்லை என்று நாம் கூறவில்லை.

நாங்கள் எங்களுடைய உறவுகள் கொத்துக் கொத்தாக முறையற்ற விதத்தில் அழிக்கப்பட்டதை அவர்கள் தங்கள் உடைய உயிரிழந்த நாளை நினைவு கூர்ந்து வருகின்றோம்.

இங்கே என்னவென்றால்; எங்களை அடக்கி ஒடுக்கி அப்படியே வைத்திருக்க எண்ணுகின்றனரோ தெரியவில்லை.

மாணவர்கள் அரசியல் பேசக்கூடாது என்கின்றனர். அவ்வாறானால் மாணவர்கள் எங்கிருந்து அரசியலினை கற்றுக் கொள்வது?

இன்று உயர் கல்வியமைச்சராக இருக்கின்ற எஸ்.பி. திசநாயக்க கூட மாணவர் அமைப்பின் தலைவராக இருந்தவர்தான். அவர் அங்கு தான் ஆளுமையை வளர்த்துக் கொண்டார்.

நாங்கள் இலங்கையின் சட்டத்தினை மீறி எதுவும் செய்யவில்லை. வீடுகளில் அந்தியேட்டியோ, திவசமோ செய்வது போன்று தான் இன்றும் நினைவு கூருகின்றோம்.

சிலவேளை இம்முறை என்னைக் கூப்பிடுவார்கள். அங்கு என்ன காரணத்திற்காகசென்றீர்கள். இங்கு என்ன கூறினீர்கள் என்பதனை கேட்க. ஆனால் நான் ஒன்றைமட்டும் கூறுகின்றேன் தமிழ்ச் சமூகத்திற்கு இங்கே சமவுரிமையுடன் கூடிய வாழ்வு தேவை. இது கட்டாயமானது. இதனை நான் எங்கு சென்றாலும் சொல்லத் தயாராகவுள்ளேன்.

நான் எந்த அரசியல் கட்சியினைச் சார்ந்தவனில்லை. ஆனால் ஒரேயொரு விடயத்திற்கு சார்பானவன். இங்கே தமிழ் மக்களிற்கு சுதந்திரமானதும் சமவுரிமையும் கூடிய வாழ்க்கை இல்லை என்பதனை நான் அடித்துக் கூறுகின்றேன். அதனை நாம் அரசியல் முறையாக சமாதான முறையால் அடைய வேண்டும்.

எனது கருத்தை சொல்லுவது தவறென்றால் அதற்கு ஏதாவது தண்டனை கொடுத்தால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

இன்று எம் தமிழர்களுக்கு அவசியமானது சுயநிர்ணயத்துடன் கூடிய ஒரு தீர்வே. ஒவ்வொருவரும் எம்மை ஏமாற்றிக் கொண்டே போகின்றார்கள்.

நாங்கள் 50 களில் இருந்து ஏமாற்றப்பட்டு தாக்கப்பட்டு நசுக்கப்பட்டு வரும் ஒரு சமூகம். இன்று நாங்கள் எமது உறவுகளின் இழப்பைக்கூட நினைவு கூர முடியாத நிலையிலுள்ளோம்.

இருப்பினும் எமது உணர்வுகள் எம்மை விடவில்லை. சிறுதொகை மாணவர்களாவது வெளிப்படையாக உணர்வினை காட்டுகின்றனர். ஏனையவர்கள் பயத்தினால் தமது மனங்களில் நினைவு கூருகின்றனர்.

ஒருவருக்கு வெற்றி விழாவாக இருக்கட்டும். மற்றவருக்கு துக்க நாளாக இருக்கட்டும். ஆகையால் வெற்றி விழா கொண்டாடுபவர்கள் வெற்றி விழா கொண்டாடட்டும். துக்க தினம் அனுஷ்டிப்பவர்கள் துக்க தினம் அனுஷ்டிக்கட்டும்.

வெற்றி, தோல்வி, பயங்கரவாதம், அகிம்சை என்பன அவரவர் கண்ணோட்டத்தைப் பொறுத்து தான் உள்ளது.

ஈழத் தமிழர்கள் இன்று சுயநிர்ணய உரிமையற்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். எமக்கு சுயநிர்ணய உரிமை தந்தால் ஏனைய சமூகங்களுடன் இணைந்து வாழ நாம் தயார்.

எமது உறவுகள் ஆத்மா சாந்தியடைய வேண்டும் எனவும் இந்நினைவு நிகழ்வு ஒவ்வொரு வருடமும் அனுஷ்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இவ் நினைவு நிகழ்வில் பலநூற்றுக் கணக்கான மாணவர்களும் ஒரு சில விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர். (எ-4)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கலையும் வடிவமைப்பும்
3-ம் வருட மாணவர்களின்

## காண்பியக் கலைக்காட்சி

பிரவேசம் இலவசம்

கலைக்கூடம்
கலைப்பீட புதிய கட்டிடத் தொகுதி, யாழ்.பல்கலைக்கழகம்
இன்று (18.05.2013) இறுதி நாளும்; ஓவிய விற்பனையும் நடைபெறும்.
(சி-3359)

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி பகுதியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 6181216
(2663)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurii@yahoo.com,
valampurijaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அகத்தூய்மை

''எப்போதும் தூய்மையாக இருப்பது தான் நல்லது'' என்று ஒருவர் சொன்னார்.

''நான் அப்படித்தான் சேர் இருக்கிறேன்! தினமும் மூன்று வேளை சோப்பு போட்டு குளிக்கின்றேன்'' என்றார் இன்னொருவர்.

''உடல் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது சேர்! மனமும் நலமாக இருக்கவேண்டும்'' என்றார்.

''மனதை சுத்தப்படுத்துவதற்கு என்ன சோப் போடலாம்?'' என்று கேட்டார் இவர்.

''ஆன்மீகம்'' என்ற சோப்புதான் அதற்கு பொருத்தமானது. ஆன்மாவை மேம்படுத்துவதற்கு ஒரு முயற்சிதான் ஆன்மீகம்.

அந்த முயற்சியை அடைய என்ன செய்ய வேண்டும்?

மனதினுள் அடைந்துகிடக்கும் வேண்டாத விருந்தாளிகளை வெளியேற்ற வேண்டும். முக்கியம் ''பொறாமை'' என்றவரை அதிரடியாக வெளியேற்ற வேண்டும்.

இவர் நமது மனதினுள் குடியிருக்கும் வரைக்கும் நிம்மதியாக இருக்கமுடியாது.

ஒரு குருநாதர் இருந்தார். அவரிடம் இரு சீடர்கள் இருந்தார்கள். இந்த இருவரும் ஆரம்பத்தில் ஒருவருக்கொருவர் நல்ல முறையில் தான் பழகிக் கொண்டிருந்தார்கள்.

காலம் கடந்த நிலையில் இந்த இருவரில் ஒருவரது மனதினுள் ''பொறாமை'' என்ற விருந்தாளி அமர்ந்துகொண்டது.

குருநாதரிடம் தான் நல்ல பெயர் பெறவேண்டும். தன் நண்பன் கெட்ட பெயர் கேட்கவேண்டும் என் றொரு நப்பாசை ஏற்பட்டது.

என்ன செய்யலாம் என யோசித்தான்?

ஒரு நாள் விடியற்காலையிலே எழுந்து நேராக குருவிடம் சென்று அவர் முன்னால் நின்று, ''குருவே என்னைப் பாருங்கள். நான் எவ்வளவு விரைவாக எழுந்து குளித்து உங்களது வணக்கத் திற்காக காத்து நிற்கிறேன். ஆனால் இவன் இன்னமும் கண்விழிக்கவில்லை. தூங்கிக் கொண்டேவிடியாமுகத்துடன்இருக்கின்றான்'' என்று கூறினான்.

குருநாதர் நிமிர்ந்து பார்த்து விட்டு கூறினார்.

''அப்படியா?'' அப்படியென்றால் நீயும் அவனை மாதிரியே தூங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே என மிகவும் பொறுமையாகச் சொன்னார்.

''என்ன இது – நான் எவ்வளவு தீவிரமான ஒரு விடயத்தை சொல்கின்றேன். நமது குருநாதர் மிகவும்பொறுமையாக இப்படிச்சொல்கிறாரே'' என்று மனதினுள் நினைத்தான்.

ஆச்சரியமாக அவரைப் பார்த்தான். அதற்கு குருநாதர் ''ஆமாமப்பா... நீயும் தூங்கிக் கொண்டு இருந்திருந்தால், மற்றவர்களை பற்றி குறை சொல்வதற்கு இங்கே முன்வந்திருக்கமாட்டாய் அதனால் தான் அப்படிச் சொன்னேன்?'' என்று கூறினார்.

சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அப்போதுதான் அர்த்தம் புரிந்தது.

''பொறாமை'' என்ற விருந்தாளியை மனதிலே இருந்து விரட்டியடித்தான். இப்போது தனது மனம் சுத்தமாக இருப்பதை உணர்ந்து கொண்டான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்றில் தேர்தல் நடைபெறும் சாத்தியம்

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பு நடத்தப்படக் கூடிய வாய்ப்புள்ளதாக தேர்தல் தலைமைச் செயலக பிரதி ஆணையாளர் (நிர்வாக) எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில்,

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடத்தப்படலாம் என எதிர்பார்க் கப்படும் வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்குமுன்பாகமுல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட புதுக்குடியிருப்பு, கரைதுறைப் பற்று ஆகிய இரண்டுபிரதேச சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படக் கூடிய வாய்ப்புள்ளது.

இந்த இரண்டு சபைகளைத் தவிர நாட்டிலுள்ள ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் இடம்பெற்று விட்டன. ஆனால் மீள் குடியேற்றம் இடம் பெறாத நிலை காணப்பட்டதனால்தான் இந்த இரண்டு சபைகளுக் கான தேர்தல் இடம் பெறவில்லை.

மேலும் குறித்த இரண்டு சபைகளுக்கான தேர்தல் நடத்துவதில் நீதிமன்றத் தலையீடு உள்ளதால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

நீதிமன்றத்தினால் குறித்த இரண்டு சபைகளுக்கான தேர்தலையும் நடத்துமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டால் உடனடியாக தேர்தல் நடத்தப்படும். அதற்கு தேர்தல் திணைக் களம் தயா ராகவேயுள்ளது.

அத்தோடு ஜுன் மாதம் 4ஆம் திகதி குறித்த இரண்டு சபைகளுக்கான தேர்தல் நடத்துவது தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதன் போது தீர்ப்பு வழங்கப்பட்டால் வடக்குமாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக இந்த இரண்டு சபைகளுக்கான தேர்தல் நடத்தப் படும். அதற்கான சகல ஏற்பாடுகளும் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கும் இதற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் வட மாகாண பிரதித் தேர்தல் ஆணையாளர் சி.அச்சுதனும் கலந்து கொண்டார். (அ-6)

# யார் எறிகணைத் தாக்குதலை நடத்தினார்கள் என்பது தெரியாது

## நாமல் எம்.பி.தெரிவிப்பு

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது யார் எறிகணைத் தாக்குதலை நடத்தினார்கள் என்பது தெரியாது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பொதுமக்கள் நிலைகள் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து சர்வதேச ஊடகமொன்று கேள்வி எழுப்பியிருந்தது. இந்த கேள்விகளுக்கு பதிலளித்த போது நாமல் ராஜபக்ச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அரசாங்கப் படையினரா அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளா குண்டுத் தாக்குதல் நடத்தினார்கள் என்பது சரியாகத் தெரியாது என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தெற்கில் பாரியளவில் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தியுள்ள அவர் பாடசாலைகள், வங்கிகள் உள்ளிட்ட பல்வேறு நிலைகள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். வடக்கு மக்கள் மட்டுமின்றி நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் யுத்தம் காரணமாக துயரங்களை அனுபவித்துள்ளனர். சண்டேலீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டதனை இந்த நாட்டில் எவரும் அனுமதிக்கவில்லை எனவும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடத்தல்கள் மற்றும் காணாமல்போதல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 90 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-120 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 | 80 |
| தக்காளி | 60 | 80 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 60 | 60 |
| கோவா | 120 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 120 | 120 |
| பூசணி | 40 | 40 | 40 | 60 |
| புடோல் | 40 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 120-180 | 120-160 | 120-200 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | -- | 100 |
| பயற்றங்காய் | 130 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 140 | 140 | 140 |
| பீற்றூட் | 60 | 70 | 80 | 120 |
| கறிமிளகாய் | 60 | 90 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 600 | 400 |
| போஞ்சி | 120 | 120 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 80 | 50 | -- |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 60 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 45-50 | 40-45 |
| இராசவள்ளி | 100 | 80 | 120 | 120 |

# இராசி பலன்

**18.05.2013**
**(வைகாசி 04, சனிக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு**
**அட்டமி மாலை 6.42 மணிவரை**
**மகம் பின்னிரவு 1.29 மணிவரை**
**இராகுகாலம் 8.53-10.53 மணிவரை**
**சுபநேரம் 2.53-4.23 மணிவரை**
**அட்டமி- நவமி**

**மேடம்** பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றுவீர்கள், சந்திப்புகளால் சந்தோசம் கிடைக்கும் நாள், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**இடபம்** தாய் வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், காலை நேரத்திலேயே காதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** வருமானம் திருப்தி தரும், கோயில் தொண்டுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், இழுபறியாக இருந்த பிணக்குகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, கொடுக்கல் வாங்கல்களை சீர் செய்து கொள்வீர்கள்.

**கடகம்** செய்தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றமுண்டு, குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**சிங்கம்** குடும்ப சுமை கூடும், நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள். ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**கன்னி** வெளியூர்ப் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், இஷ்ட தெய்வத்தை வழிபட்டு காரியம் சாதிக்க வேண்டிய நாள், தொழிலில் பயனாளிகளிடம் விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவார், தொழில் வளர்ச்சி மேலோங்கும், தேவைகள் பூர்த்தியாகும், முயற்சிகள் கைகூடும் நாள், குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், பயணங்களால் பயன் கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவுக்கு வரும்.

**தனுசு** குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், திடீர் பயணங்களால் அனுகூலமுண்டு.

**மகரம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள் சிலர் பாராட்டுவது போல விமர்சிக்கலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், போசன சுகமுண்டு, பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு

**மீனம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய்யும் தொழில் மேன்மையுண்டு.

**வளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி மகா சங்கத்தினால் மக்களுக்கு பல்வேறு உதவிகள்

(கரணவாய்)

கரவெட்டி சமுர்த்தி மகா சங்கத்தினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கரவெட்டி பிரதேச செயலகத்தில் வைத்து பல உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

அதில் 2014 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கும் நெல்லியடி பகுதியைச் சேர்ந்த 39 மாணவர்களுக்கும் துன்னாலை பகுதியைச் சேர்ந்த 33 மாணவர்களுக்கும் ஆயிரம் ரூபா வீதம் காசோலைகள் வழங்கப்பட்டன.

அத்துடன் 2013 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 48 மாணவர்களுக்கும் நெல்லியடி பகுதியைச் சேர்ந்த 36 மாணவர்களுக்கும் துன்னாலை பகுதியைச் சேர்ந்த 23 மாணவர்களுக்கும் ஆயிரம் ரூபா வீதம் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

மலசலகூடம் அமைப்பதற்கு உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 10 பேருக்கும் நெல்லியடி பகுதியைச் சேர்ந்த 5 பேருக்கும் துன்னாலை பகுதியைச் சேர்ந்த 14 பேருக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட துன்னாலை பகுதியைச் சேர்ந்த 48 மாணவர்களுக்கும் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 47 மாணவர்களுக்கும் நெல்லியடி பகுதியைச் சேர்ந்த 49 மாணவர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 3 பேருக்கும் நெல்லியடி பகுதியைச் சேர்ந்த 3 பேருக்கும் துன்னாலை பகுதியைச் சேர்ந்த 3 பேருக்கும் துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. (அ-3-60)




நன்றி: ஐலண்ட்

# சுகுணரதி மற்றும் நிஷாந்தனுக்கு எதிராக வழக்கு தொடரப்படும்

## யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெறுகின்ற கலாசார சீரழிவுகள் தொடர்பில் சட்டத்திற்காக நடவடிக்கை எடுக்கப்படுமே தவிர கலாசாரத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது.

யாழ்ப்பாணத்தில் கலாசாரம் உயர்ந்தது என்று கூறுகின்றீர்கள். இங்குதான் தந்தை தனது மகளை வன்புணர்வு செய்யும் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிஹேர தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.நகரில் யாழ்ப்பாணப் பிரதேச செயலரினாலும் ஊடகவியலாளர்கள் சிலரினாலும் சட்டத்திற்கு முரணான வகையில் விருந்தினர் விடுதி ஒன்று அண்மையில் முற்றுகையிடப்பட்டது.

அங்கு நடைபெற்றது விபச்சாரம் என கூறப்பட்டது. எனினும் அங்கு விபச்சாரம் நடைபெற்றமைக்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை. ஒரு ஜோடி தாமாக விரும்பியே அங்கு தங்கியிருந்தனர். அதற்கு எதிராக நாம் நடவடிக்கை எடுக்க முடியாது.

இதற்கு நாம் தனியே சட்டத்தை மட்டும் நோக்க முடியாது. தமிழர்களாகிய எமது கலாசாரத்திற்கு ஏற்றவாறும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என ஊடகவியலாளர்களினால் வலியுறுத்தப்பட்டபோது அதற்கு பதிலளித்த சமன்சிஹேர நீங்கள் கூறுவது போல் இங்கு பெரிதாக கலாசாரம் இல்லை. இங்குதான் தந்தை தனது மகளையே வன்புணர்வு செய்யும் கொடுமை இடம்பெறுகின்றது.

கலாசாரம் சீரழிகின்றது என்பதற்காக நாம் நடவடிக்கை எடுக்க முடியாது. சட்டத்திற்கு ஏற்பவே நாம் நடவடிக்கை எடுக்க முடியும்.

சட்டத்திற்கு முரணாக செயற்பட்ட யாழ்ப்பாணப் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரத்திற்கு எதிராகவும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் நிஷாந்தனுக்கு எதிராகவும் வழக்கு தொடரவுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் 30 வருடங்களுக்கு முன்பு ஒரு கலாசாரமும் தற்போது ஒரு கலாசாரமும் காணப்படுகின்றது.

இக் கலாசார சீரழிவுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியாது. வேண்டுமென்றால் நீங்கள் நடவடிக்கை எடுங்கள். நாங்கள் ஆதரவு தருகின்றோம்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் செய்தது தவறு என யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கூறியுள்ளார்.

பதிவு செய்யப்படாத விடுதியை மூடுவதற்கு நகர சபைக்கு அதிகாரம் உண்டு. அதனை அவர்கள் தான் செய்ய வேண்டுமே தவிர பொலிஸார் செய்ய முடியாது.

பொலிஸார் தமிழர், சிங்களவர்கள் என பாகுபாடு காட்டுவதில்லை என்ற அவர், யாழ்ப்பாணக் கலாசாரம் என கூறுகின்றீர்கள் இங்குதான் மோசடிகள் அதிகம் இடம்பெறுகின்றது என கூறி அமர்ந்தார். (அ-4)

# வடமாகாண அதிபர்கள் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அதிபர்கள் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் செ.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின்போது வடமாகாண கல்வி நிலைமைகள் பற்றிய கலந்துரையாடலும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் வடமாகாணத்திலுள்ள அனைத்து தரம் பெற்ற அதிபர்களையும் கலந்துரையாடலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண அதிபர்கள் சங்க செயலாளர் அ.அகிலதாஸ் அறிவித்துள்ளார். (அ)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிழக்கு அருள்மிகு ஸ்ரீமகமாரி அம்பாள் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக நிகழ்வை தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று இறுதிநாள் அன்று சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (அ)

# சந்தை அமைக்க நிதியொதுக்கீடு

(கரணவாய்)

நெல்சிப் திட்டத்தின் கீழ் நெல்லியடியில் 6 அரை கோடி செலவில் புதிய சந்தை மற்றும் அதை அண்டிய வாய்க்கால் என்பன அமைக்கப்படவுள்ளன.

கடந்த 15 ஆம் திகதி கரவெட்டி பிரதேச சபையில் நடைபெற்ற மாதாந்த கூட்டத்தில் புதிய சந்தை மற்றும் வாய்க்கால் அமைப்பதற்கு பிரதேச சபை உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சந்தையில் 10 கடைகளே உள்ளன. பத்துக் கடை உரிமையாளர்களையும் தற்காலிகமாக வேறு இடத்தில் வியாபாரம் செய்யுமாறு தெரிவித்து முற்றாக இடித்து புதிய சந்தைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இவ்வாறு புதிதாக சந்தைக் கட்டடம் அமைப்பதன் மூலம் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் பயன்பெற முடியும். (அ-3-60)




# சட்டவிரோத மின் பாவனையை தடுக்க நடவடிக்கை எடுங்கள்

(கொடிகாமம்)

கொடிகாம சந்தை பின் வீதியிலுள்ள பகுதியில் சட்டவிரோதமாக எடுக்கப்படுகின்ற மின்சார நடவடிக்கையை தடுப்பதற்கு மின்சார சபையினர் இப்பகுதியில் சில மாற்று வழிகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பகுதியில் சுமார் 30 குடும்பங்கள் மின்சாரத்தைப் பெற்று வருகின்றனர்.

இவர்களில் சிலர் திருட்டு மின்சாரத்தைப் பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக காங்கேசன்துறை வீதியிலுள்ள இலங்கை மின்சார சபைக்கும் சுன்னாகம் மின் பொறியியலாருக்கும் கடிதம் ஒன்றை 9 பேர் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

சந்தை வீதி கொடிகாமம் பகுதியில் அழுத்தம் குறைந்த (Single Line) மின்சாரமே கிடைக்கிறது. இங்கு பெரிய காளிகோவில், மரக்காலை மற்றும் பல வீடுகள் காணப்படுகின்றன. இதனால் இப்பகுதி மின்பாவனையாளர்களின் மின்சாரப் பொருட்கள் அடிக்கடி பழுதடைகின்றன. அவ்விடத்தில் மின்சாரக் கம்பிகள் பதிவாக காணப்படுவதாலேயே திருட்டு மின்சாரம் பெறுகின்றனர்.

அத்துடன் மின் கம்பிகளுக்கு அருகில் மரம், செடிகள் வளர்ந்து காணப்படுவதுடன் இவ்விடத்தில் பாடசாலை மற்றும் பல்கலைக் கழகம் செல்கின்ற மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின் பாவனையாளர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளை நீக்குவதற்கு குறைந்த Single Line மின்சாரத்தை நீக்கி Three Fuse Line ஐ Four Coerce Wire ஊடாக மின்சாரத்தை வழங்கி உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ)




இறுதிக்கட்ட போரின் போது உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் முகமாக நேற்றையதினம் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட நினைவு நிகழ்வின்போது... (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையற்ற விதத்தில் செயற்பட்டால் கடும் விளைவுகள் ஏற்படும்

## போக்குவரத்து அமைச்சர் எச்சரிக்கை

முறையற்ற விதத்தில் பயணிகளின் வாழ்வுடன் விளையாட முயன்றால் கடும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் எனவும் புதிதாக பேருந்து அனுமதிப்பத்திரங்கள் வெளியிட வேண்டி ஏற்படும் எனவும் தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

பயணிகளுக்கு சிறந்த சேவை வழங்குவது பேருந்து உரிமையாளர்களின் பொறுப்பு என்று தெரிவித்த அவர், கம்பனி சட்டத்தின் கீழ் பேருந்து சங்கங்கள் தம்மை பதிவு செய்துள்ளனவா என விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தான் அமைச்சின் செயலாளருக்கு பணித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சொகுசு பேருந்து சேவை தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளை அடையாளங் கண்டு தீர்ப்பது தொடர்பாகவும் சிறந்த பேருந்து சேவையை வழங்குவது தொடர்பாகவும் நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் விசேட பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

பயணிகளே எமது பாவனையாளர்கள். அவர்களுக்கு சிறந்த சேவை அளிப்பது எமது பொறுப்பாகும். பேருந்து சேவையின் தரத்தை மேம்படுத்த உரிமையாளர்கள் முயன்று வருகின்றனர். தனியார் மற்றும் இ.போ.ச. இணைந்த கூட்டு நேர அட்டவணை பேருந்து சேவைக்கு சில தரப்பினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

கூட்டு நேர அட்டவணையை அமுல்படுத்துவதன் மூலமே பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும். கூட்டு நேர அட்டவணை அமுல்படுத்தப்படாததாலேயே பேருந்துகளிடையே போட்டி ஏற்படுவதோடு மோதல்களும் ஏற்படுகின்றன.

சகல தரப்பினருடைய இணக்கப்பாட்டுடன் கூட்டு நேர அட்டவணையை முன்னெடுக்க உள்ளோம். தேவையற்ற இடையூறுகளை பயணிகளுக்கு ஏற்படுத்தும் வகையில் பேருந்து உரிமையாளர்கள் செயற்பட்டால் வேறு நபர்களுக்கு புதிதாக வாகன சேவை அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டி நேரிடும் என்றார்.

இந்த நிகழ்வில் நாட்டில் பல பகுதிகளில் இருந்தும் அநேக சொகுசு பேருந்து உரிமையாளர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு: T.P.: 021 321 0815, 021 567 1540



**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-3199)



**கல்யாண மாலை**

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து(குருகுலம்)
நட்சத்திரம்: ரோகிணி 2
உயரம்: 5' 6"
கி.பா : 26 4 இல் செவ்
தகைமை/தொழில்: HNDA உதவி கணக்காளர்
தொ.இ:B1805

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம்: ரேவதி 2
உயரம்: 5' 5"
கி.பா :20.25
தகைமை/தொழில்: MBBS வைத்தியர்
தொ.இ: B1806

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: பூசம் 3
உயரம்: 5' 10"
கி.பா :44
தகைமை/தொழில்: A/L தனியார்
தொ.இ: B1807

பிறப்பு: 1978 இந்து (V)
நட்சத்திரம்: மகம் 4
உயரம்: 5' 6"
கி.பா :
தகைமை/தொழில்: A/L சுவிஸ்
தொ.இ:B1810

இவர்களுக்கு மணமகன் தேவை


பிறப்பு: 1966 இந்து(குருகுலம்)
நட்சத்திரம்: உத்தராடம் 3
உயரம்: 5'
கி.பா : --
தகைமை/தொழில்: A/L
தொ.இ:G1815

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம் 2
உயரம் : 5'
கி.பா : 50
தகைமை/தொழில்: O/L
தொ.இ:G1818

பிறப்பு: 1978 இந்து (V)
நட்சத்திரம்: மூலம் 1
உயரம்: 5'
கி.பா : --
தகைமை/தொழில்: O/L
தொ.இ:G1820

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம் 2
உயரம்: 5' 6"
கி.பா : 16 4இல் செவ்
தகைமை/தொழில்: BA, MBA
தொ.இ: G1822

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

***பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு, வேதாந்த மடத்தின் ஏற்பாட்டில் சின்மயாமிஷன் ஆச்சிரமம், யாழ்ப்பாணம் நடத்தும் செயல் திறம்பட வேண்டுமா? கீதை தரும் ஆலோசனைகள் (ஸ்ரீமத் பகவத்கீதை அத்தியாயம்-III)***

***ஞானயாக்ஞம் 18.05.2013 சனிக்கிழமை முதல் 22.05.2013 புதன்கிழமை வரை தினமும் மாலை 6.00 மணிமுதல் 7.30 மணிவரை இல.18, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது.***

வழங்குபவர்:- பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள்
வதிவிட ஆச்சாரியார்,
சின்மயாமிஷன் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு :- சின்மயாமிஷன் ஆச்சிரமம்,
இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.:-021 2223447

*அனுமதி இலவசம்*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்....!!* (இ)

# புலம் பெயர் தரப்புடன் பேச்சு நடத்தினோம்

*பொதுபல சேனா தெரிவிப்பு*

விடுதலைப்புலிகளின் சிறந்த புலம் பெயர் தரப்பினருடனேயே தாம் நோர்வேயில் பேச்சுவார்த்தைகளை நடத்தியதாக பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். தாம் சிறந்த புலம்பெயர் பிரதிநிதிகளிடம் ஏற்படுத்தி கொண்ட இணக்கப்பாடுகளை புலம்பெயர் புலிகள் சீர்குலைத்து விட்டனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் இந்த நாட்டில் எந்தளவுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை நாம் அறிவோம். இதனால் நாங்கள் நேரடியாக புலிகளுடன் தொடர்பில்லாத பிரிவினை வாதத்துடன் தொடர்பில்லாத புலம்பெயர் குழுவொன்றுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த நாங்கள் தீர்மானித்தோம் .அந்த குழுவுடன் இணைந்து செயற்பட முடியுமாக இருந்தால் கிடைக்கும் நிதியுதவி களை நேரடியாக மக்களுக்கு வழங்கும் வேலைத் திட்டம் ஒன்றுக்கு செயற்பட முடியும்.

எனினும் துரதிர்ஷ்டவசமான உண்மையான புலிகள் சிறந்த புலம் பெயர் பிரதி நிதிகளுடனான வேலைத்திட்டத்தை எதிர்த்தனர். அத்துடன் அந்த முன்னெடுப்புகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டன எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)


**சமாதானப் பெருந்தொனி**

வாருங்கள்!! இலவசம்!!

கவலை, கண்ணீர்,
தீராத வியாதி,
பிசாசின்பிடி, வியாபாரத் தோல்விகள்
பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து

**இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!**

இடம்: பொதுவிளையாட்டு மைதானம்,
முல்லைத்தீவு
(மக்கள் வங்கி முன்பாக)

காலம் : 17,18,19 வைகாசி 2013
(வெள்ளி, சனி, ஞாயிறு)
நேரம் : தினமும் மாலை 4.00மணி

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."
(மத்தேயு 11:28)

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
1ம் வட்டாரம், வேணாவில், புதுக்குடியிருப்பு.

(சி/3345)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிப்பாரற்று காணப்படும் கைத்தொழில் பயிற்சி நிலையம்

(பூந்தோட்டம்)

வடமாகாண தொழிற்றுறை திணைக்களத்தினால் வவுனியாவில் நடத்தப்பட்டு வந்த கைத்தொழில் தொழிற்பயிற்சி நிலையம் கவனிப்பாரற்று காணப்படுவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.




வவுனியா மாவட்டத்திற்கென அமைக்கப்பட்ட இப் பயிற்சி நிலையம் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக பயிற்சிகள்ஏதும்இடம்பெறாது பயிற்சி நிலைய கட்டடம் இருக்கும் பகுதி பற்றைகளால் சூழ்ந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கும் இப் பகுதி மக்கள் இக் கட்டடம் அமைந்துள்ள பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் கயிறு திரித்தல், கைவினை பயிற்சிகள் இடம்பெற்று வந்த நிலையில் எவ்வித காரணமும் இன்றி இப் பயிற்சி நிலையம் மூடப்பட்டதாகவும் அதன் பின்னர் இந் நிலையத்தில் எவ்வித பயிற்சியும் இடம்பெறுவதில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இப் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ள பகுதியில் பல இளைஞர், யுவதிகள் தொழிற்பயிற்சியை பெறமுடியாதுள்ள நிலையில் இப்பயிற்சி நிலையம் மூடப்பட்டுள்ளமையானது கவலையளிப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் இப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அறிவித்துள்ளபோதிலும் எவ்வித பலனுமின்றி காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

எனவே, இப் பயிற்சி நிலையத்தை செயற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட வடமாகாண தொழிற்றுறை திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் இல்லையேல் அப்பகுதி கிராம அபிவிருத்தி சங்கத்திடம் இப் பயிற்சி நிலையத்தை கையளிக்குமாறும் இப் பகுதி மக்கள் கோருகின்றனர்.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட கைத்தொழிற்றுறை அதிகாரியிடம் வினவிய போது, மேற்படி பயிற்சி நிலையத்தில் நீர் வசதி யின்மையால் மூடப்பட்டுள்ளதாகவும் எனினும் அதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற் கொள்ளப்பட்டுள்ளமையினால் மிக விரைவில் அதனை திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (அ-2-250-266)

# பணமோசடியில் ஈடுபட்டவர் கைது

(கொழும்பு)

அமைச்சர்களின் செயலாளர் மற்றும் பொலிஸ் பிரதானி என்று தெரிவித்து, பல்வேறு தரப்பிடம் இருந்து சுமார் 30 கோடி ரூபாவை மோசடி செய்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட அவர் கண்டியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சொகுசு வாகனங்களை வாடகைக்கு பெற்று அவர் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் உள்ள வர்த் தகர்களிடம் இருந்து பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்து அவற்றிற்கு போலியான காசோலைகளை வழங்கி, இவ்வாறு மோசடியில் ஈடுபட்டமையும் விசாரணைகள் ஊடாக வெளிவந்துள்ளன. (அ-2)

# பிரதமரிடம் மருந்து எடுக்க முயன்ற நபருக்கு சரீர பிணை

அயலவர்களினால் செய்யப்பட்ட சூனியத்தினால் தனக்கு பைத்தியம் எற்பட்டுவிட்டதாகவும் அதற்காக பிரதமரிடம் மருந்து எடுக்க வேண்டும் எனக் கூறிக்கொண்டு அலரிமாளிகைக்குள் நுழைய முயன்ற நபரை நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்துள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயமான அலரிமாளிகைக்குள் 2002 ஆம் ஆண்டு நுழைய முயன்ற அநுராதபுரத்தைச் சேர்ந்த சமன்குமார ரத்னசிறி என்பவரே நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் 11 வருட பிடியாணைக்கு பின்னர் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜரானார்.

பிடியாணையை இரத்துச் செய்த நீதவான் திலின கமகே சந்தேக நபருக்கு மனநோய் எனக் கூறி 15 ஆயிரம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார். (அ-2)

# யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நான்காம் கட்ட உள்நாட்டுப் போரின் போது உயிர்நீர்த்தவர்களை நினைவு கூரும் நினைவேந்தல் நிகழ்வு இன்று பிற்பகல் 5 மணிக்கு 30, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ளதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இப் போரில் இறந்தவர்களுக்காக ஒவ்வொருவரும் தமது நன்றி உணர்வுகளை பகிர்ந்திட ஒன்று கூடுவோம் என அழைப்புவிடுத்துள்ள அவர் இவ்விடயம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

தமிழின விடுதலைக்காக இற்றைவரை இலட்சக்கணக்கானோர் தம் உயிரைத் தியாகம் செய்துள்ளனர்.

குறிப்பாக நடைபெற்ற போரின் இறுதிக் கால கட்டத்தில், 2009 மே 18 காலப்பகுதியில் பலியானவர்களில் காணாமல் போனவர்களின் உறவுகள், தமிழ் உணர்வாளர்கள், உறவுணர்வோடும், நன்றி உணர்வோடும் அந்த ஆத்மாக்களை நினைவுகூர்ந்து ஆத்ம



சாந்திப் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர்.

இந்த வகையில் தமிழ் உறவுகளும் உணர்வாளர்களும் ஆண்டுதோறும் மே 18 ஆம் நாளில் பொது இடங்களில் ஒன்று கூடி உயிர்த்தியாகம் செய்தோரை நினைவு கூரும் வழக்கத்தையும் கடைப்பிடித்து வருகின்றனர். இச் செயலானது உயர் நன்றிக் கடனாகவும் தமிழரின் உயர் நாகரிகமாகவும் கருதப்படுகின்றது. இவ்வாண்டு இந்நிகழ்ச்சி யாழ்ப்பாணத்திலும் இடம் பெறுகின்றது.

தமிழ் இன உறவுகளும், தமிழ் உணர்வாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பிரார்த்தனையில் ஈடுபடுமாறு அழைக்கின்றோம் என குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம்நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இன்று சனிக்கிழமை சுன்னாகம், மல்லாகம், மாவிட்டபுரம், கீரிமலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, தட்டார்தெரு தொடக்கம் முட்டாஸ்கடைச் சந்தி வரையுள்ள பிரதேசமும் மனோகரா பிரதேசம், புன்னாலைக் கட்டுவன், புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, வடமராட்சி பிரதேசத்தின் வல்லை முதல் மந்திகை வரையுள்ள பிரதேசங்களிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி விஞ்ஞானபீடப் பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வைமன் வீதி, கோவில் வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்டம், பழைய பூங்கா வீதி, அத்தியடி புது வீதி சோமசுந்தரம் அவனியூ, முலவைச் சந்தி, ஆஸ்பத்திரி வீதி, கச்சேரி, நல்லூர் வீதி, கச்சேரியடி, புங்கன் குளம், ஈச்சமோட்டை பிரதேசம், பாஷையூர், குருநகர், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி பிரதேசம் கொன்வேன்ட் பிரதேசம், பிரதான வீதி, அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டைமானாறு வீதி பிரதேசம், குஞ்சர்கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படுமென அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டைமானாறு வீதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் அறிவித்துள்ளார். (அ-2)

# யுத்தத்தின்போது கைவிடப்பட்ட வாகன இலக்கங்கள் வருமாறு

போர் நடவடிக்கையின் போது கைவிடப்பட்ட வாகனங்களின் விபரங்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

எனவே, பின்வரும் இலக்கங்களையுடைய வாகனங்களின் உரிமையாளர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய மூல ஆவ ணங்களுடன் (பொலிஸ் அறிக்கை உட்பட) மாவட்டச் செயலகத்திற்கு சமுகம் தருமாறு முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேத நாயகன் அறிவித்துள்ளார்.

வாகன இலக்கங்கள் இல்லாத வாகனங்களுக்கு இயந்திர இலக்கமும் வாகன இலக்கம், இயந்திர இலக்கம் இல்லாத வாகனங்களுக்கு அடிச் சட்ட இலக்கமும் பிரசுரமாக்கப் படுகின்றது.

**வாகன இலக்கம்**

MO-6385, HZ-8590, JS-0048, HK-0820, MO-6697, TF-3769, JO-6180, MO-3845, UB-0353, ME-2929, MV-1470, MK-0696, GW-3454, UH-6292, MO-6750, MA-9020, TW-7697, HT-5392, JL- 4739, HT- 5009, 6121, ML-9183, ME-3421, HV-3035, GN-6561, MB-4483, HE-9777, HW-6288, MN-7401, 8 sri - 9683, HE-7202, TS-8106, MH-8399, ME-0115, 300-8083.

**அடிச்சட்ட இலக்கம்**

CH-0759/A 4531, MD 90-2120377.

**இயந்திர இலக்கம்**

DMMBKJ 05590, DE211-42001473, BUMBH 24262, DF 4C 51087209, A 1538, MD90E - 2128696, MD 90-2003 605, HADZE- 1005296, CE 1166 U8320938, 23776929 C, CCE 1526U 54659E, 152UA 352806D, S 32541 2734J, CE 9707UT 184080M,152UA 87792D, 152U AFA 36054D, CE 224 88U 705068J, S 32589671.

(அ- 267)

## இராணுவ வாகனம்

# தடம்புரண்டதில் ஒருவர் பலி; 18 பேர் காயம் !

(குருமன்காடு)


வவுனியா முகத்தான் குளப்பகுதியில் வீதியால் சென்ற இராணுவ டிரக் வண்டி தடம் புரண்டத்தில் இராணுவ வீரர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானதுடன் 18 இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் வவுனியா வைத்தியசாலையிலும் 16 பேர் செட்டிகுளம் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகள் செட்டிகுளப் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ-2-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முன்னைநாள் பீடாதிபதி உயர்திருS.K. யோகநாதன் அவர்களின் மணிவிழா சிறப்புமலர்



## ஆசிச்செய்தி



திருவாளர் S.K.யோகநாதன், தலைவர், கல்வியியற் கல்லூரி, கோப்பாய் அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு யோகநாதம் என்னும் மணிவிழாச் சிறப்பு மலர் வெளியிடப்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய, பாராட்டுக்குரிய விடயம். திரு. யோகநாதன் ஐயா அவர்கள் நல்ல பண்பான சமூக சிந்தனை கொண்ட, ஆன்மீக நோக்குடைய அன்பான ஓர் ஆசான். பல ஆசான்களை உருவாக்கியவர். கல்வியியற் கல்லூரியின் நிர்வாகத்தை சிறப்பாக நடத்திக்கொண்டிருப்பவர். அனைத்து நிகழ்வுகளையும் அழகாக நடத்துபவர்.

எமது சமூகத்திற்குப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களில் குறிப்பிடத்தக்கவர். எமது சின்மயா மிஷனோடும் தொடர்புடையவர். அப்படிப்பட்ட பெருந்தகை பல்லோரும் போற்ற தீர்க்காயுளோடும் சுகதேகத்தோடும் வாழ எல்லாம் வல்ல இறைவனையும் குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றேன். யோகநாதம் மணிவிழா சிறப்பு மலர் சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றேன், ஆசி வேண்டுகின்றேன்.

இறை பணியில்
பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா, வதிவிட ஆச்சாரியார், சின்மயாமிஷன்-யாழ்ப்பாணம்.

## அர்ப்பணிப்புடனான செயற்பாடுடைய பீடாதிபதி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு.எஸ்.கே. யோகநாதன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச்செய்தியை வழங்குவதிற் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரிக்குச் சேவையாற்ற வந்ததிலிருந்து அவர் முகங்கொடுத்த சவால்கள், வெற்றிகள், வேதனைகள், கடின உழைப்பு, விடாமுயற்சி, அர்ப்பணிப்பு, உறுதியான செயலாற்றுகைகள் அவரைச் சிறந்த கல்விச் சேவையாளராக உருவாக்கியுள்ளது. கல்லூரியின் நீர்வடிகால் தொடக்கம் கட்டடங்கள், பூமரங்கள், பயன்தரு தென்னை, மா, வாழை போன்ற மரங்கள் ஒவ்வொன்றும் திரு. S.K..யோகநாதன் அவர்களின் அர்ப்பணிப்புடனான செயற்பாடுகளை எடுத்தியம்புகின்றன.

திரு.S.K.யோகநாதன் அவர்கள் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், கல்விசாரா அலுவலர்கள், நண்பர்கள், உறவினர், அயலவர் என்று அனைவர் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் நலனிலும் அக்கறை கொண்டவர், அனைத்து மதங்களையும் மதிக்கும் உயர் பண்பு கொண்டவர். சிறந்த வழிகாட்டி, அவரின் செயற்றிறன் மிக்க வழிகாட்டலில் இக்கல்லூரி தலைநிமிர்ந்து நிற்கின்றது. பெரியவரின் வாழ்வு மென்மேலும் சிறப்பாக அமைவதுடன் மணிவிழா சிறப்புற நடைபெறவும் மணிவிழா மலர் புதுப் பொலிவுடன் வெளிவரவும் எல்லாம்வல்ல வித்தக விநாயகரும் முடிமன்னர் வைரவரும் அருள்பாலிப்பாராக. மேலும் கல்விச்சேவை தொடர்ந்து எமது சமூகத்திற்குக் கிடைக்கவும் அனைத்துச் செல்வங்களையும் பெற்று வாழவும் வாழ்த்துகின்றேன்.

திரு.எஸ்.அமிர்தலிங்கம்,பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

## உயர் விழுமியங்கள் உள்ள சமூக சிற்பிகளை உருவாக்க அயராது உழைக்கும் பீடாதிபதி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு S.K. யோகநாதன் அவர்களின் பணிநயப்பினை ஒட்டி மணிவிழா அமைப்பினரால் வெளியிடப்படும் **யோகநாதம்** சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றேன்.

**தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று- (குறள்236)**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு அமைய இவர் தனது சேவைக்காலத்தில் கல்வித்துறைக்காக ஆற்றியுள்ள மகத்தான கல்விப் பணியினைச் சமூகம் என்றும் நன்றியுடன் நினைவுகூரும் என்பது பேருண்மையாகும். கல்வியும் ஒழுக்கமும் எமது இரண்டு கண்களைப்போன்றன. அவற்றினை வளர்த்தெடுத்து உயரிய சமூக விழுமியங்களும் நற்பண்புகளும் உடைய சமூகச் சிற்பிகளை உருவாக்குவதில் திரு S.K.யோகநாதன் ஆற்றியுள்ள அளப்பரிய பணி பாராட்டத்தக்கதாகும். 1982 ஆம் ஆண்டு ஆசிரியப் பணியில் இணைந்த இவர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 10 ஆண்டுகள் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் உப பீடாதிபதியாகவும் பின்னர் கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் 8 ஆண்டுகள் பீடாதிபதியாகவும் இருந்து அளப்பரிய சேவைபுரிந்து இன்று ஓய்வுநிலைக்குச் செல்கின்றார்.

நேர காலம் பாராது 24 மணிநேரமும் விடுதியில் தங்கியிருந்து கல்லூரியின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். இவர் தனது நகைச்சுவைப் பேச்சினால் மற்றோரை மதிக்கும் உயர்நிலைப் பண்புடனும் துடுக்குடனும் மிடுக்குடனும் சேவைபுரிந்து ஓய்வுநிலைக்குச் செல்லும் இவரது சேவைக்காலத்தைப் பாராட்டுகின்றேன். இவரின் ஓய்வுக் காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நீண்டகாலம் வாழ்ந்து இன்னும் பல சமூகப் பணிகளை ஆற்றவேண்டும் என எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிய வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

சி.சத்தியசீலன்,செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்

தலைவர் :
கருமத் திருதி லயன் Dr.வை.தியாகராஜா
(தலைவர் மணிவிழா அமைப்பு)
இடம் : யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபம்
காலம்:
18.05.2013 சனிக்கிழமை காலை 9 மணி

## 60ஆவது அகவையை நினைவுகூரும் பீடாதிபதி



காலத்தால் அழிவுறாது கல்விச் செல்வம். அதனைத் தான் பெற்றதுடன் வருங்கால சந்ததிக்கும் கற்றுக்கொடுக்கும் பணியில் விருப்புடன் ஈடுபட்டவர். எதிர்கால ஆசிரிய சமூகத்தை உருவாக்கும் பணியில் முக்கிய பங்கு வகித்து அதனைப் பொறுப்புடன் நிறைவேற்றுவதற்காகத் தன்னையே அர்ப்பணித்தவர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக விளங்கும் இவரை நானும் நன்கு அறிவேன்.

தான் கொண்ட மதத்திற்கு மட்டுமல்லாமல் எல்லா மதங்களையும் மதித்து வாழும் பண்புடையவர். இவர் கிறிஸ்தவப்பாடநெறியினை தற்காலிகமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் உள்வாங்கி ஆசிரியப் பயிலுநர்கள் அப்பாடநெறியை நன்கு கற்றுத்தேறவும் அங்குள்ள கிறிஸ்தவ ஆலயத்தை அழகுற கட்டிமுடிக்கவும் என்னுடன் ஆலோசித்து எடுத்த முயற்சிகளையும் நான் நன்கு அறிவேன்.

இவ்வாறு சேவை நோக்கோடு எல்லோரையும் அணுகி ஆசிரியப் பயிலுநர்களை நன்னெறியில் உருவாக்கிய திரு. S.K.யோகநாதன் அவர்கள் பாராட்டத்தக்கவர்.

இவர் தனது 60ஆவது அகவையை நினைவுகூரும் வேளை இவரை வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைகிறேன். வாழ்வு எனும் கொடையை இவருக்கு அளித்த இறைவன் தொடர்ந்தும் இவருக்கு நல் உடல், உள, ஆன்மீக நலன்களை வழங்கி இவரை ஆசீர்வதிக்க, இவருக்காக இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறி நிற்கிறேன்.

பேரருட் திரு இ. தோமஸ் சவுந்தரநாயகம், யாழ்.ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## மணிவிழா அமைப்புத் தலைவரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இலங்கையின் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் முதன்மையான கல்லூரியாகச் செயலாற்றி வருகின்றது. இதற்கு முன்னாள் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அவர்களின் சேவை முதன்மையானது.

சமகாலக் கல்விச் சவால்களை எதிர்கொண்டு விடாமுயற்சியுடனும் தலைமைத்துவ ஆற்றலுடனும் மனிதநேய அணுகுமுறையாலும் வெற்றிகரமான பீடாதிபதியாகச் செயலாற்றியவர் திரு.S.K.யோகநாதன். இவர் பதவியைப் பொறுப்பேற்ற காலம் பயங்கரமான யுத்தகாலம், பாதை பூட்டப்பட்டிருந்த காலம், உணவுத்தட்டுப்பாடான காலம், இப்பிரச்சினைகளைத் தீர்க்க தன்னையே அர்ப்பணித்தவர். வெளிமாவட்ட மாணவர்களை கப்பலில் அழைத்து வந்தவர். அவர்களுக்காக உணவு தேடி அலைந்தவர். மூடப்பட வேண்டிய நிலையிலிருந்த கல்லூரியை இயக்கியவர். முகிழ்நிலை ஆசிரியர்களுக்குத் தந்தையாய், தாயாய் இருந்து வழிகாட்டியவர். எதையும் எதிர்பார்க்காத எளிமையான பண்புடையவர்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியை சோலையாக்கி மைதானம் புனரமைத்தமை, பெறுமதியான பஸ் ஒன்றைப் பெற்றமை, Skype மூலம் உலகிலுள்ள கல்விக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுடன் முகிழ்நிலை ஆசிரியர்களைத் தொடர்பு கொள்ளவைத்து தரமான கற்றல்- கற்பித்தலை மேற்கொண்டமை. எம்பிரதேச ஆசிரியர் நலம் கருதி முதன் முதலாக ஆங்கிலமொழிமூல B.Ed,M.Ed பாடநெறிகளை கல்லூரிக்குக்கொண்டு வந்தமை, நோய்வாய்ப்பட்ட மாணவர்களை ஊரடங்கு சட்டம்- இரவு நேரத்திலும் தானே வாகனச் சாரதியாக வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லுதல் என ஏனைய எந்தக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதியும் செய்யாத சேவைகளைச் செய்த அவருக்கு முகிழ்நிலை ஆசிரியர்களின் பெற்றோர்களும் நாமும் இணைந்து மணிவிழாவை இதயபூர்வமாக மேற்கொண்டு இன்று உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

கருமத்திருதி லயன் வை.தியாகராஜா

## பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திரு S.K.யோகநாதன் அவர்களின மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். 1970களின் பிற்பகுதியில் பீடாதிபதி அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது மாணவனாக விளங்கினார். அவர் புவியியல் சிறப்புப் பட்டதாரி, பல்கலைக்கழகக் கல்வியின் பின் ஆசிரியப் பணிக்குள் பிரவேசித்து பல உயர்வுகளை அடைந்தார். மேலும் கல்வியிற் பல மேற்படிப்புக்களையும் பட்டங்களையும் பெற்றார். பல உள்நாட்டு, வெளிநாட்டுக் கல்விக் கருத்தரங்குகளிற் பங்குபற்றித் தன்புலமையை விருத்தியாக்கி எமது கல்விச் சமூகத்தின் மத்தியிற் பாடசாலைக் கல்வித்துறையில் ஒரு புலமையாளராக மிளிர்ந்தார்.

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் முகிழ்ந்த அவர் கோப்பாய், பலாலி, நல்லூர், திருநெல்வேலி, கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் வழிவந்த ஆசிரிய விழுமியங்களை ஒருபக்கமும் இலங்கையின் நவீன கல்வியியற் கல்லூரிகள் வழிவந்த ஆசிரிய விழுமியங்களை மறுபக்கமும் கொண்டு அவை இரண்டினையும் இணைத்துப் புதியதொரு ஆசிரிய பரம்பரையைத் தோற்றுவித்தார். மாறி வரும் கற்றல், கற்பித்தல் வகுப்புச் சூழ்நிலைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய ஆசிரியர்களை உருவாக்குவதிலும் வசதி வாய்ப்புக்கள் இல்லாத பின்தங்கிய, புறம்தள்ளப்பட்ட கிராமிய மாணவர்களின் சூழ்நிலைக்கு ஈடுகொடுத்துக் கற்பிக்கக்கூடிய, அர்ப்பணிப்புள்ள, கருணை நிறைந்த ஆசிரியர்களை என்றும் உருவாக்குவதிலும் அவர் வெற்றி கண்டவர். அவரது சாதனைகள் என்றும் கல்வி உலகில் நினைவுகூறப்படும்.

பீடாதிபதி திரு.யோகநாதன் அவர்கள் தற்போதைய பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்த பின்னர் தொடர்ந்தும் கல்விப் பணியும் சமூகப் பணியும் மேற்கொண்டு எமது சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக விளங்கவேண்டும் என வாழ்த்துகிறேன். அவரின் வாழ்வு மேலும் சிறக்க இறைவன் அருள்புரிவாராக.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாட் பேராசிரியர்/முன்னாள் துணைவேந்தர்

## ஒரு வரலாற்றுப் புருசர்

**மிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் றஹீம்**
**எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே**
**அல்ஹம் துலில்லாஹ்**



வரலாறு என்பது ஒவ்வொரு சமுதாயத்தின் உயிர்நாடி. ஒரு சமுதாயம் உயர் நிலைக்கு வருவதும் புத்துணர்வு பெறுவதும் அது தமக்கு முன்னுள்ளோரின் வரலாற்று நிகழ்வுகளைப் படிப்பதன் மூலமும் அதனை நினைவுபடுத்திப் பார்ப்பதன் மூலமும்தான் சாத்தியமாகும். தம் வரலாற்று நிகழ்வுகளை மறந்து சமுதாயம் கீழ்நோக்கி பயணிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வரலாற்றில் தடம்பதிக்க ஓர் ஆசிரியர் பீடத்தின் பீடாதிபதி ஓய்வுபெறுகின்ற நல் நிகழ்வுக்கு ஆசியுரை வழங்குகின்ற அரிய வாய்ப்பினைத் தந்தமைக்கு என் ஆசிகள்.

பீடாதிபதி யோகநாதன் ஒரு வரலாற்றுப் புருசர். இன, மத பேதத்திற்கு அப்பால் அவர் ஒரு பூரண மனிதத்துவம் நிறைந்த ஒரு மாமனிதர். அவருடன் உரையாடிய போதுதான் அவருடன் மனிதம் நிறைந்த மானிடம் பொதிந்திருப்பதைக் கண்டேன்.

தமிழ், முஸ்லிம் என்று வேற்றுமை பாராது மாணவர்களிடம் பழகுகின்ற பண்பை அவரிடத்தில் கண்டேன். அவருடைய வழிகாட்டலில் கல்வி கற்ற, கற்றுக்கொண்டிருக்கின்ற மாணவ ஆசிரிய, ஆசிரியைகள் அனைவரும் அவரது வரலாற்றுக்காலத்தை மறந்துவிடாது கற்றுத்தந்த அனைத்து ஆசான்களுக்கு நன்றியுடையவர்களாக, ஆசானை மதிக்கின்ற மேலான பண்புள்ளம் கொண்டவர்களாக வாழவேண்டும்.

அன்னாரின் சேவையைப் பாராட்டுவதுடன் அன்னவருக்கு ஆண்டவன் தேகசுகத்தையும் அன்னவருடைய ஆயுளையும் நீடித்து அருள வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வஸ்ஸலாம்.
மௌலவி எம்.ஐ.மஹ்மூத் (பலாஹி)
பேஷ் இமாம் (புதுப்பள்ளி),முஹமதிய்யா ஜும்மா பள்ளிவாசல், யாழ்ப்பாணம்.

## மணிவிழா நாயகன் திரு.S.K.யோகநாதன் அவர்களின் சுய விபரம்

பிறப்பு: 28.04.1953
பாடசாலை: யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
பல்கலைக்கழகக் கல்வி:
பேராதனைப் பல்கலைக்கழகம்- புவியியல் சிறப்பு
திறந்த பல்கலைக்கழகம்-பட்டப்பின் கல்வி டிப்ளோமா
ஆசிரியகல்வியியல் முதுகலைமாணி
மலேசியப் பல்கலைக்கழகம்- வாண்மைத்துவ ஆங்கில தேர்ச்சி சான்றிதழ் (Cer.in.Professional English
கல்விச்சேவை- ஆசிரிய சேவை
சிலாபம் சென் பெர்டோர்ற் தமிழ் மகா வித்தியாலயம்
ஆசிரிய ஆலோசகர்- சிலாபம் கல்வி வலயம்
ஆசிரிய கல்வியியலாளர் சேவை
சிரேஷ்ட விரிவுரையாளர்-
வவுனியா தேசியகல்வியியற் கல்லூரி
துறைத் தலைவர்-வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
இணைப்பாளர்-வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
உபபீடாதிபதி-வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
மேலதிக பீடாதிபதி- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
பீடாதிபதி-யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## Message from Hon. Governor, Northern Province



It is with pleasure that this message of blessing is made in connection with the celebrations of the Diamond Jubilee of Mr. S.K.Yoganathan, Rector of the National College of Education, Jaffna, who is now 60 Years of age.

The establishment of the National College of Education is a tremendous advancement in the system of education in the country. With advanced mode of training imparted and made available, the institution can take pride in producing quality teachers who are capable of moulding our children to be good citizens.

Mr.Yoganathan has contributed very much towards the raising of the standards education during the past two decades especially in the capacity of Deputy Rector of the National College of Education, Vavuniya and then as the Rector of the National College of Education, Jaffna.

Congratulations to the Organizing Committee of the Diamond Jubilee Celebrations.

May very special wishes and blessing for a Healthy Life and a Happy Retirement period!!

G.A.Chandrasiri, Governor, Nothern province

## ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி



கோப்பாய் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு S.K.யோகநாதன் அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துச் செய்தி வெளியிடுவதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திருவாளர் யோகநாதன் அவர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்து பின்னர் உபபீடாதிபதியாகப் பதவியுயர்வு பெற்று 2004ஆம் ஆண்டு கல்வியமைச்சின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மலேசியா பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறையிற் பயின்று யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் மேலதிக பீடாதிபதியாகக் கடமையாற்றினார். பின்பு கடந்த 8 ஆண்டுகளாகக் கடமையாற்றித் தனது சிறப்பான சேவையினூடாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் சென்றுள்ளார். இன்று பல புதிய கற்கைநெறிகளுடன் தனது கல்விச்சேவையை வியாபித்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. மிகவும் நெருக்கடியான காலகட்டத்திற் கல்லூரியைப் பொறுப்பேற்று பல கஷ்டங்களின் மத்தியில் கல்வியியற் கல்லூரியைத் திறம்பட நடத்தியமையை உள்ளத்திருத்தி வடமாகாண கல்விச்சமூகம் என்றும் நன்றியுடையதாக இருக்கும் என்பது எனது எண்ணம். இன்று 60 வயதைப்பூர்த்தி செய்யும் வேளையில் அவரின் அபிமானிகளினால் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை சிறப்பானதாகவும் பாராட்டத்தக்கதாகவும் உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இவர் ஆற்றிய கல்விப் பணிக்காக நன்றி கூறுவதோடு இவரின் விழா சிறக்கவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

இ.இளங்கோவன்,கௌரவ ஆளுநரின் செயலாளர், வடமாகாணம், யாழ்ப்பாணம்.

## அனைவரையும் அணைத்துச் செல்லும் பண்பாளன்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக உன்னத சேவையாற்றிய திரு. கதிரவேலு யோகநாதன் அவர்கள் அனைவரையும் அணைத்துச் செல்லும் பண்பாளனாக விளங்குகின்றார். நகைச்சுவையாகப்பேசி அனைவர் மனங்களையும் கொள்ளை கொண்டவர். மிகச்சிறந்த மனிதப் பண்பாளன்; இன் சொல்லினன். ஆசிரியப் பணியிலும் தேசிய கல்வியியற் கல்லூரியில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பல தரத்திலான சேவையினையும் மனநிறைவுடன் ஆற்றியவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற் புவியியற் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறி பத்தாண்டுகளுக்கு மேலாகத் தீவின் பல பாகத்திலும் ஆசிரியப் பணியை மேற்கொண்ட திரு யோகநாதன் 1993 இல் வவுனியா கல்வியியற் கல்லூரியிற் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பதவி பெற்று 2006 முதல் யாழ்.கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகப் பொறுப்பேற்றார். அவரது பீடாதிபதிக்காலத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பல துறைகளிலும் பெருவளர்ச்சி கண்டது. பௌதீக, பாடவிதான, புறப்பாட விதான, சமூக இணைப்புச் செயற்பாடுகள் பலவற்றிலே அவரது பங்களிப்பினை நாம் காணலாம். முதன்முறையாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தேசிய கல்வியியற் கல்வி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவத்தை ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாபோற் பெருமெடுப்பில் நடத்தி வெற்றி கண்டவர். இதே ஆண்டிற் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள வித்தக விநாயகர், முடிமன்னர் ஆலய புனருத்தாரண மகா கும்பாபிஷேகத்தை முன்னின்று தேசிய கல்வியியற் சமூகத்தின் ஆதரவுடன் நடத்தியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் நெருங்கிய உறவைக் கட்டியெழுப்பியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்துடன் அந்நியோன்யமான உறவை வளர்த்துக் கொண்டவர். எமது பீடத்தின் கல்வியியற் சபையின் அங்கத்தவராக ஐந்து வருடங்களுக்கு மேலாக இருந்து எமது உயர் கல்விசார் செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி வருபவர். எமது M.Ed நேர்முகத்தேர்வுக் குழுவில் ஓர் அங்கத்தவராக இருந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். அவரது கல்விசார் நிர்வாக அனுபவம் எமக்குப் பல வழிகளிலும் துணையாக இருந்துள்ளது.

ஒரு நிர்வாகி சமூகத்தோடு எவ்வாறு நெருங்கிச் செயற்படவேண்டுமென்பதற்கு உதாரணபுருசராக இருந்து பல வெற்றிகளைக் கண்டவர். எங்களது அரசியற்சூழலைப் புரிந்து அதற்கேற்ப இயங்கி, தான் தலைமை தாங்கிய நிறுவனத்திற்கும் தனது சமூகத்திற்கும் செய்யவேண்டியவற்றைச் சிறப்புடன் செய்து வெற்றிகண்டவர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களை மிக்க கட்டுப்பாட்டுடனும் ஒழுக்கத்துடனும் முன்மாதிரியான ஆசிரியராக உருவாக்கும் பணியினை மிகச்சிறப்புடன் மேற்கொண்டு வருபவர்.

நண்பர் யோகநாதனின் ஓய்வுக்காலம் மிக்க மகிழ்வுடனும் நலத்துடனும் திகழவும் குடும்ப சமேதராக அமைதியான வாழ்வைப் பெற்றுக்கொள்ளவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

பேராசிரியர் கலாநிதி ச.சத்தியசீலன் பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புகள் பீடம் மற்றும் வரலாற்றுப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.


### மணிவிழா நாயகனுக்கு இதயபூர்வ வாழ்த்துக்கள்

**செவ்வந்தி**
இல.07, நவீன சந்தை (உட்புறம்)
சாவகச்சேரி.
T.P: 021 3212961

**விமலாஸ்**
உத்தரவு பெற்ற வானொலி விற்பனையாளர்
இல.09-15, மொடேன் மார்க்கட்,
சாவகச்சேரி. T.P: 021 2270202


**ரஞ்சனாஸ் புடைவையகம்**
இல.08, நவீன சந்தை,
சாவகச்சேரி.
T.P: 021 2201390

**தர்மினி ஹாட்வெயர்**
**Tharmini Hardware**
A-9 Road, Madathady
Chavakachcheri,
T.P-021 2270079

**திருக்கணித அச்சகம்**
டச்றோட்,
சாவகச்சேரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org








# சிறுவர் அரங்கம்

459

## தடியின் மகிமை



இமயமலைப் பகுதியில் மானசரோவரின் அருகே ஒரு சிறுகிராமம் இருந்தது. அங்கு ஆடு, மாடுகளை மேய்ப்பவன் இருந்தான். அவன் காலையில் போகும் போது மாடுகளை எண்ணி, மாலையில் திரும்பிவரும் போது எண்ணினால் எண்ணிக்கை சரியாக இருக்கும். ஆனால், இதற்கிடையே எண்ணிப்பார்த்தால் ஒரு மாடு அதிகம் இருக்கும். இது எப்படி ஏற்படுகிறது என்று கேட்கிறீர்களா?

அந்த மாடு தேவலோகப் பசு காமதேனு. அது எப்போது போகிறது என்பதை மட்டும் யாராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. அது காமதேனு என்பதும் யாருக்கும் தெரியாது. அதே கிராமத்தில் ஒரு கிழவன் இருந்தான். அவன் தோளின் மீது காவடிபோல ஒரு கழியை வைத்துக்கொண்டு காடுகளில் திரிந்து அதன் இரு முனைகளிலும் உலர்ந்த குச்சியின் மட்டைகள் போன்றவற்றை கட்டி எடுத்து வருவான்.

ஒருநாள் அவன் தன் தோளின் மீது தடியை வைத்



துக் கொண்டு போகையில் எதிரே மாடுகளின் கூட்டம் வந்தது. அவன் தோளின் மீதிருந்த தடியை எடுத்து அவைகளை மெதுவாகத்தட்டி வழி செய்து கொண்டு போனான். அப்படி அவன் தட்டிய மாடுகளில் காமதேனுவும் ஒன்று. அவன் காமதேனுவைத் தட்டிய போது அதன் சில உராமங்கள் அந்தத் தடியின் சந்து களில் சிக்கி அதோடு வந்து விட்டன.

அந்த கிழவனுக்குத் தான் காமதேனுவை அடித்ததோ அல்லது அதன் உரோமங்கள் தடியில் ஒட்டிக்கொண்டதோ தெரியாது. ஆனால், உலர்ந்த குச்சிகளைக் கட்டி அத்தடியை அவர் தன் தோளின் மீது வைக்க அது சற்றும் பளுவே இல்லாமலிருப்பது கண்டு ஆச்சரியப் பட்டான். அவன் மேலும் நிறையக் குச்சிகளை அடுக்கி வைத் ததும் அது கனம் இல்லாமல் இருந்தது. அது கண்டு அவன் ஆச்சரியமும், சந்தோஷமும் கொண்டான். அன்றைய தினம் முதல் நிறையக்குச்சி களை அந்தத் தடியின் இரு முனைகளிலும் கட்டி சற்றும் சிரமப்படாது தூக்கிப்போய் அவைகளை விற்று நிறையப் பணம் சம்பாதிக்க தொடங் கினான். அவனுக்கு அந்தத் தடியில் ஏதோ ஒரு விஷேட சக்தி திடீரெனப் புகுந்துவிட்டதென்று தெரிந்துவிட்டது.

ஒருநாள் ஒரு பணக்காரன் அந்தக் கிழவன் பெரிய விறகுச் சுமையோடு வருவதைக் கண்டு ஆச்சரியப்பட்டு நின்றான். தள்ளாடும் கிழவன் எவ்வளவு கனமான சுமையைத் தூக்குகிறான் என நினைத்து, அக்கிழவனருகே போய் "கிழவனான உன்னால் எப்படியப்பா இவ்வளவு பெரிய சுமையைத் தூக்க முடிகிறது?" என்று கேட்டான். அதற்கு அந்தக் கிழவன் "எல்லாம் இந்த தடியின் விஷேசத்தால்" எனக்கூறி அதற்கு உள்ள விஷேட சக்தியை கூறலானான்.

முதலில் அந்தப் பணக்காரன் அதை நம்பவில்லை. அழுக்கு அடைந்த கோணல் மாணலான அந்தத் தடிக்கா அவ்வளவு சக்தி இருக்கிறது என்று நினைத்தான். அக்கிழவனிடமிருந்து அத்தடியை வாங்கி தூக்கிப் பார்த்தான். அவ்வளவு பெரிய சுமையோடு



கட்டிய அந்தத் தடி பஞ்சு போல இலேசாக இருந்தது கண்டு, கிழவன் கூறியது உண்மையே எனத் தெரிந்து கொண்டான். உடனே, அத்தடியை விலை கொடுத்து வாங்க நிச்சயித்துக் கொண்டான். அதைக் கண்டு ஏராளமான பணம் சம்பாதிக்க முடியுமே என்று நினைத்தான். அவன் அதற்காக மூவாயிரம் வராகன்கள் விலை கொடுப்பதாகக்கூறி அக்கிழவனைச் சம்மதிக்க வைத்துவிட்டான். பணத்தைக் கொடுத்துவிட்டு அந்தத் தடியை வாங்கிக் கொண்டு தன்னுடைய வீட்டிற்கு போனான்.

தடி அழுக்குப்பிடித்து கருப்பாக இருந்ததால், தேய்த்துப் பளபளக்குமாறு அவன் அதை ஒரு தச்சனிடம் கொடுத்தான்.


பிறகு, அவன் தடியில் இருமுனைகளிலும் பழக் கூடைகளை வைத்துத் தூக்க முடியவில்லை. அக்கிழவனின் கையில் இருந்தவரை மாய மந்திரசக்தி நிறைந்ததாக காணப்பட்ட தடி ஏன் தன் கையில் சக்தியற்று இருக்கிறது என்று தலையை பிய்த்துக் கொண்டான். "பாவம்! தச்சன் இழைத்ததால் தடியின் மேல் ஒட்டிக்கொண்டிருந்த காமதேனுவின் உரோமங்கள் உதிர, அத்தடி சாதாரண தடியாக மாறிவிட்டது" அதிலுள்ள சக்தி போய்விட்டது.

## அம்புலிமாமா கதைகள்

## பணத்தின் மகிமை

ஸ்ரீபதி பரம்பரைப் பணக்காரராக இருந்தும், கடுமையாக உழைத்தார். ஏற்கனவே சொத்து இருக்கிறது என்று எண்ணாமல், மேலும், உழைத்து சம்பாதித்தார். ஏராளமான தான, தருமம் செய்தார். அவருடைய பிள்ளை லட்சுமிபதிக்கு தன் தந்தை செய்வது எதுவுமே பிடிக்கவில்லை. ஏற்கனவே செல்வம் ஏராளமாக இருக்கையில், மேலும் ஏன் பணம் சம்பாதிக்கவேண்டும்? அப்படியே சம்பாதித்தாலும் ஏன் தான, தருமம் செய்ய வேண்டும்? இதுபற்றி அடிக்கடி தந்தைக்கும், மகனுக்கும் வாதம் உண்டாக, ஸ்ரீபதி அவனை ஒரு குடம் நிறைய தண்ணீரும், ஒரு சல்லடையும், மேலும் ஒரு வாளித் தண்ணீரும் கொண்டு வரச் சொன்னார்.

சல்லடையில் தன் மகனைத் தண்ணீர் ஊற்றச் சொன்னார். அது நிற்காமல் வழிந்தோடியது. பிறகு, ஏற்கனவே நிரம்பியிருந்த குடத்தில் வாளித் தண்ணீரை ஊற்றச் சொன்னார். தண்ணீர் வழிந்தோடியது. அதைப்பார்த்த லட்சுமிபதி, "அப்பா! சல்லடையில்



தண்ணீர் விட்டால் அது நிற்குமா? அது ஒழுகி விடுமா! " என்றான்.

அதற்கு ஸ்ரீபதி "மகனே! அதுபோல்தான் நாம் உழைக்காமல் உட்கார்ந்து சாப்பிட்டால், செல்வம் முற்றிலும் கரைந்துவிடும்" என்றார். "சரி! ஏற்கனவே நிரம்பியுள்ள குடத்தில் ஏன் தண்ணீர் ஊற்றச் சொன்னீர்கள்? அதுவும் வழிந்தோடி விடுமே!" என்று கேட்டான் பிள்ளை. அதற்கு ஸ்ரீபதி "அதுபோல்தான், தானம் செய்யாமல் பணத்தை சேர்த்துவைத்தால் வீணாகும். குடத்திலுள்ள தண்ணீர் அப்படியே தேங்கியிருந்தால், புழுப் பூச்சிகள் அடையும். அதுபோல்தான் நாம் சம்பாதிக்கும் பணமும்! அவ்வப்போது அதைக் கொஞ்சம் தான, தருமம் என்று செலவழித்து, பின்னர் சம்பாதித்து நிரப்பவேண்டும் " என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் காட்டிய வழி



## ஆன்மீகம் 07

அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

...ஆனால், இன்றோ மனிதன் அவசரக்காரனாகி விட்டான். எதிலும் வேகம், வேகம், வேகம்தான்! வேகம் விவேகமல்ல என்பதை மறந்து கண்ணை மூடிக்கொண்டு காட்டுத்தனமாக, கடுமையான வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றான். அதனால் காலமும் வேகமாக ஓடுகிறது. ஓடுவது ஒய்ந்துதானே ஆகவேண்டும்! இல்லையேல் மூச்சுமுட்டி முடிந்தல்லவா போய்விடுவான். இப்போது மனிதனின் நோக்கமெல்லாம் பணம்! பணம்! பணம்! பணத்தை பிறருக்கு உதவாமல் பூட்டி வைப்பவன். பாவத்தையும் சேர்த்தல்லவா பூட்டி வைக்கிறான். முற்காலத்தில் தர்ம நியாயப்படி அரசுகள் நடந்தன! தர்ம நியாயப்படி வரிகள் வசூலிக்கப்பட்டன. மன்னர்கள் குறையின்றி மக்களைக் காத்தனார். ஆனால், இன்றோ! எல்லாமே தலைகீழ். பலவழிகளிலும் மனிதன் பணத்தை சம்பாதிக்கிறான். அதனால் எவ்வளவு பேர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதை சிந்திப்பதே இல்லை. வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்கிறார்களே மக்களுக்கு துரோகம் செய்து! மக்களை ஆழ்வோர் வாழ்வாங்கு வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். கல்வி கற்போர் கணக்கு உயர்ந்தாலும், நாட்டில் பிணக்குகளும் உயர்கின்றன. வருமானவரி ஏய்ப்பால் கறுப்புப்பணங்கள் மலை, மலையாய்க் குவிந்து நாட்டை இருட்டுப் பாதையில் இழுத்துச் செல்கின்றன. இப்படி கறுப்புப்பணம் சேர்க்காதவர்களை யார் தேடினாலும் இன்றுகாண இயலாது. பணத்தை சேர்ப்பவர்கள் குணத்தை தொலைத்து விடுகிறார்கள். இரும்புப் பெட்டிகளோடு பழகி, மனமும் இரும்பாகி விடுகிறது. இப்படி தர்மத்தை மறந்தவர்களுக்கு புண்ணியத்தை கொடுக்கப் பிறந்த கொடைவள்ளல்கள் இந்தப் பிச்சைக்காரர்கள்தான்! அவன் பணக்காரனிடம் பிச்சை வாங்கும்போதே, அவன் பாவங்களில் ஒரு பகுதியை பெற்றுக்கொண்டு அந்தப் பணக்



காரனின் பாவச்சுமையைக் குறைக்கின்றான். இதை பணக்காரர்கள் உணருவதே இல்லை. காரணம், நம் முன்னோர்கள் காட்டிய நல்வழியை இவர்கள் மாற்றிவிட்டார்களே. ஆண்டவன், வேண்டிய வசதி கொடுத்தும், மேலும் கொடுக்கும்படியான வரம் கேட்கும் இவர்கள் அன்றாட சாப்பாட்டுக்கு வழி இன்றி இருப்போரை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இவர்கள் தாம் என்ன செய்கிறோம் என்றே அறியாமல் பாவத்தை அதிகமாக்கிக் கொள்கிறார்கள். வெளிப் பார்வைக்கு பளபளக்கும் இவர்கள் உள்ளே வேதனைக்களமாகக் காட்சி அளிப்பார்கள். நிம்மதி என்பது இவர்களுக்கு இறைவன் சந்நிதியிலும் கிடைக்காது. இப்படித் தர்மம் மறக்கப்பட்டுவிட்ட இந்த நிலையினால் தான் வான் பொய்க்கிறது, பூமி பிளக்கிறது, புயல் அடிக்கிறது, கொலை, கொள்ளை, லஞ்சம், அதிகாரம், துஷ்பிரயோகம், நீதியின்மை ஆகியன தலை விரித்து ஆடுகின்றன. அறத்தின் வழியே ஆட்சி செய்ய மறந்த - அரசியல்வாதிகள் சுயநலத்தால், மக்களைச் சுரண்டும், மக்களின் விரோதிகள் ஆகிவிட்டனர். அரசாங்கமே சாதிவெறியை அதிகமாக்கி அழிவுகளுக்கு வழிகாட்டுகிறது. மதவெறியால் மனிதன் மிருகமாகிவிட்டான். இந்தநிலை மாறணும். 2010க்குப் பின் வரப்போகும் அழிவில் இருந்து தப்பிப்பிழைக்க மனிதனுக்கு இந்தத் தருமம் ஒன்றே வழி ஆகும். ஆதலால், மனிதப் பேரழிவினைக் குறைக்க நீ தருமத்தினை வளர்க்க இன்றுமுதல் போராடு என்றார்! சித்தரின் இந்த உபதேசத்தைக் கேட்டதும் என்ன செய்வது என்றே புரியாமல் திகைத்துப் போனேன். இவ்வளவு பெரிய பணிச்சுமையை என் இளம்தோளில் தாங்க முடியுமா? இதற்கு என்னை ஏன் தேர்ந்தெடுத்தார்? நான் வயதிலும் பெரயவனல்ல! செல்வம், புகழ், அதிகாரம், செல்வாக்கு என்று எந்த வகையிலும் நான் பெரிய மனிதனல்ல. சொல்ப வர்கள் சொன்னால்தானே மக்கள் கேட்பார்கள் என்று சிந்திக்கத் துவங்கினேன். இதைக் கண்ட சித்தர் பெருமான்....

(தொடரும்)

# தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் எதிர்காலம்...!

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பான ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசெப் ஆண்டகை தலைமையில் நடத்தப்பட்ட கூட்டம் இணக்ப்பாடு ஏதுமின்றி முடிவடைந்துள்ளது.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் ஏற்பாடுகள் தீவிரமடைந்து வருகின்ற சூழலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பான சிக்கலும் தீவிரம் பெற்று வருகிறது. இந்தப் பதிவுச் சிக்கல், இதற்குத் தீர்வு காண்பதற்காக நடத்தப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் எல்லாமே- மேன்போக்காக ஒரு விடயத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

அதாவது, வடக்கு மாகாண சபைத்தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்துப் பலவீனப்படுத்துவதற்கான தூண்டுதல்கள் அதிகரித்துள்ளன என்றால், மாகாணசபைத்தேர்தலுக்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்குப் போதிய கால அவகாசம் கிடைக்கப்போவதில்லை.

ஆனாலும், வடக்கு மாகாணசபைத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் இந்த விவகாரம் தலையெடுத்திருப்பதைப் பார்க்கும் போது, தமிழ் மக்களிடத்தில் பல்வேறு கேள்விகள் எழுவது இயல்பு. வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தி விடவேண்டும் என்று விரும்பும் சக்திகளின் தூண்டுதல்களுக்கு யாரேனும் ஆளாகியிருக்கலாம். அதைவிட, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இறுக்கமான போக்கில் உள்ள தமிழரசுக் கட்சியை தமது வழிக்குக் கொண்டு வரலாம் என்று ஏனைய கட்சிகள் நினைத்திருக்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலுப்படுத்தப்பட வேண்டும்- இன்னும் வலுப்பெற வேண்டும் என்பதே பெரும்பாலான தமிழ் மக்களின் நிலையாக உள்ளதேயன்றி அதிகாரச் சிக்கலாக இந்தப் பிரச்சினை உருவெடுப்பதை அவர்கள் விரும்பவில்லை.

ஆனால், இதனை அதிகாரச் சிக்கலாக உருவகப்படுத்தி முறுகல் நிலையை தோற்றுவிக்கவும் பலவீனப்படுத்தவும் பிற தரப்புகள் மட்டுமின்றி ஊடகங்களும்கூட முனைகின்றன என்பதில் சந்தேகமில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான எந்த முயற்சிகளிலும் முன்னேற்றம் எட்டப்படாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமக்குள் முரண்பட்டுக் கொள்வது ரசனைக்குரிய அரசியல் நகர்வாக ஒரு போதும் அமையாது. வடக்குத் தேர்தலை வைத்து தமிழரசுக் கட்சியை மிரட்டும் போக்கு

தலைவர்களின் கைகளில்தான் உள்ளது.

அனுபவமிக்க தலைவர்கள், சட்டத்தரணிகள், ஆயுமேந்திப் போராடிய தலைவர்கள் என்று பல முகங்களைக் கொண்டவர்கள் இருந்தாலும் இவர்கள் எல்லோருக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்ற ஒரே முகம் இருப்பதையே தமிழ் மக்களின் விருப்பமாக இருக்கும்.

இன்னொரு கட்டத்தை நோக்கி நகர வேண்டியுள்ள சூழலில் சுயமுகங்களை, தலைவர்களை வெளிப்படுத்த முனைவது தான் தமிழர் தரப்பில் பெருங்கவலைக்குரிய விவகாரமாகியுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் எழுந்துள்ள இந்தச் சிக்கல் ஒன்றும் தீர்க்கப்பட முடியாத ஒன்று அல்ல. இந்தச் சிக்கலில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவிலேயே விடுபடத் தவறினால் தொடர்ந்தும் நீளுகின்ற ஒன்றாக



பதே அது. இது வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் இத்தகைய தூண்டுதல்களும் முயற்சிகளும்தான், இந்தவேளையில் அவசர பேச்சுக்கள், கலந்துரையாடல்களில் இறங்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் உள்ள ஐந்து கட்சிகளும் மட்டுமின்றி அதற்கு வெளியே உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும்கூட இந்தக் கலந்துரையாடல்களில் பங்கேற்றுள்ளது.

உண்மையில் வடக்கு மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கும் இந்தப் பதிவுச் சிக்கலுக்கும் தொடர்புகள் இல்லை. ஏனென்

இந்த இரண்டு காரணங்களில் ஒன்று அல்லது இரண்டுமேகூட இப்போதைய அழுத்தங்களின் பின்னணியில் இருந்திருக்கலாம்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் உள்ள கட்சிகளைப் பொறுத்தவரையில் தாம் எழுப்பும் பிரச்சினையில் நியாயம் இருப்பதாகவோ, இந்தச் சூழலில் இதை எழுப்புவதால் தமக்கு நியாயம் கிடைக்கும் என்றோ கருதியிருக்கலாம். ஆனால், பொதுப்படையாக தமிழ்மக்கள் இந்த விவகாரத்தை எவ்வாறு பார்க்கிறார்கள் என்பது குறித்து அந்தக் கட்சிகள் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எழுந்துள்ள சிக்கலை, தேவையற்றதொரு அதிகார மோதலாகவே பார்க்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை பதிவு செய்து கொள்வதில் தமிழரசுக்கட்சி காட்டிவருகின்ற இறுக்கமான போக்கையும் சரி, அதற்காக பிடிவாதம் காட்டும் ஏனைய கட்சிகளின் போக்கையும் சரி, எவரும் நியாயமானதொன்றாக கருதவில்லை.

எந்தளவுக்கு மட்டமானதாக மதிக்கப்படுகிறதோ, அதேயளவுக்கு முன்னாள் ஆயுத அமைப்புகள் என்று அடையாளப்படுத்தி ஏனைய கட்சிகளை ஒதுக்க முனைவதும் மட்டமான செயலே.

தமிழரசுக் கட்சி தம்மைக் கறைபடியாத கரங்கள் என்று சொல்லிக் கொள்வதை உலகம் வேண்டுமானால் நம்பலாம். ஆனால், தமிழரசுக் கட்சியின் இன்றைய தலைவர்கள், இளைஞர்கள் மத்தியில் ஆயுதப் போராட்டத்தைத் தூண்டியவர்கள், தூண்டும் விதத்தில் செயற்பட்டவர்கள் என்ற வரலாற்றை மறந்து போய் விட முடியாது.

தமிழரசுக் கட்சியின் வாதத்தின்படி பார்த்தால் முன்னாள் போராளிகளுடன் விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கிறதா என்ற கேள்வியையும் எழுப்ப வைக்கும். இப்போது உள்ள பிரச்சினை யார் கறைபடிந்தவர்கள் என்பதல்ல. ஒன்றுபட்டு நிற்றலே முக்கிய பிரச்சினை. அதற்காகத்தான் மன்னார் ஆயர் உள்ளிட்ட சிவில் சமூகம் முயற்சிக்கிறது.

இந்த முயற்சிகள் எந்தளவுக்கு வெற்றி பெறப்போகிறது என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின்

இருக்குமேயானால் தமிழ் மக்களுக்கு ஒரு சந்தேகம் பிறக்கும்: தமக்குள் உள்ள சிக்கலையே பேசித் தீர்க்க முடியாத தலைவர்களா, தமிழர்களின் தேசியப் பிரச்சினையை அரசுடன் பேசித் தீர்க்கப்போகின்றனர் என்பதே அது.

அத்தகைய கேள்வியை- சந்தேகத்தை தமிழ் மக்களிடம் ஏற்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் அனைத்தினதும் பொறுப்பு. அத்தகையதொரு கேள்வி தமிழ் மக்களிடம் எழுந்துவிட்டால் அது தமிழ் மக்களின் சார்பில் பேசும் சக்தியாக இன்று சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள நிலையில் இருந்துகூட தூக்கி வீசப்படும் நிலை ஏற்படலாம்.

ஏனென்றால் தமிழர் தரப்பின் பிரதிநிதி என்பதை நிர்ணயிக்கப்போவது- எந்தவொரு கட்சியோ, அதன் சின்னமோ, அதன்பெயரோ அல்ல. ஜனநாயக ரீதியாக தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது தமிழ் மக்களே.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க.வின் புதிய யாப்பு திருத்தத்தில் நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதி பதவியை சுயாதீனமாக்கும் வகையிலும் அதிகாரங்கள் பாராளுமன்றத்திற்கு பகிரப்படும் வகையிலுமான புதிய அரசியலமைப்பிற்கான யோசனையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டுள்ள புதிய அரசியலமைப்பின் பிரகாரம் வட்டார அடிப்படையில் 125 பாராளுமன்ற உறுப்பினர்களும் விகிதாசார முறைப்படி 100 உறுப்பினர்களுமாக மொத்தம் 225 பேர் நியமிக்கப்படுவர் எனவும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சு சபைக்கு 25 பேரும் பிரதி அமைச்சர்கள் 30 பேரும் நியமிக்கப்படுவர்.

தற்போதைய யாப்பின் படி பாராளுமன்ற உறுப்பினர்கள் பணத்திற்காகவும் பதவிக்காகவும் கட்சிவிட்டு கட்சி தாவுகின்றனர். இந்த யாப்பில் அவ்வாறு கட்சி தாவினால் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இரத்துச் செய்யப்படும் வண்ணம் திருத்தம் செய்யப்படவுள்ளதுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்த காலத்திற்குள் தமது சொத்துக்கள் பொறுப்புக்களை வெளியிட வேண்டும். அவ்வாறு அவர்கள் அதனை வெளியிடத் தவறும் பட்சத்தில் அவர்களது பதவி இரத்துச் செய்யப்படும்.

இதன் பிரகாரம் பாராளுமன்றத்திற்கே முழு அதிகாரமும் வழங்கப்படவுள்ளது. எந்த ஒரு நாட்டிலும் காணப்படாத அதிகாரமே நம் நாட்டு அரசியல் யாப்பின் படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதே வேளை, இதனை நாம் நிறைவேற்ற நாட்டு மக்களிடம் இதற்கான ஆதரவைப் பெற வேண்டும். குறிப்பாக காணி, சுகாதாரம் மற்றும் கல்விக் கொள்கைகள் மாற்றியமைக்கப்படும்.

தற்போதுள்ள அரசியலமைப்பில் அரசாங்கமும் அதனைச் சுற்றியுள்ளவர் களுமே அதனை அனுபவிக்க முடியும். ஆனால், நாம் முன்வைத்துள்ள அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டிலுள்ள அனைத்து மக்களும் அதனை அனுபவிக்கும் வகையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# இலங்கைக்கே அதிக நன்மை!

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மூலம் இலங்கையே அதிக சாதகத்தை அனுபவித்திருப்பதாக கொள்கை கற்கை நிலையத்தின் தலைவர் சமன் கலேகலை தெரிவித்துள்ளார்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்த நூல் வெளியீட்டு நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையின் உற்பத்திகளில் 70 சதவீதமானவை இந்த உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனினும் இதன் கீழ் இந்தியா 30 சதவீத ஏற்றுமதியையே மேற்கொள்கிறது.

இதனால், ஏற்றுமதி வரிகள் இல்லாத நிலையில் இலங்கை அதிக வருமானத்தை ஈட்டிக் கொள்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# யாத்திரை செல்வது போன்று வழக்கிற்கு செல்கின்றேன்

## பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

யாத்திரை செல்வது போன்று வழக்கு விசாரணைகளுக்கு செல்வதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறு ஆண்டுகளாக வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றங்களுக்கு சென்று வருகிறேன்.

சில மேன் முறையீடுகள் தொடர்ந்து விசாரணை செய்யப்படுகின்றன.

போலிக் குற்றச்சாட்டு சுமத்தி சிறைத்தண்டனையும் அனுபவித்தேன். இதுவே தற்போது நமது நாட்டின் நிலைமையாகும். வழக்கு விசாரணைகளில் அரசியல் தலையீடு காணப்படுகின்றது. படுகொலையாளிகள் பாலியல் குற்றவாளிகள் போன்றவர்கள் விடுதலையாகின்றனர் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற ஆசனம் இரத்து செய்யப்பட்டமை தொடர்பில் செய்திருந்த மேன்முறையீட்டு வழக்கு விசாரணைகளில் பங்கேற்று திரும்பிய போது ஊடகவியலாளர்களிடம் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இலங்கை படைவீரர்களுக்கு ஐக்கிய நாடுகளின் கௌரவம்

(கொழும்பு)

லெபனானில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் முகமாக ஐ.நா. இடைக்கால அமைதி காக்கும் படையில் சேவையாற்றும் இலங்கையின் சிங்ஹ படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த படைப்பிரிவைச் சேர்ந்த 150 இலங்கை இராணுவவீரர்களுக்கு அவர்களது சேவைக்கால நிறைவை முன்னிட்டு மிகவும் மதிப்பும் பெறுமதிமிக்க ஐக்கிய நாடுகளின் பதக்க விருது வழங்கும் விழா அண்மையில் லெபனானில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிங்ஹ படைப்பிரிவின் கேணல் மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா இராணுவத்தளபதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் அவர் இராணுவ மரியாதையுடனும் கலாசார பாரம்பரியங்களுடனும் வரவேற்கப்பட்டார்.

ஐ.நா. இடைக்கால அமைதி காக்கும் படையில் இலங்கை இராணுவத்தின் சிங்ஹ படைப்பிரிவைச் சேர்ந்த 10 அதிகாரிகளும் -140 படைவீரர்களும் சேவையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அரசை கவிழ்க்கும் போராட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்- ஐ.தே.க

அரசாங்கத்தை கவிழ்க்கும் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தற்போதைய கூட்டமைப்பு அரசாங்கத்துடன் மக்கள் செல்லக் கூடிய தூரம் நிறைவடைந்துள்ளது. ஊழல் மோசடி மிக்க அரசாங்கத்தை கவிழ்க்கும் தேசிய போராட்டத்தில் அனைத்து தரப்பினரும் இணைந்து கொள்ள வேண்டும்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டின் மூலம் நாட்டுக்கு கௌரவம் ஏற்பட்டால் அதனை தடுக்க வேண்டியது அவசியம் கிடையாது. எனினும், இந்த மாநாட்டை போர்வையாகக் கொண்டு மோசடிகள் இடம்பெறுவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வாகனக் கொள்வனவு மற்றும் ஏனைய வசதிகளைச் செய்து கொடுக்கும் போர்வையில் மோசடிகள் இடம்பெறுகின்றது. அரசாங்கத்தின் கொடுக்கல் வாங்கல்களில் எவ்வித வெளிப்படைத்தன்மையும் கிடையாது. அமைச்சரவையின் அனுமதியின்றி அதி சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை பணம் சம்பாதித்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படாத வகையில் மாநாட்டை நடத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார். (செ-2)

# தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை

இவ் ஆண்டுக்கான ஆரம்பக்கல்வி, இந்து சமயம், கிறிஸ்தவம், விவசாயம், மனைப் பொருளியல் ஆகிய பாடநெறிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் யாவும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது. இந்நேர்முகப்பரீட்சைகள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளிலும் யாழ்ப்பாணம் (கோப்பாய்) தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் ஜூன் மாதம் 05,06 ஆம் திகதிகளிலும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் எதிர்வரும் ஜூன்மாதம் 8 ஆம் திகதியும் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் ஜீன் மாதம் 9,10 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன என வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பணிப்பாளர் கே. பேணாட் அறிவித்துள்ளார்.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் 2011 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர புதிய, பழைய பாடத்திட்டங்களின் Z புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான அழைப்புக்கடிதங்கள் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ள ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் அனுமதிக்கப்படவுள்ள மாணவர் தொகையில் நான்கு மடங்கினர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

நேர்முகப் பரீட்சையின் முடிவில் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக தேசிய மட்டத்திலும் கஷ்டப் பிரதேச மாவட்ட அடிப்படையிலும் தகுதியானவர்களிலிருந்து வெட்டுப்புள்ளி அடிப்படையில் மாணவர் அனுமதிக்கு தெரிவு செய்யப்படுவர். (அ)





கிளாரட் சிறுவர் எழுச்சி திட்ட அனுசரணையுடன் இயங்கி வரும் சோழர் சிறுவர் பராமரிப்பு இல்லத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இவ்விளையாட்டு போட்டியில் மாணவர்கள் பங்கேற்பதையும் இல்லச் சிறுவர்கள் குழுமி நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## ஆறாம் இடத்திற்கு வரும் குரு, எதிர்பாராத நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக்கும்



**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

**ஆறாம் இடத்தில் வரும் குருவால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை!** 45/100

**சாமர்த்தியமாகப்பேசிச் சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற மகர இராசிநேயர்களே!**

இதுவரை ஐந்தாம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் இனி ஆறாமிடத்திற்குச் செல்ல இருக்கிறார். இந்த ஆறாமிடம் என்பது ஜோரான இடம்தானா? இல்லை சொந்தங்களால் பகை உருவாகுமா? வராத கடன்களை வசூலாக்க முடியுமா? என்று ஏராளமான சிந்தனைகளை மனதில் தேக்கி வைத்துக்கொண்டிருப்பீர்கள்.

அவற்றிற்கெல்லாம் விடை கூறும் விதத்தில் வைகாசி 14 ஆம் திகதி வரப்போகிறது. வாழ்க்கைச் சக்கரத்தை நாம் ஓட்டுவதற்கு வழிகாட்டும் நவக்கிரகங்களில் குரு சுபக்கிரகமாகப் போற்றப்படுகிறது. அது உங்கள் இராசியைப்பொறுத்தவரை 3, 12க்கு அதிபதியாகவும் விளங்குகிறது. மறைவிடங்களுக்கு அதிபதியாக விளங்கும் குருஆறில் மறைந்து சஞ்சரிப்பது யோகம் தான்.

கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்பதற்கேற்ப, எதிர்பாராத நல்ல வாய்ப்புகளை இல்லம் தேடி வரவழைத்துக்கொடுக்கும் என்றாலும் ரோக ஸ்தானத்தில் தற்சமயம் சஞ்சரிக்கப்போவதால் ஆரோக்கியத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்தும் சூழ்நிலை வரும்.

ஏற்ற தொழில் எதுவாக இருந்தாலும் மற்றவர்களை நம்பி செயற்படும் பொழுது மனக்கசப்புத்தான் ஏற்படும். கூட்டங்களில் இருக்கும் பொழுது குடும்ப விடயங்களை அலசி ஆராயவேண்டாம்.

ஏற்றவிதத்தில் தன ஸ்தானத்திலும் தொழில் ஸ்தானத்திலும் விரய ஸ்தானத்திலும் குருவின் பார்வை பதிவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். மாற்றங்கள வந்தால் அதை யோசித்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

குடும்ப ஸ்தானம் புனிதமடைவதால் சுபச் செய்திகளும் சுபச்செலவுகளும் வரும்.

**உடன்பிறப்புகள் மீது அதிக பாசம் கொண்டவர்கள்!**

மனவலிமை அதிகம் பெற்றவர்கள் நீங்கள் குணத்தில் சிறந்தவர்கள் என்று நீங்கள் போற்றப்பட்டாலும் சினம் வரும் பொழுது உங்களை அடக்க முடியாது. சீறிப் பாய்வீர்கள். அதே சமயம் பாசம் காட்டும் போது வேஷம்போடமாட்டீர்கள். உண்மையிலேயே இரக்கம் கொள்வீர்கள். தேவைப்படும் போது மட்டுமே பணத்தைச் செலவழிக்க முன்வருவீர்கள்.

உடன்பிறப்புகளின் மீது உங்களுக்கு பாசம் அதிகமாகவே இருக்கும். இருப்பினும் அவர்களுக்கு பாசம் அதே அளவு உங்கள் மீது இருக்குமா? என்பது சந்தேகம்தான். இப்படிப்பட்ட குணங்களைப்பெற்ற உங்களுக்கு பெயர்ச்சி ஆகிவந்த குரு கோடி, கோடியாய்க் கொட்டிக் கொடுக்கப் போகிறாரா? இல்லை குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு வித்திடப்போகிறாரா? என்பதைப் பற்றிப்பார்ப்போம்.

**தேவகுரு ஆறில் வந்தால் தேவைகள் பூர்த்தியாகும்!**

ஆவல்கள் தீரவேண்டின் அனுசரிப்பும் தேவையாகும்! கோபத்தை விலக்கினால் தான் குடும்பத்தில் அமைதி கூடும்! தீபத்தில் குருவைக் கண்டு தரிசித்தால் நன்மை சேரும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது ஆறில் சஞ்சரிக்கும் குருவால் ஆற்றல்கள் பளிச்சிடும். கூட்டு முயற்சியில் மாற்றம் ஏற்படும். கொள்கைப்பிடிப்பை ஒரு சில சமயங்களில் தளர்த்திக்கொள்வீர்கள். கோபத்தை விலக்கி குணத்தைக் கூட்டி அன்போடு அருகில் இருப்பவர்களை அணுகினால் இன்பங்களை வரவழைத்துக்கொள்ள இயலும்.

ஆறாமிடம் என்பது ரோக ஸ்தானம் மட்டுமல்ல, கடன், பகை,வழக்கு, பொருள் இழப்பு, மனத்தடுமாற்றம், வீண்பழிகள், கண்நோய், பிறரிடம் உதவி கேட்கும் நிலை, வயிறு மற்றும் சிறுநீரகக்கோளாறு, பங்காளிபகை, விவாகப் பிரச்சினைகள் ஆகியவற்றை அறிந்துகொள்ளும் இடமாகவும் விளங்குகிறது. எனவே, ரோகஸ்தானத்தில் சஞ்சரித்து, ஒருவர் ஒருவருக்கு ஆரோக்கிய பாதிப்பும், அதனால் சிறுசிறு தொல்லைகளும் விரயங்களும் உருவாகலாம்.

உத்தியோகத்தைக் குறிக்கும் இடமாகவும் ஆறாமிடம் அமைவதால் பிறக்கும் பொழுது குருவக்ரமாக இருந்து பிறந்தவர்கள் திடீர் பதவி உயர்வு இப்பொழுது திக்குமுக்காட வைக்கும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும். உள் மனதில் கவலைகள் ஒளிந்திருக்கும்.

**வெற்றிகளைக்குவிக்கும் வியாழனின் பார்வை!**

குரு ஆறாமிடத்தில் இருந்து கொண்டு அதன் பார்வையை 2,10,12 ஆகிய இடங்களில் பதித்து புனிதப்படுத்துகிறார். எனவே, அந்த இடங்கள் எல்லாம் இனி புனிதமடையப் போகின்றன.

**இரண்டினைக் குருதான் பார்த்தால் இனியதோர் வாழ்க்கை சேரும்! பத்தினைக் குருதான் பார்த்தால் முத்தான தொழில்கள் வாய்க்கும்! பனிரெண்டைக் குருதான் பார்த்தால் பயணங்கள் அதிகரிக்கும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.**

குரு பார்த்தால் இடையூறுகள் அனைத்தும் விலகிவிடும் என்பது முன்னோர் வாக்கு அந்த குருவின் பார்வை பதியும் இடமாக இருக்கும் வாக்கு, தனம், குடும்பம் என்னும் இடம் வலுவடைவதால் நீங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். திணறடித்துக் கொண்டிருக்க பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க பணம் வந்து கொண்டேயிருக்கும்.

# மகரம்



குடும்பத்திற்குத்தேவையான அத்தியாவசியப்பொருட்கள் முதல் ஆடம்பரப்பொருட்கள வரை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். விலகிச்சென்ற சொந்தங்கள விரும்பி வந்து சேரும் என்றாலும் அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறார்களா? என்பதை அறிந்து செயற்படுவது நல்லது.

குருவின் பார்வை பலம் பத்தாம் இடத்தில் பதிவதால் செயல் ஸ்தானம் பலம் பெறுகிறது. செய்யும் செயல்களில் இருந்த சிக்கல்கள் அகலும். விலையுயர்ந்த பொருட்களைக்கையாள்வதில் கவனம் தேவை. குழந்தைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சியில் எதிர்பார்த்த அளவு வெற்றிகிடைக்குமா என்பது சந்தேகம் தான்.

உங்கள் வளர்ச்சியில் தளர்ச்சியையே ஏற்படுத்திக்கொண்டிருக்கும். திடீரென தொழில் மாற்றம் செய்யலாமா? என்று யோசிப்பீர்கள். பிறகு இதே தொழிலை நீடிக்கலாமா? என்று நினைப்பீர்கள். வேலையில் இருப்பவர்கள் வி.ஆர். எஸ். வாங்கிக்கொள்ளும் எண்ணத்தை வளர்த்துக்கொள்வர். பிறகு இங்கேயே நீடிக்கலாம் என்று சொல்வீர்கள்.

சலனங்கள அதிகரிக்கும் இந்த நேரத்தில் எடுக்கும் முடிவுகளை யோசித்து எடுப்பது நல்லது. பெற்றோர்களிடம் பாசமாக நடந்து கொள்வது நல்லது.

குருவின் பார்வை அயன, சயன ஸ்தானம் எனப்படும் 12 ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். தொழில் அதிபர்களுக்கு அலைச்சல்கூடும். இந்த நேரத்தில் ஆதாயமும் கிடைக்கும். நீண்டதூரப் பயணங்களை ஒருசிலர் மேற்கொள்வர். பால்ய நண்பர்களின் உதவியால் புது முயற்சி ஒன்று கைகூடும்.

மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கவலைகள் மாறும். கோவில் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். அந்நிய தேசத்திலிருந்து அழைப்புகள் வந்து சேரும். அஞ்சல் வழியில் வரும் செய்தி ஆச்சரியப்பட வைக்கும். எடுத்த முடிவை உடனுக்குடன் மாற்றும் சூழ்நிலைகூட ஒருசில சமயங்களில் உருவாகலாம். வீடு மாற்றங்கள் தானாகவே வந்து சேரலாம்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!**

மிதுனத்தில் சஞ்சரிக்கும் குரு 13.11.2013 முதல் 12.03.2014 வரை வக்ர கதியில் இயங்குகிறார். இந்த வக்ரம் உங்கள் இராசி அடிப்படையில் பார்க்கும் பொழுது 3,12 க்கு அதிபதியான குரு வக்ரம் பெறும் பொழுது ஒருவழிக்கு நன்மைதான். என்றாலும் சகாய ஸ்தானாதிபதியகாகவும் குரு விளங்குவதால் வளர்ச்சியும் தளர்ச்சியும் மாறிமாறி வந்து கொண்டே இருக்கும்.

பொதுவாக இக்காலத்தில் செய்யும் காரியங்களை யோசித்துச் செய்வது தான் நல்லது. சில இடையூறுகளை சந்திக்க நேரிடும். உடன் பிறப்புகள் உங்களுக்கு எதிராகச் செயற்படுவர். வழக்குகள் நீடிக்கும். நீண்டதூரத்தில் இருந்துவரும் தொலைபேசி வழித்தகவல் நிம்மதியைக் குறைக்கலாம்.

நிச்சயிக்கப்பெற்ற சில காரியங்களை மாற்றி அமைப்பீர்கள். குடும்பத்தினர்களைக் கொஞ்சம் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. இக்காலத்தில் முறையான குரு வழிபாடு, சனி வழிபாடு, சர்ப்பசாந்தி ஆகியவற்றைச் செய்தால் சந்தோஷத்தை வரவழைத்துக்கொள்ளலாம்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

சனிக்கிழமை தோறும் சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு அனுகூலம் தரும் நாளில் தட்சிணாமூர்த்தியையும் வழிபட்டு வாருங்கள். அத்தனை காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.



28.05.2013 - 12.06.2014




***சுபஸ்ரீவிஜயவருடம்வைகாசி மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (28.05.2013) இரவு 9.18 மணிக்கு மிருகசீரிட நட்சத்திரம் மூன்றாம் பாதத் தில் மிதுன இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கப் போகிறார்.***

**குருவின் வக்ரகாலம் 13.11.2013 முதல் 12.03. 2014 வரை வியாழன் வக்ர கதியில் இருக்கிறார்.**

**01.06.2013 முதல் 01.07 2013 வரை குரு அஸ்தமனம் பெறுகிறார்.**

**பிறகு 13.06.2014இற்கு கடகத்தில் குரு உச்சம் பெற்று சஞ்சரித்து உன்னத பலன்களை உலகிற்கு வாரிவழங்கப் போகிறார்.**

**பெண்களுக்கு சிறப்பு பலன்கள்**


மகரத்தில் பிறந்த பெண்களுக்கு மகிழ்ச்சி அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். குடும்ப ஸ்தானம் புனிதமடைவதால் குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப்பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கிச்சேர்க்க முற்படுவீர்கள். சேமிப்பு உயரும். கணவன்- மனைவிக்குள் இருந்த கருத்துவேறுபாடுகள் அகலும். மாமியார், நாத்தனார் மற்றும் உறவினர்கள் அனைவரும் உங்கள் குணமறிந்தும் மனமறிந்தும் நடந்து கொள்வர். வாழ்க்கைத்துணை வழியே வந்த பிரச்சினை விலகி ஒற்றுமை பலப்படும். திடீர் இடமாற்றம், வீடு மாற்றங்கள் வக்ர காலத்தில் ஏற்படலாம். சகாயஸ்தானாதிபதி குரு வக்ரம்பெறும் நேரத்தில் கொடுக்கல்- வாங்கல்களில் விழிப்புணர்ச்சி தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும். வேலைப்பளு கூடும். குரு வழிபாடும் இராகு- கேது பரிகாரமும் செய்வது நல்லது.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக்காய் உயிர்ப்பூக்களை உகுர்த்த உறவுகள் நினைவாய்...!



உலகத் தமிழினத்தின் இதயங்கள், கண்ணீருக்குப் பதில் குருதியைக் கொட்டித்துவண்டு, உதிர்ந்து சருகாகி சரிந்து, தரையோடு தரையாய்க் கிடந்து புலம்பியநாள்...!, நகர்ந்து இன்றோடு நான்கு ஆண்டுகள் முடிவடைகிறது.

அவலத்துள் புதைந்த எம்மவர்கள் அருகிருந்தும், ஏணைய அனைத்துத் தமிழர்களும், உலக மனிதாபிமானிகளும் ஆற்றாமையோடு கண்கள் கட்டப்பட்டு, வாய்ப்பூட்டு போடப்பட்டு, கை,கால்கள் முடக்கப்பட்டு வேதனைத் தீயுள் வெந்து கருகிய நாள்...!

பெரும் இனப்படுகொலையொன்று, பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வைக்குள் மறைக்கப்பட்டு மிக இரகசியமாக அரங்கேற்றப்பட்ட நாள்...! பிராந்திய வல்லாதிக்கமும் உலக வல்லாதிக்கமும் தமது இதயத்தை இரும்பாக்கி, கண்களைக் குருடாக்கி அதிகாரத்தை ருசிக்கும் , புசிக்கும் மகுடத்தின் கீழ் மயக்கத்தில் இருந்த அந்தநாள்!

வன்னிமக்களின் கூக்குரல், உலகின் ஏனைய மக்களுக்கு எட்டாது, பிரபஞ்சத்தின் வெளிகளில் கரைந்து, காணாமல்போய், மிகப்பெரும் ஏமாற்றத்தை அளித்த, ஈழத்தமிழர் வரலாற்றிலேயே மிக இருண்ட, கரிய அந்த நாள்...!

அதை எண்ணுகையில், இன்றும் அன்றுபோல் அது, எம்மைக் கொல்லுகையில், சந்ததிக்கோர் தாயகம் தந்தே தீருவோம் என்ற அடி மன உழைச்சல் உயிர் கொடுக்கையில், இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினம் இன்று மீட்டுகிறது தனது நினைவுகளை.

நடந்தது போரல்ல இன அழிப்பு-இனப்படுகொலை. இது எதேச்சையானது அல்ல; நன்கு திட்டமிடப்பட்டது; அதுவும் அதே ஆண்டு திட்டமிடப்பட்டதல்ல நீண்டகாலமாகத் திட்டமிடப்பட்டிருந்தது. இது அனைவராலும் இன்று அறியப்பட்ட தொன்றாயினும், அகிலத்தின் மனித உரிமைப் பேராளர் மாநாட்டினால்கூட ஆக முடிந்தது எதுவும் இல்லை.

இச்சந்தர்ப்பத்தில் கூட தமிழகம் பலபோராட்டங்களையும் உயிர்த் தியாகங்ளையும் செய்தது என் பதை நாம் மறக்க முடியாது.

இருப்பினும் ஐ.நா.மனித உரிமை மாநாடு,

"தனது நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையும் அனைத்து மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் முழுமையாக அனுபவிப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஒவ்வோர் அரசுக்கும் உண்டு என்பதை மறுவுறுதி செய்தல்.

பயங்கரவாதத்துக்குஎதிரானபோரில் தாங்கள் மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கையும் சர்வதேச சட்டத்துக்கு இயைந்ததாக, குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச அகதிகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் இவற்றில் எது பொருத்தமானதோ அதற்கு இயைந்ததாக இருக்க வேண்டியதை அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும்" ஆகியவை உட்பட்ட சில தீர்மானங்களைத்தான் நிறைவேற்றியுள்ளது. ஐ.நாவால் இலங்கை அரசு செய்தது இனப்படுகொலைதான் என்று குற்றம் சாட்ட முடியவில்லை.

இது ஐ.நா. சபை ஆனது சுயமாக இயங்கக் கூடிய ஒரு கட்டமைப்பல்ல அது நீதியின் பால் செயற்படுவதில் மிகவும் பலவீனமாகவே உள்ளது; மேலும் அது உலகவல்லாதிக்க சக்திகளின் தயவில் இயங்குவதால் அதன்பிடிக்குள் நசுங்கிப் போயுள்ளது; அது தான், தோற்றுவிக்கப்பட்ட தன் முழு நோக்கத்தை ஈடேற்றும் பலம் மிக்க சக்தியாக இன்னும் பரிணமிக்க வில்லை என்பதும் எமது துரதிர்ஸ்டம்தான். ஆயினும் நாம் இத்தகைய நிலைகளைப் புரிந்து கருமம் ஆற்றவேண்டியவர்களாக உள்ளோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

தமிழர்களது விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே, உலக நடப்பில் ஆதிக்க சக்திகளின் தான்தோன்றித்தனமான, அதிகார மோகத்தினால் மேற்கொள்ளப்பட்ட போர்களில் இனப்படுகொலை நடந்துள்ளதை மனிதாபிமானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். **இது தவிர்க்கப்படுவது அவசியமானது, மனித குலம் மனிதகுலத்துக்கே செய்யும் மன்னிக்க முடியாத குற்றம்** என்று அறிவிக்கப்பட்டு, சர்வதேச சட்டமாக்கப்பட்டுவிட்டது. அவ்வாறு இது சட்டமாக்கப்படுவதற்கு முன்னின்றுழைத்த அறிஞர்கள், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னால் இது விடயமாக என்ன கூறியுள்ளார்கள் என்பதை நாம் ஒரு முறை மீள நினைத்துப் பார்த் தல் பொருத்தமாகும்.

"அதாவது, அடிப்படையில், மக்கள் தனித்தனியாக கொல்லப்படாது ஒட்டு மொத்த ஒரு குழுவாக கொல்லப் படுவதே **இனப்படுகொலை** என **லெம்கின்** என்பவர் கண்டறிந்தார். இந்த மக்கள் குறித்த ஒரு குழுவின் உறுப்பினர் என்ற வகையிலேயே அவர்கள் கொல்லப்படுகின்றனர் அல்லது தீங்கிழைக்கப்படுகின்றனர் என்பது **லெம்கின்சியின்** கருத்தாகக் காணப்பட்டது. அதாவது, இந்த மக்கள் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்த அல்லது ஒரே இனக்குழுமத்தைச் சேர்ந்த அல்லது ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கமுடியும்.

இது ஒரு உண்மையான நிலையென்பதால், இந்த யதார்த்த நிலையை சட்டம் பிரதிபலித்துக் காணப்பட வேண்டும் என லெம்கின் வலியுறுத்தியிருந்தார். ஆனால், **இந்த மக்கள் தனிமனித உயிரினங்களாக இருப்பதால் இவர்கள் தனித்தனியாகப் பாது காக்கப்படவேண்டுமே ஒழிய ஒட்டு மொத்த ஒரு குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில் இவர்கள் பாதிக் கப்படக்கூடாது என லௌட்டர் பக்ற்** வலியுறுத்துகிறார்.

இது இவ்வாறிருக்க அதிகாரத்தில் இருப்பவர்களின் மனிதநேயமற்ற, அறிவற்ற கொள்கைகளினால், இனப்படுகொலை என்பது அகிலத்தில் இன்னும் தொடரப்படுகின்ற ஒன்றாகவே உள்ளது. பலவீனமான பல இனங்கள் சர்வாதிகாரிகளால் இனப்படுகொலைக்குள்ளாக்கப்படுவது இன்றும் அரங்கேறுகிறது. தடுத்து நிறுத்த யாராலும் முடியவில்லை. இதற்கு 21ஆம் நூற்றாண்டின் சிறந்த உதாரணமாக நம் இனம் உள்ளது.

எமது உரிமைகளை சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகளிடமிருந்து மீட்டுக்கொள்ள தமிழ்த் தேசிய இன விடுதலை என்ற கொள்கை அடிப்படையில், நாம் நடத்திய அனைத்துவிதமான - அகிம்சை வடிவிலான, ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் முறியடிக்கப்பட்டு பாரிய இன அழிவுக்குள்ளாகிய நிலையில் இன்று இருக்கின்றோம்.

அத்தோடு எதுவிதமான தீர்வுகளும் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்படாத நிலையில், அதற்கு சர்வதேசத்தால் நிர்ப்பந்திக்கப்படாத நிலையில் எமக்கான சுயநிர்ணய உரிமையை நாமேதான் போராடிப் பெறவேண்டிய சூழ்நிலைக்கு மீண்டும் தள்ளப்பட்டிருக்கிறோம்.

இச்சந்தர்ப்பத்தில் சுயநிர்ணய உரிமைப்போராட்டம் சம்பந்தமாக மாமேதை லெனின் கூறியிருப்பதையும் இங்கு நாம் புரிந்துகொள்வது எமக்கு ஆரோக்கியமளிப்பதாகவே இருக்கமுடியும்.

"எந்தத் தேசிய இனத்திற்கும், எந்த மொழிக்கும் எந்தவிதமான தனியுரிமைகளும் இல்லவே இல்லை; தேசிய இனங்களது அரசியல் சுயநிர்ணயப் பிரச்சினை, அதாவது, அவை அரசுகளாகப் பிரிந்து செல்லும் பிரச்சினை, முழு அளவுக்குச் சுதந்திரமான, ஜனநாயகமான வழியில் தீர்க்கப்படுதல்; எந்த ஒரு தேசிய இனத்துக்கும் எந்த விதமான சிறப்புரிமையும் அளிப்பதாகவோ, தேசிய இனங்களது சமத்துவத்துக்கு அல்லது தேசிய இனச் சிறுபான்மையினரது உரிமைகளுக்கு ஊறு செய்வதாகவோ, இருக்கும்படியான எந்த நடவடிக்கையும் சட்டவிரோதமானதென்றும், செயலுக்கு வரமுடியாதென்றும் பிரகடனம் செய்து, இம்மாதிரியான நடவடிக்கை அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானதாக, அறிவிக்கப்பட்டு நீக்கப்பட வேண்டும் என்றும், இதனைச் செயற்படுத்த முயலுவோர் குற்றவாளிகள் எனத் தண்டிக்கப்படவேண்டும் என்றும் கோருவதற்கு எந்தக் குடிமகனுக்கும் உரிமை அளித்திடும் சட்டம் ஒன்றை அனைத்து அரசுக்குமாகப் பிறப்பித்தல்," என்பதே லெனினின் கூற்றாகும். ஆட்சிபீடம் சிறுபான்மையினத்துக்கு ஊறுசெய்வது தண்டிக்கத் தக்க குற்றம் என்பதை லெனின் வலியுறுத்தியிருப்பதை நாம் இங்கு காண்கிறோம்.

இத்தகைய உலகின் அறிவியல் பக்கங்கள், இலங்கையின் ஆட்சி பீடத்தின் மனங்களை அலங்கரிக்கவில்லை என்பது சொல்லித் தெரிய வேண்டிய தில்லை.

அநாகரிகமான முறையில் வடக்கு - கிழக்கில் இன்றும் தொடரும் அநாமதேயப்படுகொலைகள், தமிழரின் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுதல், சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு குடியேற்றங்கள் ஆகியன யாராலும் தடுத்து நிறுத்தப் படக்கூடியனவாக இல்லை.

தமிழ்மக்கள் தமது சின்னச் சின்ன உரிமைகளுக்காகவும் கடுமையாகப் போராடவேண்டிய சூழ்நிலையே இங்கு காணப்படுகின்றது. கண்கள் கட்டப்பட்ட நிலையில், வாய்களுக்குப் பூட்டுப் போடப்பட்ட நிலையில், கைகள், கால்களுக்கு விலங்குகள் மாட்டப்பட்ட நிலையிலே மீண்டும் தொடர்கிறது அவலம்...!

உடல்நாராய்க்கிழிக்கப்பட்டு, உதிரம் ஆறாய் ஓடி, நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஈழத்தமிழர்கள், உரிமைக்காய் உயிர்ப்பூக்களை உகுர்க்கும் நிலை தொடரப்பட வேண்டியமையானது, வரலாற்றின் மிகுதிப்பக்கங்களுமாய் ஆகியுள்ளது.

-வெந்தழல்-

## தீங்குவார் ஆட்சி

இந்துமா கடலைச்சுற்றி
எத்தரின் கூடாரங்கள்!

கந்தகச் சுரங்கத்தோடு
கயவராய்ப் பல நாடுகள்!
செந்தமிழ் நிலத்துட் சிங்கச்
சேனையர்க் காகக் கொட்டி
வந்தவல் லரசார் எல்லாம்
வன்னியை முடித்தே விட்டார்!

தாங்கொணாக் கொடுமை யாலும்
தமிழரை இனமாய்க் கொல்லும்
தீங்குவார் ஆட்சி யாலும்
தீமையே உமிழ்வா ராலும்
ஓங்கிய அரக்கத் தாலும்
உயிர் நிலம் பறித்த லாலும்
வேங்கையர் ஆன மண்ணை
விசமிகள் எரித்தார் இந்நாள்!


முப்பது ஆண்டு காலம்
முடிவிலாப் போரினாலே
அப்பிடச் சிங்க ராட்சி
அரக்கராய் அழித்தார் ஆயின்
துப்பிடும் தீர்வென்றாலும்
துட்டர்கள் வைத்தா ரில்லை
உப்பிநூற் றாண்டு காலம்
உலையினிற் தமிழர் செத்தார்!

இலங்கையைத் தங்கள் கையில
இருப்பதற்காக வென்று
அலம்பி கையின் ஈரம்
ஆறு முன் ரசீவான் வந்தான்!
கலங்கிய குளத்தில் மீனை
கடகமாய் அள்ள வந்தும்
துலங்கிய அறிவில்லாமல்
துடித்தவோர் மரணம் கண்டார்!

யானை தன்கை யினாலே
மண்ணிடும் அது போலத்தான்
ஏனையில் இராச பக்சா
இருக்கவும் இந்தி நாட்டார்
பானையில் ஆயு தத்தைப்
படைத்தனர் ஆனால் அந்தச்
சீனனை தடுக்க எண்ணிச்
செந்தமிழ் நிலத்தை விட்டார்!

ஈழமண் அழிப் பாருக்கே
இந்தியம் கூட நின்றும்
பாழது தெரிந்தும் அள்ளும்
பணத்திடை சாக வென்று
தோழமைச் சோனியாளின்
துட்டர சாங்கம் தன்னில்
கோழையர் கருணாநிதியார்
கோடரிக் காம்பாய் நின்றார்!

முன்னூறா யிரமாய் மக்கள்
முட்கம்பிக் கிடையே வைத்து
இன்னுமோர் கிட்லர் போன்றெம்
இனத்தையேமகிந்தன் கொன்றான்!
வன்னியை இராச பக்ச
வளைத்துமே சிதறச் செய்த
நன்னெறி இல்லா னுக்கே
நயந்ததே காந்தி வம்சம்!



வேங்கையாய் நின்ற நிலம் வேரிழந்துபோவதற்குத்
தீங்குமனத் திந்தியமே தீயிட்டார்~ காங்கையில்
ஈழத்தே நின்று இராட்சதர்கள் கூட்டியள்ளக்
கூழக்கை இட்டாரே கொள்!~

-புதியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகற்றிய பேருந்து தரிப்பிடத்தை மீளவும் அமைத்துத் தாருங்கள்

(மல்லாவி)

மாங்குளத்தின் நகரப்பகுதியில் அன்லீன் பால்மா கம்பனியரால் பொதுமக்கள் பாவனைக்கென அமைக்கக்கட்டிருந்த பேருந்துத் தரிப்பிடத்தை முல்லை. மாவட்ட வீதி அதிகார சபை அகற்றியுள்ளது. இவ்விடயம்தொடர்பில்மேலும் தெரிய வருவதாவது, மாங்குளம் நகரப் பகுதியில் பயணிகளுக்கான பேருந் துத் தரிப்பிடம் இல்லாமையால் குழந்தைகள் முதல் வயோதிபர்கள் உட்பட பல தரப்பினரும் கொளுத் தும் வெயிலிலும் மழையிலும் அவ தியுறும் நிலையிலேயே பேருந்துக் காகக் காத்திருந்தனர்.

இவர்களின் நன்மை கருதி மேற் படி கம்பனியினர் யாழ்ப்பாணத் தில் இருந்து தென் பகுதி நோக்கி பயணிக்கும் பேருந்துகளுக்கான தரிப்பிடமொன்றை அமைத்துக் கொடுத்திருந்தமையால் பயணி கள் பெரிதும் நன்மையடைந்தனர்.

குறித்த பேருந்துத் தரிப்பிடம் அமைக்கப்பட்ட போது அவ்விடம் பேருந்துகள் தரித்துச் செல்லும் இடமாகவே இருந்தது. ஆயினும் ஏ-9 வீதிப்புனரமைப்பின் பின்னர் வீதிச் சமிக்ஞை குறியீடுகள் அமை க்கப்பட்ட போது பேருந்துகள் நிறுத்து வதற்கான சமிக்ஞை குறியீடு அவ் வி டத்தில் அமைக்கப்படவில்லை. இதனாலேயே பேருந்துத் தரிப்பி டம் கழற்றி அகற்றப்பட்டதாக இத னுடன் சம்பந்தப்பட்டவர்கள் தரப் பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள் ளது. எனவே அகற்றப்பட்ட பேரு ந்துத் தரிப்பிடத்தை பயணிகள் நலன் கருதி மீளவும் பொருத்த மான இடம் ஒன்றில் அமைத்துத் தர வேண்டும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிடமும் மற்றும் இதனுடன் தொடர்புடைய விளம்பர நிறுவனத்தினரிடமும் பயணிக ளும் மக்களும் கோரிக்கையினை முன் வைத்துள்ளனர். (அ-3-15)

# கச்சதீவை மீளப் பெறுவது குறித்து இந்தியா மீள் பரிசீலிக்கும்

கச்சதீவை பெறுவது தொடர்பில் இந்தியா மீள்பரிசீலனை செய்யும் என்று இந்திய அமைச்சர் வீ.நாரா யணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களி டம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் தமிழக சட்ட சபை யில் வைத்து கச்சதீவின் அதிகார த்தை மீளப் பெற்றுக் கொள்ள வலி யுறுத்தி தீர்மானம் ஒன்று நிறை வேற்றப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்த நிலை ப்பாட்டை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே இது தொடர்பில் திரா விட முன்னேற்றக் கழகத்தின் தலை வர் மு.கருணாநிதி இந்திய உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வாக்காளர் இடாப்புக்கள் தயாரிக்கும் பணி ஆரம்பம்

2013 ஆம் ஆண்டிற்கான வாக் காளர் இடாப்பு தயாரிக்கும் பணி கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர் தல் திணைக்களம் கூறியுள்ளது. வாக்காளர்களுக்கான மாதிரி விண் ணப்பப்படிவங்கள் கிராம சேவகர்க ளினூடாக நேற்று முன்தினம் முதல் விநியோகிக்கப்பட்டு வருவதாக தேர் தல் திணைக்கள உயரதிகாரி ஒரு வர் குறிப்பிடுள்ளார்.

வாக்காளர்களைப் பதிவு செய் யும் பணிகளை எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி நிறைவு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஜூன் 2 ஆம் திகதி முதல் நிரப்பப்பட்ட விண் ணப்பங்கள் கிராம சேவகர்களினூ டாக சேகரிக்கப்பட்டு மாவட்ட தேர் தல் அலுவலகங்களில் ஒப்படைக் கப்படவுள்ளன.

2012 ஆம் ஆண்டுக்கான வாக் காளர் இடாப்பு நிறைவு செய்யப்பட் டுள்ளதோடு அவை கிராம சேவகர் அலுவலகங்கள், மாவட்ட செயல கம், மாவட்ட தேர்தல் அலுவலகம் என்பவற்றில் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. 2012 புதிய வாக்கா ளர் இடாப்பில் தமது பெயர் இடம் பெறாதவர்கள் புதிதாக விண்ணப் பிக்க வேண்டுமென திணைக்க ளம் கோரியுள்ளது. (அ-2)

# இளைஞர் பாராளுமன்ற அமர்வு 23ஆம் திகதி

இரண்டாவது இளைஞர் பாரா ளுமன்றம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

அறிவு,மனநிலை,திறமை மற் றும் தலைமைத்துவ ஆளுமை களை விருத்தி செய்து, நாட்டின் எதிர்காலத்திற்கு இயலுமை மிக்க நபராக முகம் கொடுக்க தேவை யான சக்தியையும் தைரியத்தை யும் வழங்குவதே இளைஞர் பாராளு மன்றத்தின் முக்கிய நோக்காகும்.

ஒவ்வொரு பிரதேச செயலக ரீதி யில் வாக்களிப்பு முறையில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் பாராளு மன்ற உறுப்பினர்களும் நேர் முகத் தேர்வு மூலம் தெரிவுசெய்யப்பட்ட செனட் உறுப்பினர்களும் சத்தியப் பிரமாணம் செய்து பதவிகளை ஏற் கவுள்ளனர்.

இந்நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி மகரகமவில் அமைந்துள்ள இளைஞர் பாராளுமன்ற வளாகத் தில் இடம்பெறவுள்ளது.

தெரிவாகிய உறுப்பினர்கள் தேசிய உடை மற்றும் ஐரோப்பிய கலாசார உடையும் பெண்கள் வெண்ணிறச் சேலையும் அணிந்து வருமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக இளைஞர் பாராளும ன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி செயலமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிமுதல் துல் கிரிய மாஸ் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. 3நாட்கள் இடம் பெறும் இந்நிகழ்வில் இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவி ருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெருமதேசியஇளைஞர்சேவைகள்மன் றத் தலைவர் சட்டத்தரணி லலிதபி யூம் பெரேரா உள்ளிட்டவர்கள் பங் கேற்கவுள்ளனர். (அ-3-23)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2013.05 18

- ❖ 1565- ஒட்டோமான் படைகள் மால்ட் டாவை அடைந்தன. மால்ட்டாவில் ஆக்கிரமிப்பு ஆரம்பமாகியது.
- ❖ 1652 - வட அமெரிக்காவிலேயே முதன் முதலில் அடிமைத் தொழிலை இல் லாதொழிக்கும் சட்டத்தை ரோட் தீவு கொண்டு வந்தது.
- ❖ 1765 - கனடாவின் மொன்ட்றியால் நகரத் தின் பெரும்பகுதி தீயினால் அழிந்தது.
- ❖ 1803 - ஐக்கிய இராச்சியம் பிரான்ஸ் மீது போரை அறிவித்தது.
- ❖ 1804 - முதலாம் நெப்போலியனை பிரெஞ்சு மன்னனாக செனட் தெரிவு செய்தது.
- ❖ 1869 -ஏசோ குடியரசு கலைக்கப்பட்டு ஜப்பானுடன் இணைக்கப்பட் டது.
- ❖ 1896 - கோடின்கா துயரம்: ரஷ்ய மன்னன் இரண்டாம் நிக்கலசின் முடிசூடும் நிகழ்வுக் கொண்டாட்டத்தின்போது "கோடின்கா" என்ற இடத்தில் இடம் பெற்ற நெரிசலில்சிக்கி ஆயிரத்து 389 பேர் உயிரிழந்தனர்.
- ❖ 1897 - ஐரிய எழுத்தாளர் பிராம் ஸ்டோக் கர் எழுதிய டிராக்குலா புதினம் வெளியிடப்பட்டது.
- ❖ 1880-எடிசனின் போனோகிராஃபின் காப்புரிமப் படிமம்.
- ❖ 1900 - தொங்கா ஐக்கிய இராச்சியத்தின் பகுதியாக்கப்பட்டது.
- ❖ 1910 -ஹேலியின் வால்வெள்ளியின் வாலினூடாக பூமி சென்றது.
- ❖ 1927 -மிச்சிகனில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் குழந்தைகள் உட்பட 45 பேர் உயிரிழந்தனர்.
- ❖ 1944 -கிரிமிய தார்த்தார்கள் சோவியத் அரசினால் வெளியேற்றப்பட்டனர்.
- ❖ 1956 - உலகின் 4ஆவது பெரிய மலையான லகோத்ஸே மலையின் உச்சியை முதன் முதலில் சுவிட்சர்லாந்து மலை யேறிகள் எட்டினர்.
- ❖ 1969-அப்பல்லோ 10 விண்ணுக்கு ஏவப் பட்டது.
- ❖ 1974-சிரிக்கும் புத்தர் என்ற பெயரிடப் பட்ட திட்டத்தில் இந்தியா தனது முத லாவது அணுகுண்டை வெற்றிகர மாக சோதித்தது.
- ❖ 1980 -வோஷிங்டனில் சென் ஹெலன்ஸ் மலை தீ கக்கியதில் 57 பேர் உயி ரிழந்தனர். 3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சேதம் ஏற் பட்டது.
- ❖ 1984 -அன்னலிங்கம் பகீரதன் சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது விடுதலைப் புலிப் போராளி என்ற பெருமையைப் பெற்றார்.
- ❖ 1990 -பிரான்சில் TGV தொடருந்து உலகின் அதிஉயர் வேகத்தில் (515.3கி.மீ/ மணி) சென்றது.
- ❖ 1991 - ஹெலன் ஷார்மன் விண்வெளிக்குச் சென்ற முதலாவது பிரித்தானியர் என்ற பெருமையைப் பெற்றார்.
- ❖ 1991-வடக்கு சோமாலியா சோமாலிலாந்து என்ற பெயரில் மீதமான சோமா லியாவில் இருந்து விடுத லையை அறிவித்தது. ஆனாலும் அனைத் துலகம் இதனை அங்கீக ரிக்க வில்லை.
- ❖ 2006 - நேபாளம் மதசார்பற்ற நாடாகவும் அதன் மன்னர் ஒரு சம்பிரதாய மன்னராகவே இருப்பாரெனவும் அந்நாட்டு பாராளுமன்றத்தில் தீர் மானம் நிறைவேறியது.
- ❖ 2009 -ஈழப்போர் முடிவுக்கு வந்ததாக இலங்கை அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது. இலங்கையும் அதன் நட்பு நாடுகளும் ஒருசேர 53 ஆயி ரத்திற்கும் மேற்பட்ட பூர்வகு டிக ளான தமிழ் மக்களைக் கொன்ற நாள் என தமிழர்கள் குற்றம் சாட்டிய நாள்.


*பிறப்புக்கள்*

- ❖ 1048 - ஓமர் கையாம், பார்சியக் கவிஞர், கணிதவியலாளர் (இ. 1131)
- ❖ 1908 - இயான் பிளெமிங், ஆங்கில எழுத் தாளர் (இ. 1964)
- ❖ 1920 -திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் (இ. 2005)
- ❖ 1913 - நீலம் சஞ்சீவ ரெட்டி, இந்தியாவின் 5 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1996)
- ❖ 1933 -தேவகவுடா, இந்தியாவின் 11 ஆவது பிரதமர்
- ❖ 1939 - பீட்டர் குருன்பெர்க், ஜேர்மனிய இயற்பியலாளர்

*சிறப்பு தினம்*

- ❖ அனைத்துலக அருங்காட்சியக தினம்

*திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்*



அருளாளர் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கத்தோலிக்க திருச்சபையின் 264 ஆவது திருத்தந்தை ஆவார். 1920 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி போலந்தின் வாதோவிச்சில் பிறந்தார். இவர் 26 ஆண்டுகள், 168 நாட்கள் உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக பணியாற்றினார். இதுவரை இருந்த திருத்தந்தையர்களில் போலந்து நாட்டைச் சேர்ந்த முதலாவது திருத்தந்தை இவராவர். மேலும் 1520 இற்கு பின்னர் இத்தாலியர் அல்லாத ஒருவர் திருத்தந்தையானதும் இதுவே முதற்தடவையாகும்.

இவர் 1340 பேருக்கு அருளாளர் பட்டமும், 483 பேருக்கு புனிதர் பட்டமும் அளித்துள்ளார். இது, இவருக்கு முன், ஐந்து நூற்றாண்டுகளாக இருந்த எல்லா திருத்தந்தையர்களின் கூட்டு எண்ணிக்கையை விட அதிகமாகும்.

இவர் 20 ஆம் நூற்றாண்டின் மிக முக்கிய தலைவர்களுள் ஒருவராக போற்றப்படுகின்றார்.


தன் ஆட்சிகாலத்தில் இவர் 129 நாடுகளுக்கு பயணம் செய்துள்ளார். தன் தாய்மொழியான போலியம் மட்டுமல்லாமல் இத்தாலியம், பிரெஞ்சு, ஜேர்மன், ஆங்கிலம், எசுப்பானியம், போர்த்துக்கீசம், உக்குரேனிய மொழி, ரஷ்யன், குரோவாசிய மொழி, எஸ்பெராண்டோ, பண்டைய கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகள் தெரிந்திருந்தன.

தனது ஒரே சகோதரரான மருத்துவர் எட்மண்டை 1932இல் இழந்தார். இராணுவ அதிகாரியான தனது தந்தையை 1941 இல் இழந்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் கல்விப்படிப்பை மீண்டும் தொடர்ந்து 1946இல் குருவானார். 1964இல் கிராக்கோவ் பேராயராகவும் 1967இல் கர்தினாலாகவும் உயர்த்தப்பட்டார்.

1978ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 இல் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கர்தினால் கரோல் யோசேப் வொய்த்திவா, அச்சமயம் இரண்டாம் ஜான் பால் என்ற பெயரைத் தெரிவு செய்தார். இவர் 2005 ஏப்ரல் 2ஆம் திகதி காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தினது உயிர்ப்பல்வகைமையும் சமகால நிலையும்




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 26-II

(சென்றவாரத் தொடர்ச்சி...)

வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், வறிய மக்களின் இன்னலைப்போக்கவும் கிடைக்கின்ற வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கவும் இன்னும் தொழிற்சாலைகளை நிறுவி தொழில்வாய்ப்புக்களைப் பெருக்கவும் அபிவிருத்தி வழி செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பே எங்கும் ஓங்கி நிற்கின்ற நிலையில் நமது சூழலைப் பற்றியும் நாம் கரிசனை கொள்ளாது விட்டால் ஒருகாலத்தில் நாம் வாழும் பிரதேசம் பாலைவனமாக மாறிவிடும் வாய்ப்புண்டு. நாம் நமக்காக என இல்லாது நாளைய சந்ததிக்காக எனக்கொள்ளலாம். இதற்காகத் தான் நன்கு திட்டமிட்டு செயற்படுத்தப்படும் விடயங்களை முன்னுரிமைப்படுத்தி அனைவரினதும் ஒத்துழைப்புடன் எமது சூழலையும் அதிலுள்ள உயிரினங்களையும் தாவரங்களையும் பாதுகாக்கவேண்டும். இதை எமது நாட்டினது சொத்துக்கள் ,எம்மிடமுள்ள வளங்கள் அனைத்தும் எமக்கானவை.அத்துடன் இவற்றைப் பேணிப்பாதுகாக்கவும் நாம் நன்கு திட்டமிடவேண்டும்.

எம்முடன் வாழ்ந்து எமக்கு வழிகாட்டும் மரங்களுள் தனித்துவமானது பனை என்னும் கற்பகதரு. இம்மரம் வடபகுதியில் வாழும் மக்களது அடையாளமாகும். அது தனது அனைத்துப் பொருட்களையும் பயனுள்ளதாக வைத்திருக்கும் அதிசயமரம் இது. பனை மரத்தை நம்பியே எமது வாழ்க்கை நகர்ந்திருக்கின்றது. தற்போது விஞ்ஞானத்தொழில் நுட்பம் பலவிதமான பொருட்களை உற்பத்தி செய்தாலும் இயற்கையான மரங்களுடனான வாழ்க்கைக்கு மாற்றீடு இல்லையே. இருப்பினும் காலவோட்டத்தில் நாமும் விதி விலக்கல்ல என்பதனால் நம்முடைய பழக்கவழக்கங்களையும் மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இருப்பினும் எமக்கு உணவு தரும் தாவரங்களை உதறித் தள்ளிவிட முடியாது. அதுதான் இயற்கையின் விபரீதமும் விளையாட்டும் எனலாம்.



உயிரியல் பல்வகைமையில் சூழல் தன்னால் இயங்கும் சக்தியை தருகின்றது. அதிலிருக்கின்ற அனைத்து உயிரினங்களும் தமக்கெனத் தக்கணப்பிழைக்க வழி வைத்திருந்தும் குறிப்பிட்ட சில அருகிப்போய் விடுகின்றன. இந்த அடிப்படையிலேயே நாம் எமது சூழலில் வாழுகின்ற அனைத்து உயிரினங்களையும் பாதுகாக்க முயலவேண்டும். இது தனிப்பட்ட ஒருவரின் ஆளுமைக்குட்பட்ட விடயமல்ல. ஆனால் தனியொருவரும் இதற்காக ஒத்துழைக்க முடியும். சுயநலத்தை விட்டு பொதுநலத்திற்கு வரும் நல்ல மனிதர்களுக்கு உயிரினப் பல்வகைமையின் தார்ப்பரியம் இலகுவாகப் புரியும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இயக்கச்சி நோக்கிப் பயணிக்கையில் பாதையின் இருமருங்கிலும் பனை மரங்கள் நிற்பதை அவதானித்திருப்பீர்கள். ஆனால் அதில் குறிப்பிட்ட சில பனை மரங்கள் ஆலமரம் மற்றும் அரசமரம் ஆகியவற்றுடன் இணைந்து வளர்ந்திருப்பதை அவதானிக்கலாம். ஆலும் அரசும் தனியாக நிற்கக்கூடிய பெரிய இரு வித்திலை மரங்கள். அவை ஒருவித்திலை மரமான பனை மரத்தின் அடியில் சுற்றிப் பெரிதாக வளர்ந்திருந்தாலும் பனை மரத்திற்கு, அதன் விருத்திக்கு எந்தவிதத் தீங்கையும் செய்ததில்லை. அதேநேரத்தில் பனைமரமும் எந்தத் தேவைக்கும் ஆலமரத்தையோ அரச மரத்தையோ நம்பியிருப்பதில்லை.

பனை மரம் ஒருவித்திலையாகவும் ஆல மரம் மற்றும் அரச மரங்கள் இருவித்திலைத் தாவரங்களுமாதலால் அவற்றுக்கான தேவைகளும் வேறு வேறானவை. இங்கே இவ்விரண்டு விசாலமாக வளரும் மரங்களும் அடிப்பகுதியைச் சுற்றி வளர்ந்திருந்தாலும் பனை மரம் ஓங்கி நடுவில் நெடுவாக வளர்ந்திருப்பதையும் அது தனது அடையாளத்தை அனைவருக்கும் காட்டி நிற்பதையும் கண்கூடாக காணலாம். இந்தச் செய்தி நமக்கு முக்கியமானது. நாம் நமது அடையாளத்தை நாமாக தொலைக்கும் வரையில் எமக்கென்ற அடையாளம் என்றும் இருக்கும். நமது மொழி, கலாசாரம், மதம்,கலை என அனைத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும். அதைவிடுத்து ஏனையவரை குறைகூறுவதில் எந்தவித நியாயமும் இல்லை. இயற்கை நமக்கு தந்த பாடங்களில் ஒன்று இது. இணைந்து வாழ்வதி லுள்ள பயன்களையும் அதிலும் தத்தமது அடையாளத்தைத் தொலைக்காது இருக்கும் தன்மையும் நமக்கெல்லாம் நல்ல படிப்பினையாகக் கொள்ளலாம். ஆல்போல் தழைத்து அரசு போல் வேரூன்றி வாழ்க என புதுமணத் தம்பதிகளை பல்லாண்டு வாழ்த்தும்போது நாம் ஆலமரத்திற்கும் அரசமரத்திற்கும் கொடுக்கின்ற மரியாதையைப் பாருங்கள். பனையுடன் இணைந்து வாழ இம்மரங்கள் விரும்புவதும் அதனால்நாம் அவற்றுக்குக்கொடுக் கும் மரியாதையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த மரியாதையை நாம் நம்முடன் வாழும் எமது மக்களுக்கு கொடுப்போமா?

வடபிராந்தியத்தில் உயிர்ப்பல் வகைமைப் பூங்காக்கள் (Biodiversity park) உருவாக்கப்படவேண்டும். இவற்றின் மூலமே உயிர்ப்ப ல்வகைமை பற்றியும் அதில் இணைகின்ற தாவரங்களை ஒன்றாக்கி பல்லினத் தாவரங்களின் பலத்தை காண்பிக்கவேண்டும். அபிவிருத்தி போகின்ற போக்கில் வட பகுதியும் ஆச்சரியப்படும் அளவுக்கு அனைத்து வளங்களையும் கொண்டிருக்கும் பிரதேசமாகமாறும். அந்த மாற்றம் விரும்பித் தேடப்பட்டது. பல்லின தாவரங்கள் கூட்டாக இணைந்து பலமுள்ளதாக வளமுள்ளதாக மாறும்போது மேலேகூறப்பட்ட அனைத்துமே உண்மையானதாகும். தாவரங்களை வளர்த்து மேம்படுத்தி வினைத்திறனாக மாற்ற வேண்டும். வாருங்கள் முயற்சி செய்வோம்.

# வானொலி நாடக கற்கைக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் யாழ்.இளைஞர், யுவதிகளுக்கான இலவச வானொலி நாடகக் கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ளும் ஆர்வமுடையவர்கள் தாம் பயிற்சி நெறியில் கலந்துகொள்வதன் நோக்கம் என்ன? பயிற்சி நெறியில் எவ்வகையான ஆற்றலை பெற்றுக்கொள்ள முனைகிறீர்கள்? மற்றும் இப் பயிற்சி நெறியில் கிடைக்கும் அறிவினை யாழ்.மக்களுடைய நலனுக்காக எவ்விதம் பயன்படுத்துவீர்? ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதுடன் சுய விருப்பக் கடிதத்தில் தங்களுடைய தொலைபேசி இலக்கத்தினையும் குறிப்பிட்டு எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்பாக info@ldjf.org. என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது தபால்மூலம் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

கலை இலக்கிய ஊடக மற்றும் சமூகப் பிரச்சினைகள் பற்றிய ஆர்வமுடைய இளைஞர், யுவதிகள் இப்பயிற்சிப்பட்டறைக்கு விண்ணப்பிக்க முடியும்.

சமூகப் பிரச்சினைகளைத் தாக்கமான முறையில் எடுத்துக்காட்டி அவற்றுக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதில் மக்களின் உளப்பாங்கில் நேர்நிலை மாற்றங்களை ஊக்குவிக்கும்கலையேவானொலிநாடகமாகும்.

வானொலி நாடகத்தில் இளைஞர்களைப் பயிற்றுவித்து அவர்களின் வாயிலாக மக்கள் எதிர்கொள்ளும்பிரச்சினையைவெளிக்கொண்டு வரும் செயற்றிட்டம் ஒன்றை இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் இலவசமாக நடத்தி வருகின்றது.

இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் சமூகவலுவாக்கத்துக்கான மற்றுமொரு வானொலி நாடகப் பயிற்சிப் பட்டறையொன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. யுத்தத்துக்கு பின்னர் யாழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் குறிப்பாக இளைஞர்கள், பெண்கள், மீனவ சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சகவாழ்வு தொடர்புடைய பிரச்சினைகள் பற்றிய முக்கிய கவனம் செலுத்துவதாக இவ் வானொலி நாடகப் பயிற்சி நெறி அமையும்.

மக்களுடைய பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை வானொலி நாடகத்தினூடாக எடுத்துக் கூறுவதும் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் மூலத் தன்மையை அறிந்து அவற்றை ஊடகத்தினூடாக வெளிக்கொண்டு வரும் இளைஞர்களை உருவாக்குவதுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்ளும் இரு நாட்கள் ஆய்வு, பத்து நாட்களுக்கான வானொலி நாடகவர்க்கப் பயிற்சி மற்றும் கொழும்புக்கான ஊடக சுற்றுப் பயணம் என்பன இப்பட்டறையில் அடங்கும். தெரிவுசெய்யப்படும் 20 இளைஞர், யுவதிகளுக்கு இலவசமாக பயிற்சியும் தங்குமிடம் உணவு வழங்கப்படுவதுடன் போக்குவரத்துச் செலவுகளும்வழங்கப்படும். இப்பயிற்சிநெறி ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ளது.

இவ்வானொலி நாடகப் பயிற்சிப் பட்டறை தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 077 6653694 அல்லது 0117209511 ஆகிய தொலைபேசி இலக்கத்துடனும் இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் இலக்கம் 8/5, லியனகே மாவத்தை, நாவல, ராஜகரிய என்ற தபால் முகவரியுடன் www.ldif.org என்ற இணைய முகவரியிலும் தொடர்பு கொள்ளமுடியும். (அ-2-21)

# வேளாங்கண்ணி திருவிழா

மிருசுவில் பழைய வாய்க்கால் தூய வேளாங்கண்ணி சிற்றாலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை தேவ நற்கருணை விழா இடம்பெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. இத்திருவிழா நாளில் இவ்வாலயம் யூபிலி ஆண்டினுள் காலடி எடுத்து வைப்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# தாயையும் மகளையும் கரம் பிடித்தவருக்கு சிறைத்தண்டனை

(கொழும்பு)

தாயையும் மகளையும் கரம்பிடித்த ஒருவருக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் மகளை திருமணம் செய்து கொண்ட ஒருவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முதல் திருமணம் பற்றி தகவல்களை வழங்க மறுத்தமை மற்றும் இரண்டு திருமணங்களை செய்து கொண்டமைக்காக குறித்த நபருக்கு அவிசாவெல நீதிமன்றம் தலா மூன்று மாத காலங்களான இரண்டு கடூழிய சிறைத்தண்டனையையும் விதித்துள்ளது. சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 75 ஆயிரம் ரூபா நட்ட ஈடு வழங்க வேண்டுமென மேலும் உத்தரவிட்டுள்ளார்.

தற்போது 44 வயதான பெண்ணை 2009 ஆண்டில் கெட்டஹெத்தா விவாகப் பதிவு காரியாலயத்தில் திருமணம் செய்து கொண்டதுடன் 2012 ஆம் ஆண்டில் தெரனியகல விவாகப் பதிவு காரியாலயத்தில் 20 வயதான மகளையும் குறித்த நபர் திருமணம் செய்து கொண்டுள்ளார்.

தனது தாயின் கணவர் எனத் தெரிந்தும் திருமண பந்தத்தில் மகள் இணைந்து கொண்டமையினால் சம்பவத்தில் முதல் மனைவியான குறித்த மகளின் தாயே சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளார். ஆயினும் மகளை ஏற்றுக் கொள்வதாக குறித்த நபர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஹெல உறுமய

## 13 ஆவது திருத்த சட்டத்தை இரத்துச் செய்ய முயற்சி

13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய ஜாதிக ஹெல உறுமய கட்சி பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளது.

அரசியல் சாசனத்திலிருந்து இந்த திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு உத்தேச பிரேரணை ஒன்றை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு கட்சியின் மத்திய செயற்குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

தங்களது சுய தீர்மானத்திற்கு ஏற்ற வகையில் இந்த பிரேரணைக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க கட்சித் தலைவர்கள் ஆவன செய்ய வேண்டுமென கட்சித் தலைவர்களிடம் மத்திய செயற்குழு கோரிக்கை விடுக்கவுள்ளது.

இந்த உத்தேச பிரேரணை தயாரிக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இந்தப் பிரேரணை தொடர்பில் விளக்கம் அளிக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ஆர்ப்பாட்டங்கள் மூலம் அரசை வீழ்த்த முடியாது

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு



(கொழும்பு)

ஆர்ப்பாட்டங்கள் மூலமோ அழுத்தங்கள் மூலமோ அரசாங்கத்தை வீழ்த்த முடியாது. அரசாங்கம் மிகுந்த பலம் வாய்ந்ததாக உள்ளதென பாராளுமன்ற சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மின் கட்டண உயர்வு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 21 ஆம் திகதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

பெரிதாக எதையோ சாதிக்கப் போவதாக எண்ணி கடந்த 15 ஆம் திகதி எதிர்க்கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டம் தோல்வியில் முடிந்தது போலவே 21 ஆம் திகதி நடைபெறவுள்ள எதிர்ப்பு நடவடிக்கைகளும் புஷ்வாணமாவது உறுதியெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அடுத்தடுத்த தோல்வியைச் சந்தித்துள்ள எதிர்க்கட்சியினர் எதையாவது செய்து அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு முயற்சிக்கின்றனர். இது அவர்களது பகல் கனவாகும்.

அவர்களது எந்த ஆர்ப்பாட்டமும் அழுத்தங்களும் அரசாங்கத்தை கவிழ்க்கவோ பலவீனப்படுத்தவோ முடியாது. ஏனெனில் மக்கள் பலத்தில் கட்டியெழுப்பியுள்ள அரசாங்கம் மிகுந்த பலமுள்ளதாக உள்ளதென் பதை அவர்கள் உணர வேண்டும். பல்வேறு காரணங்களைக் காட்டி மக்களை திசை திருப்பலாம் என்ற எண்ணத்தில் எதிர்க்கட்சிகள் அண்மையில் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டம் தோல்வியில் முடிந்தது.

அதைப் போன்றே 21 ஆம் திகதி அவர்கள் எத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொண்டாலும் அது தோல்வியிலேயே முடியும் எனவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக போராட்டம்

## ஒன்றிணையுமாறு துண்டுப் பிரசுர விநியோகம்



அதிகரிக்கப்பட்டுள்ள மின் கட்டணத்திற்கு எதிராக மே 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒன்றிணைந்த போராட்டத்தை மேற்கொள்ள கோரி தொழிற்சங்க ஒருங்கிணைப்பிற்கான இணைப்புக்குழுவின் சார்பில் வவுனியா நகரில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சந்திரசேகரன் தலைமையிலான குழுவினரால் நேற்று முன்தினம் இந்தத் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

குறித்த துண்டு பிரசுரத்தில் ஏமாற்றுத் தன்மை கொண்ட திருத்தங்களுக்கு சிறைப்படாது அதிகரித்த மின் கட்டணத்தினை இரத்துச் செய்ய அரசாங்கத்தை வலியுறுத்துமாறு கோரப்பட்டுள்ளதுடன் பொதுமக்கள், உழைக்கும் மக்கள், கைத்தொழிற்றுறை உரிமையாளர்கள், வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள், விவசாயிகள் எனத் தனித்தனியாக போராட்டத்திற்கு அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது.

14 தொழிற்சங்கங்கள் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-250)

# வீதி புனரமைப்பில் அசமந்தப்போக்கு

(றெட்பானா)

றெட்பானா கிராமத்தில் வீதி அமைக்கும் பணியினை விரைவுப்படுத்தக்கோரி மக்களால் பலதரப்பட்ட அதிகாரிகளை கேட்டுக் கொண்ட போதும் அப்பணியில் அசமந்தப் போக்கினையே அதிகாரிகளும் ஒப்பந்ததாரர்களும் காட்டி வருகின்றனர்.

இங்கு ஒப்பந்ததாரர்களால் வீதி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் இருந்து இங்குள்ள மக்கள் பல சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

அரசியல் செல்வாக்கு காரணமாகவே ஒப்பந்ததாரர்களால் தொடர்ந்தும் இப்பணியில் அசமந்த போக்கினை காட்ட முடிகின்றது என மக்கள் மத்தியில் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. இதன் காரணமாகவே பிரதேச செயலகமும் கண்டும் காணாதது போல் உள்ளதாக கூறப்பட்டு வருகின்றது. தொடர்ந்தும் இந்நிலை காணப்பட்டு வருவதால் இங்கு ஏற்படுகின்ற தொடர் விபத்துக்களை தவிர்க்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிடுவதுடன் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இக்கிராமமக்களின் அவாவாகவுள்ளது. (அ-3-20)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் (தங்கம்மா ரீச்சர்)

(ஓய்வுநிலை ஆசிரியர் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)

அன்னை மடியில் 10.07.1937

இறைவனடியில் 28.05.2012

அன்பால் அரவணைத்து இனிய அம்மாவாய் அமுதமொழி பல பேசி ஆறுதல் தந்து
ஆசிரியையாய் அன்புச் சகோதரியாய் உற்ற தோழியாய் உறுதுணை நெஞ்சினாய்
எத்தனை வகிபாகம் எப்படி முடிந்ததம்மா? தங்கமான இதயத்தோடு தங்கம்மா என்றழைத்த
எங்கள் அம்மாவே தெய்வத்தின் நிழலடைந்து ஓராண்டு ஆனதம்மா! உன் நினைவில்
உன் தெய்வம் கோயிலாக மீள உருக்கொண்டு உன்காட்சி தருகின்ற வேளையிலே
உமது பிரிவை மறக்க முடியாது தவிக்கும் உன் உறவுகளுக்கு அமைதி தாருமம்மா!

(2662)

சிவபுரி, உசன்,
மிருசுவில்.

உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசேன் புயல் தாக்கத்தினால் பங்களாதேஷில் 45 பேர் பலி

## 10 இலட்சம் பேர் இடம்பெயர்ந்தனர்

பங்களாதேஷில் மகாசேன் புயல் தாக்கத்தினால் 45 பேர் உயிரிழந்தனர். 80 இலட்சத்து 20 ஆயிரம் பேர் வரை வீடுகளை இழந்துள்ளனர்.10 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

வங்கக் கடலில் உருவான மகாசேன் புயல் பங்களாதேஷ் மற்றும் மியன்மார் நாடுகளை நோக்கி நகர்ந்தது. அது பலகீனம் அடைந்து பங்களாதேஷின் சிட்டகாங் அருகே கரையை கடக்கும் என அறிவிக்கப்பட்டது. அப்போது சிட்டகாங், காஸ்பஷார் ஆகிய கடற்கரை பகுதிகளில் பலத்த காற்றுடன் மழையும் கொட்டியது. இதனால் மரங்கள் முறிந்து வேருடன் சாய்ந்தன.

ஆயிரக்கணக்கான வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன. ஏராளமான வீடுகளின் சுவர்கள் இடிந்து சேதம் அடைந்தன. கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். வெள்ளப் பகுதிகளில் இருந்து இதுவரை 10 இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் அரசு அறிவித்துள்ளது.

அதே நேரத்தில் 80 இலட்சத்து 20 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து வாழ்க்கை தரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. மகாசேன் புயல் தாக்கியதில் பங்களாதேஷில் இதுவரை 45 பேர் பலியாகி உள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். புயல் மழையில் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியிலும், நிவாரண பணிகளிலும் பங்களாதேஷ் அரசு தீவிரமாக உள்ளது.

கடற்படை கப்பல்கள் மற்றும் இராணுவ ஹெலிகாப்டர்களும் இராணுவ வீரர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பங்காளதேசத்தை தாக்கிய புயலின் பாதிப்பு மியன்மாரிலும் எதிரொலித்தது. அங்குள்ள ராஹின் மாகாணத்தில் பலத்த மழை பெய்தது. அப்பகுதியில் இருந்து சுமார் ஒரு இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



## சிறுவர்களை கொடுமைப்படுத்தி திருட்டில் ஈடுபட்ட திருடர் கூட்டத்தின் தலைவனுக்கு 7 ஆண்டு சிறை

பாரிஸ் நகர் பேருந்துகளில், ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் முந்நூறு யூரோ பிக்பொக்கெட்டுகளை அடித்துக கொண்டு வந்து தரும்படி சிறுவர், சிறுமிகளைக் கொடுமைப்படுத்திய திருட்டுக் கூட்டத்தின் தலைவனுக்கு ஏழாண்டுச் சிறைத்தண்டனை கிடைத்துள்ளது.



மெட்ரோ ரயிலில் நடைபெற்ற 75 சதவீதம் திருட்டுக்கு இவரே பொறுப் பாவர் என்று மாநகர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தத் திருட்டுக் குழுவில் சிறுமிகளும் உண்டு.

இவர்களுக்கு இலக்கு விதிக்கப்படுகிறது. இலக்கை அடையாவிட்டால் அடி, உதை, சிகரெட் டால் சூடு வைத்தல் போன்ற தண்டனைகள் வழங்கப்படுகிறது. தற்போது இக்குழுவைச் சேர்ந்த 20 பேர் சிறையில் ஓராண்டு முதல் ஐந்தாண்டு வரை சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

கடந்த 2010ஆம் ஆண்டில் பிடிபட்ட இக்குழுவினரால், கடந்த 2009ஆம் ஆண்டில் மட்டும் பாரிஸ் நகரில் 1.3 மில்லியன் யூரோ பணம் திருடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனில் வேலையில்லாப் பிரச்சினை

பிரிட்டனில் கடந்த 2011ஆம் ஆண்டிற்கு பின்னர் வேலையின்மை விகிதம் அதிகரித் துள்ளதால், அதற்காக உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்தோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்று கூறப்படுகிறது. கடந்த மார்ச் மாதம் வேலையில்லாத காரணத்தால் உதவித்தொகை வேண்டி மனு செய்தவர்களின் எண்ணிக்கை 3000 பேராக இருந்தது. ஆனால் ஏப்ரல் மாதம் இது இன்னும் அதிகரித்து 7300 பேராக மாறியுள்ளது.

பிரிட்டனின் பொருளாதாரம் தற்போது எழுச்சி பெற்று வருகின்ற நிலையில், வேலையின்மை விகிதம் 4.5 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இதே நிலை இருந்தது குறிப்பிடத்தக்கது.



போப் பிரான்சிஸ் வத்திக்கான் நகரில் உள்ள சென் பீற்றர் சதுக்கத்தில் பொது மக்களின் முன் புறாவை பறக்க விடும்போது...

## 51 இந்திய மீனவர்கள் விடுதலை?

பாகிஸ்தான் சிறைகளில் உள்ள 51 இந்திய மீனவர்கள் மனிதாபிமானம் மற்றும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலைசெய்யப்படுவார்கள் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

மீனவர்களை விடுதலை செய்ய இடைக்கால பிரதமர் மிர் கஸார் கான் கோசோ முடிவு செய்திருப்பதாகவும், அவர்கள் ஏற்கனவே தங்களின் தண்டனைக் காலத்தை நிறைவு செய்திருப்பதாகவும் பிரதமர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் இந்திய சிறைகளில் உள்ள பாகிஸ்தான் கைதிகளை இந்திய அரசு விடுதலை செய்யும் என்று கோசோ நம்பிக்கை தெரிவித்துள்ளார். ஆனால் எப்போது இந்திய வீரர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்பது பற்றி தெரிவிக்கப்படவில்லை.

## சிரிய விவகாரம்; ஐ.நா.தீர்மானத்துக்கு ஆதரவாக 107 நாடுகள்

சிரியாவுக்கு எதிராக ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது இந்தியா வாக்களிக்காமல் தவிர்த்தது. சிரியாவில் ஜனாதிபதி ஆஸாத் தரப்புக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது. இதில் சிரிய அரசு கனரக ஆயுதங்களை பயன்படுத்தி தாக்கி வருகிறது. பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்களிலும் ஈடுபடுகிறது. சிரியாவில் விரைவில் அமைதியான முறையில் அரசியல் மாற்றம் நிகழ வேண்டும் என வலியுறுத்தி அரபு மற்றும் அமெரிக்க ஆதரவு நாடுகள் சிரியாவுக்கு எதிராக ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் கொண்டு வந்தன.


தீர்மானத்துக்கு ஆதரவாக 107 நாடுகள் வாக்களித்தன. ரஷ்யா உட்பட 12 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. இந்தியா உபட 58 நாடுகள் தீர்மானம் தொடர்பாக வாக்களிக் காமல் தவிர்த்து விட்டன. இதுதொடர்பாக ஐ.நா.வுக்கான இந்திய தூதர் அசோக் குமார் முகர்ஜி கூறியதாவது:

தன்னிச்சையாக எடுக்கும் நடவடிக்கையால் சிரியாவில் தீர்வு ஏற்படாது. இதனால் பிரச்சினை தான் அதிகரிக்கும். சிரியா மற்றும் சுற்றுப்புறங்களில் மேலும் பதற்றத்தை அதிகரிக்கும். சிரியாவில் அரசியல் மாற்றம் குறித்து அந்நாட்டு மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

சிரியாவின் ஒருமைப்பாடு, சுதந்திரம் பாதிக்காத வகையில் அனைத்து தரப்பினரும் பங்கேற்கும் அரசியல் நடைமுறையை பின்பற்ற வேண்டும். அனைத்து தரப்பினரும் வன்முறையைக் கைவிட்டு, அமைதியான பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்றார் முகர்ஜி.

## பாக்.முன்னாள் பிரதமர் ஹிலானியின் மகன் கடத்தல் விவகாரம்; 6 பேர் கைது

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் யூசுப் ராஜா ஹிலானியின் மகன் அலி ஹைதர் ஹிலானி கடந்த 9ஆம்திகதி மர்ம நபர்களால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டார். இவரை மீட்கும் நடவடிக்கையில் கைபர் பகுதி பொலிசார் ஈடுபட்டு வருகிறார்கள்.



இதற்கிடையில் கடத்தல் கும்பலில் சிக்கி தப்பி வந்த ஒரு நபர் பொலிசாரிடம் தன்னை காவலில் வைத்திருந்த இடத்தில் ஹிலானியின் மகனை பார்த்தேன் என்று தகவல் கொடுத்தார்.

இதனை அடுத்து பொலிசார் கைபர் பகுதியில் அக்நோரா ஹாத்தக் என்ற இடத்திலுள்ள சர்தார் அலி என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தில் சோதனை நடத்தி 2 பெண்கள் உட்பட 6 பேரை மடக்கி பிடித்தனர். மேலும் அங்கிருந்த அப்துல் வஹாப் என்பவரை மீட்டனர். இவர் ஹிலானியின் மகனுடன் கடத்தப்பட்டவர் ஆவார். ஆனால் ஹிலானியின் மகன் அலி ஹைதர் இன்னும் மீட்கப்படவில்லை.

இது தொடர்பாக பிடிபட்ட 6 நபர்கள் மற்றும் மீட்கப்பட்ட அப்துல் வஹாப் ஆகியோரிடம் பொலிசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் உரமின்றி நேர்மை திறன் இன்றி
வஞ்சனை செய்வாரடி – கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி –பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாங்கள் யாருமற்ற அநாதைகள் நீங்கள் ஆத்ம சாந்தியடையுங்கள்

2009 ஆம் ஆண்டு. ஈழத்தமிழர்கள் கண் மூடித்தனமாக அழிக்கப்பட்ட ஆண்டுகளில் முதன்மையானது என்று சொல்லும் அளவிற்கு, தாங்க முடியாத இழப்புகளைத் தந்து போனது.

வன்னிப்போரின் முடிபாக முள்ளிவாய்க்காலின் முனையில், 2009 மே 18 இல் போர் முடிபு, சிங்கள இனத்தின் வெற்றியாக அறிவிக்கப்பட்டது.

எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சிக் கேட்டும் இரக்கம் கொள்ளாத சர்வதேச பொது அமைப்புகள் முதல் அண்டை நாடான இந்தியா வரை, எங்களுக்குத் துரோகம் இழைத்தன.

விடுதலைப்புலிகளைப் பூண்டோடு ஒழிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக ஏதும் அறியாத அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்த போது, சண்டை என்றால் சனங்கள் சாகத்தான் செய்யும் என்று மௌனம் காத்த பெரும் துரோகத்தை தமிழ் மக்கள் மன்னித்தாலும் வன்னிப் போரில் வெடிகுண்டு பட்டு குருதி சிந்தி அழுதழுது வெந்தணல் புழுதியில் விழுந்து உருண்டு, உயிர் விட்ட தமிழ் ஆத்மாக்கள் ஒரு போதும் மன்னிக்க மாட்டா.

ஓ! வன்னிப் போரில் உயிர்விட்ட எம் உறவுகளே! உங்கள் நினைவின் நான்காவது ஆண்டில் ஒரு செய்தியைக் கூறுகின்றோம்.

அந்தச் செய்தி விடுதலை பெறுவோம் என்பதாக நீங்கள் எதிர்பார்த்திருந்தால், அதற்காக மன்னிக்கவும்.

நாங்கள் அநாதைகள். எங்களுக்கு விடிவு என்பது நெடுந்தூரத்தில். எங்களிடம் பதவி மோகமும் பண ஆசையும் பிடித்த மகா போக்கிரித்தனங்கள் இருக்கும் வரை எங்களுக்கு ஏது விடிவு?

தமிழ் அரசியல் தலைமைகளை ஒரு கணம் எட்டிப்பாருங்கள். இவர்கள் கூறுவதில் உண்மையும் நேர்மையும் இருக்கிறதா? இல்லவே இல்லை. எங்களுக்கு நாங்களே பகையாகிக் கொண்டோம்.

ஜெனிவாத் தீர்மானம் எப்படி இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் நாங்களோ செப்ரெம்பரில் நடக்கும் மாகாண சபைத் தேர்தலில் மூழ்கிப் போயுள்ளோம்.

கடந்த வருடத்தில் அதற்கு முந்திய ஆண்டில் எல்லாம் நீங்கள் காணாதவர்கள் இந்தவருடம் – இன்று உங்களுக்காக தீபம் ஏற்ற வருவார்கள். இது உங்களுக்கான தீபம் என்ற பேரில் தங்கள் பதவிக்காக ஏற்றப்படும் தேர்தல் பிரசாரத்திற்கான தொடக்கத் தீபமாகும்.

தீபம் சுடுகிறதோ! இல்லையோ! ஆனால் நிச்சயம் இது அவர்களைச் சுடும்.

அன்புக்குரிய எம் உறவுகளே! உங்களுக்காக உங்களைப் பெற்றவர்களும் உங்கள் பிள்ளைகளுமாக கலங்குகின்ற இந்த வேளையில், நீங்கள் நிச்சயம் உறக்கம் கலைந்து உங்கள் உறவுகளைப் பார்ப்பீர்கள்.

இந்த நேரத்தில் எங்கள் பச்சோந்தித்தனப் புராணத்தைப் பாடி உங்களைக் குழப்ப விரும்பவில்லை.

ஆனாலும் ஒன்று. நாங்கள் அநாதைகள். எங்களுக்காக எவருமில்லை. இதுவே உண்மை என்பதால் நீங்கள் விடியலுக்காகக் காத்திராமல் ஆத்ம சாந்தி அடையுங்கள்.

# யுத்தத்திற்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் உள்ள வாக்காளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## வடக்கு மாகாண பிரதித் தேர்தல் ஆணையாளர்



(யாழ்ப்பாணம்)

யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் வடக்கு மாகாணத்திலுள்ள வாக்காளரின் எண்ணிக்கையில் பாரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பிரதித்தேர்தல் ஆணையாளர் சி. அச்சுதன் தெரிவித்துள்ளார்.

வாக்காளர்பட்டியல் மீளாய்வு, வாக்காளர் தினம் மற்றும் தேர்தல் நடை முறைகள் பற்றி விளக்கங்கள் அளிக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்று முற்பகல் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக வடக்கு மாகாணத்தின் வாக்காளர் எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

இதற்கு யுத்தம் பிரதான காரணம் என்ற போதிலும் மக்களின் விழிப்புணர்வற்ற தன்மையும் ஒரு காரணமாக கொள்ளப்படுகிறது.

எனவே, இங்குள்ள ஊடகங்கள் வாக்காளர்களை விழிப்புணர்வு ஏற்படுத்தி பதிவினை மேற்கொள்ளத் தூண்ட வேண்டும். மேமாதம் 15 ஆம் திகதி தொடக்கம் பி.சி. படிவங்கள் ஒவ்வொரு கிராமசேவையாளர் ஊடாகவும் தேர்தல் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டு வருவதோடு ஜூன்மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் வாக்காளர் விண்ணப்பப்பத்திரங்கள் பூர்த்தியாக்கப்பட்டு இரண்டாம் திகதி சகல பி.சி. படிவங்களும் கிராமசேவையாளரூடாக திரட்டப்படும். மேலும், வாக்காளர் பட்டியல் மீளாய்வு செய்யும் நடவடிக்கைக்கு வாக்காளர் ஒத்துழைப்பு வழங்குவதோடு பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

கிராமசேவையாளருக்கு பல கடமைகள் ஆற்றவேண்டியிருக்கின்ற போதிலும் வாக்காளர் பதிவு நடவடிக்கையில் கூடிய கவனம் செலுத்தி அதற்கு முன்னுரிமை கொடுத்து பதிவினை மேற்கொள்ளுமாறு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

எனவே, ஒவ்வொரு வாக்காளரும் வாக்காளராகத் தம்மைப் பதிவு செய்வது கடமையும் பொறுப்பும் என்றவகையில் கிராமசேவையாளருக்கு ஒத்துழைப்பு வழங்கிப் பதிவு செய்துகொள்ள வேண்டும். புதியவாக்காளர்களை இணைத்தும் இறந்தவர்களை நீக்கியும் பி.சி. படிவத்தில் வாக்காளர் பதிவினை மேற்கொள்வதோடு பதிவுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டதா? என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம்.

வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் போது அதில் உங்க ளது பெயர் நீக்கப்பட்டிருப்பின் அது தொடர்பில் கிராமசேவையாளரூடாகவோ அல்லது தேர்தல் திணைக்களத்திற்கோ அறிவிக்க முடியும்.

எனவே, கடந்த கால யுத்த சூழல் காரணமாக வடக்கு மாகாணத்தில் பாரியளவில் வாக்காளர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை கவனத்தில் எடுத்து ஒவ்வொரு வாக்காளரும் தவறாமல் வாக்குப்பதிவினை மேற்கொள்ள வேண்டும் என அவர்மேலும் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தேர்தல் தலைமைச் செயலக பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம். மொஹமட்டும் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்திருந்தார். (அ-6)

# அதிகஷ்ட, கஷ்ட பிரதேசத்தில் சேவையாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு

வலயக் கல்வி திணைக்கள கட்டமைப்புக்குழு , மாகாண அபிவிருத்தி கட்டமைப்பு குழு ஆகியவற்றின் சிபார்சுக்கு அமைய வடமாகாண ஆளுநரின் அனுமதியுடன் அதிகஷ்டப் பிரதேச, க்ஷ்டப் பிரதேச பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் திட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண பாடசாலைகளில் 363 பாடசாலைகள் அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாகவும் 138 பாடசாலைகள் கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளாகவும் வகைப்படுத்தப்பட்டு வலயக் கல்வி திணைக்கள கட்டமைப்புக் குழு, மாகாண கல்வி திணைக்கள கட்டமைப்புக்குழு என்பன சிபார்சு செய்துள்ளன.

இதன்படி யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் அதிகஷ்ட பாடசாலைகளாக 3 பாடசாலைகளும் கஷ்ட பாடசாலைகளாக 4 பாடசாலைகளும் வலிகாமம் வலயத்தில் அதிகஷ்ட பாடசாலைகளாக 9 பாடசாலைகளும் கஷ்டப் பாடசாலைகளாக 14 பாடசாலைகளும் வடமராட்சி வலயத்தில் 17 அதி கஷ்டப் பாடசாலைகளும் 5 கஷ்டப் பாடசாலைகளும் தென்மராட்சி வலயத்தில் 3 அதிகஷ்டப் பாடசாலைகளும் 12 கஷ்டப்பாடசாலைகளும் தீவக வலயத்தில் 23 அதிகஷ்டப் பாடசாலைகளும் 10 கஷ்டப் பாடசாலைகளும் இவ்வாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளன.


மேலும் கிளிநொச்சி வலயத்தில் 61 அதிகஷ்ட பாடசாலைகளும் 17 கஷ்டப் பாடசாலைகளும் மன்னார் வலயத்தில் 22 அதிகஷ்டப் பாடசாலை களும் 19 கஷ்டப்பாடசாலைகளும் மடுக் கல்வி வலயத்தில் 32 அதிகஷ்டப் பாடசாலைகளும் 7 கஷ்டப்பாடசாலைகளும் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 66 அதி கஷ்டப் பாடசாலைகளும் 9 கஷ்டப் பாடசாலைகளும் வவுனியா தெற்கு வலயத்தில் 51 அதிகஷ்டப் பாடசாலைகளும் 17 கஷ்டப் பாடசாலை களும் முல்லைத்தீவு வலயத்தில் 30 அதிகஷ்டப் பாடசாலைகளும் 16 கஷ்டப் பாடசாலைகளும் துணுக்காய் கல்வி வலயத்தில் 46 அதிகஷ்டப் பாடசாலைகளாகவும் 8 கஷ்டப் பாடசாலைகளாகவும் இனங்காணப்பட்டு மொத்தமாக 501 பாடசாலைகள் இவ்வாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் மேற்படி வகைப்படுத்தலுக்கு அமைவாக அதிகஷ்டப் பாடசாலையில் சேவையிலுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் கஷ்டப் பிரதேசப் பாடசாலை சேவையில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படவுள்ளதென்று வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். இக்கொடுப்பனவுக்கு தகுதியான பாடசாலைகளின் விபரங்கள் ஏற்கெனவே வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

### அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களிற்கான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது அதனைத்து அதிபர்களைவும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] அறிவித்துள்ளார். (அ)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



உங்களைப் பற்றி நீங்கள் உங்களுள் சத்தியமாக இருக்க ஆரம்பித்த கணமே கடவுளுடனான உங்கள் தொடர்பு பலப்பட்டு அருள் கிடைப்பதற்கு மிகுந்த சுலபமான வழி ஏற்படுகிறது. உள் சத்தியம் இல்லாதபோது கடவுளுடனான தொடர்பு சரிவர இருப்பதில்லை. ஆகவே, அனுக்கிரகம் கொடுப்பதும் மிகக் கடினமாகிறது. பகவானைப் பொறுத்தவரையில் யாருக்கு வேண்டுமானாலும் அருள் கொடுப்பதற்கு சித்தமாக உள்ளார். ஆனால், பிரச்சினையே இந்தத் தொடர்பு ஏற்படுவதில்தான் உள்ளது. அது ஒரு தொலைத்தொடர் (Telecom) இணைப்பைப்போல உள் சத்தியம் இருந்தால் தொடர்பு நன்றாக ஏற்பட்டு அருள் சீராகக் கிடைக்கும். இப்படித்தான் இது செயற்படுகிறது. அதனால்தான் உள் சத்தியம் இருந்தால் உண்மையில் நீங்கள்கூட அற்புதங்களைச் செய்யலாம்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஊக்கத்துடன் முன்னேறுங்கள்



- நம்மிடத்தில் நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை இதுவே வெற்றி பெறுவதற்கான பரம இரகசியம்.
- தன்னம்பிக்கை கொண்ட ஒரு சிலரின் வாழ்க்கை வரலாறே உலக சரித்திரமாக விளங்குகிறது.
- பாவம் என்ற ஒன்று உலகில் இருக்குமானால் அது நான் பலவீனமானவன்; மற்றவர்கள் பலவீனமானவர்கள் என்று சொல்வது ஒன்றுதான்.
- சுதந்திரமானவர்களாக வாழுங்கள். எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்த்துக் காத்திருக்காதீர்கள்.
- இல்லை என்றோ, என்னால் இயலாது என்றோ ஒருபோதும் சொல்லாதீர்கள். உங்களால் எதையும் சாதிக்கமுடியும்.
- தோல்வியைப் பொருட்படுத்தாதீர்கள். ஆயிரம் முறை தோற்றாலும் மீண்டும் ஒருமுறை முயற்சியில் இறங்குங்கள்.
- சிங்கத்தின் இதயம் படைத்த ஆண்மகனையே திருமகள் விரும்பி சேர்கிறாள். கடந்துவந்த பாதையைப் பின்னால் திரும்பிப்பார்க்க தேவையில்லை. ஊக்கத்துடன் முன்னோக்கிச் செல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி நடந்தது சூதாட்டம் ?

## விபரிக்கிறார் டில்லி நகர பொலிஸ் ஆணையர்

ஐபிஎல் போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ஸ்ரீசாந்த், அங்கித் சவாண், அஜித் சாண்டிலா ஆகிய மூன்று வீரர்கள் மற்றும் 11 தரகர்கள் உட்பட 14 பேரை டில்லி பொலிஸார் கைதுசெய்தமை கிரிக்கெட் ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கிரிக்கெட் வீரர்கள் மூவரும் ஐபிஎல் போட்டியில் சூதாட்டக் கும்பலுடன் சேர்ந்து கொண்டு மோசடியில் ஈடுபடுவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, வீரர்களின் செயற்பாட்டை டில்லி பொலிஸார் இரகசியமாகக் கண்காணித்து வந்தனர். அப்போது சூதாட்டத்தில் வீரர்கள் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்தன. இந்த வீரர்களுக்கு சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் மும்பை நிழல் உலகத்துடன் தொடர்பு இருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இக்கைதுகள் குறித்து டில்லியில் நகர பொலிஸ் ஆணையர் நீரஜ் குமார் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

இந்தியன் பிறீமியர் லீக் (ஐபிஎல்) கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கும் சில வீரர்கள் சூதாட்டக் கும்பலுடன் சேர்ந்து கொண்டு மோசடியில் ஈடுபடுவதாகக் கடந்த ஏப்ரல் மாதம் டில்லி பொலிஸ் உளவுப் பிரிவுக்கு தகவல் கிடைத்தது. இந்த நிலையில், கடந்த மாதத் தொடக்கத்தில், டில்லியில் நடைபெற்ற ஐபிஎல் போட்டியின்போது, சில சூதாட்டகாரர் கள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் பின்னணி குறித்து விசாரித்த போது டில்லி, குஜராத், மகராஷ்டிரம், பஞ்சாப், உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள சூதாட்டக் கும்பல் கிரிக்கெட் வீரர்களுடன் சேர்ந்து மோசடியில் ஈடுபடுவதாகத் தெரியவந்தது. அந்தக் கும்பலைக் கையும் களவுமாகப் பிடிக்க தனிப் படைகள் அமைக்கப்பட்டன. அப்போது, "ராஜஸ்தான் ரோயல்ஸ்" அணியைச் சேர்ந்த ஸ்ரீசாந், அஜித் சாண்டிலா, அங்கித் சவாண் ஆகியோர் சூதாட்டக் கும்பலுடன் தொடர்பில் இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, சந்தேகப்படுவோரின் தொலைபேசி உரையாடல்கள் இடைமறித்துக் கேட்கப்பட்டன. அதில் கிடைத்த தகவலின்படி மே 5, 9, 15 ஆகிய நாட்களில் ராஜஸ்தானின் ஜெய்ப்பூர், பஞ்சாபின் மொஹாலி, மும்பையில் நடைபெற்ற போட்டிகளில் வீரர்கள் சூதாட்ட மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து, வீரர்களையும், சூதாட்டக் கும்பலையும் தனிப்படையினர் கண்காணித்தனர். அப்போது அவர்கள் சமிக்ஞை முறையில் சூதாட்டத்தில் ஈடுபட்டது வீடியோ ஆதாரம் மூலம் உறுதி செய்யப்பட்டது.

### தீவிர சோதனை

இதையடுத்து, மும்பை ஹோட்டல்களில் த்ங்கியிருந்த அஜித் சாண்டிலா, அங்கித் சவாண், மும்பை கார்டர் சாலை பங்களாவில் தங்கியிருந்த ஸ்ரீசாந்த் ஆகியோர் புதன் கிழமை இரவு கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு உடந்தையாக செயற்பட்ட சூதாட்டக் கும்பலையும் தனிப் படையினர் மும்பையில் கைது செய்தனர்.

இதேபோல, டில்லியில் முகாமிட்டிருந்த மற்றொரு தனிப் படையினர் பஞ்சாபைச் சேர்ந்த தீபக் குமார், டில்லி ரோஹிணி பகுதியைச் சேர்ந்த ராகேஷ் மற்றும் ஐந்து பேரை கைது செய்தனர். இந்தக் கும்பல் வசித்து வந்த மும்பை, குர்கான், டில்லி ஆகிய நகரங்களில் உள்ள வீடுகள், ஹோட்டல்களில் பொலிஸார் ஆரம்பநிலை சோதனை நடத்தினர். அதில், 51 கைபேசிகள், ஐந்து மடிக்கணனிகள், கிரிக்கெட் வீரர்களுடன் நடத்திய உரையாடல்களைப் பதிவு செய்ய சூதாட்டக் கும்பல் பயன்படுத்திய குரல் பதிவு சாதனம் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன என்றார் நீரஜ் குமார்.

### ஐந்து நாட்கள் பொலிஸ் காவல்

இந்த நிலையில், மும்பையில் கைதான ஸ்ரீசாந்த், அங்கித் சவாண், அஜித் சாண்டிலா உள்ளிட்டோர் விமானம் மூலம் டில்லிக்கு வியாழக்கிழமை பிற்பகலில் அழைத்து வரப்பட்டனர். அவர்களை சாகேத் மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிபதி லோகேஷ் குமார் சர்மா முன்னிலையில் இரவு 7 மணியளவில் ஆஜர்படுத்தினர்.

அப்போது, பொலிஸார் கேட்டுக் கொண்டபடி, 14 பேரையும் 5 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிபதி உத்தரவிட்டார்.

### கடும் தண்டனை

ஸ்ரீசாந்த் உள்ளிட்ட மூன்று வீரர்களும் தவறு செய்திருப்பது உறுதி செய்யப்பட்டால் அவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும என்று மத்திய விளையாட்டுத்துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித் துள்ளார்.

### ஸ்ரீசாந்துக்கு வாழ்நாள் தடை?

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பிசிசிஐ), ஸ்ரீசாந்துக்கு வாழ்நாள் தடை விதிக்கும் என்று தெரிகிறது. ஸ்ரீசாந்தை இனி எந்த கிரிக்கெட் போட்டியிலும் விளையாட அனுமதிப்பதில்லை என்ற முடிவுக்கு பிசிசிஐ நிர்வாகிகள் வந்துள்ளதாகத் தெரிகிறது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள பிசிசிஐ உயரதிகாரி ஒருவர், ஸ்ரீசாந்துக்கு ஆயுள் தடை விதிக்க வேண்டும் என்பதில் பிசிசிஐ நிர்வாகிகள் உறுதியாக உள்ளனர்" என்றார்.




ஐ.பி.எல் போட்டிகளை தடை செய்யக் கோரி இந்தியா முழுவதும் கிரிக்கெட் ரசிகர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சூதாட்ட புகாரில் சிக்கி கைதாகியுள்ள மூன்று ஐ.பி.எல் வீரர்களின் புகைப்படங்களை எரித்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். ஐபிஎல் போட்டிகள் சூதாட்டத்தை ஊக்குவிப்பதால் இதற்கு தடை விதிக்க வேண்டுமென்று ரசிகர்கள் ஆர்ப்பாட்டத்தின்போது வலியுறுத்தினர்.

## இன்றைய ஆட்டங்கள்

மாலை 4 மணி

KINGS XI PUNJAB Vs MUMBAI INDIANS

CHENNAI SUPER KINGS Vs ROYAL CHALLENGERS BANGALORE

இரவு 8 மணி

## இதுவரை சூதாட்டம் நடந்ததாக தெரியவந்த ஆட்டங்கள்

மே 5

வீரர்களுக்கும், சூதாட்டத் தரகர்களுக்கும் இடையே ஓர் உடன்படிக்கை வைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட ஓவரில் இவ்வளவு ஓட்டங்கள் விட்டுக் கொடுப்பேன் என்று குறிப்பிட்ட வீரர் ஒரு செய்கை மூலம் தரகருக்கு உணர்த்த வேண்டும். அப்போது தரகர்கள் தங்கள் சூதாட்டத்தைத் தொடங்குவார்கள். இவ்வாறு, ராஜஸ்தான் ரோயல்ஸ் வீரர் சாண்டிலா தரகர்களின் பேரத்தின் படி, முன்கூட்டியே ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார்.

ஆனால், அவ்வாறு ஓட்டங்களைக் கொடுக்கும் முன்னதாக, அதற்குரிய சமிக்ஞைகளை தரகர்களுக்கு அவர் வெளிபபடுத்தவில்லை. இதனால், அவருக்கு முன்னதாகத் தரப்பட்ட ரூ.20 இலட்சம் பேரத் தொகையை தரகர்கள் திரும்பிக் கேட்டுள்ளனர். புனே வாரியர்ஸ் அணிக்கு எதிராக மே 5ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் இது நடந்துள்ளது. சாண்டிலா வானத்தைப் பார்க்க வேண்டும். ஆனால், அவர் பார்க்கவில்லை அதே நேரம், சாண்டிலா அந்த ஓவரில் வீசிய 6 பந்தில் உத்தப்பாவும் பின்ச்சும் 14 ஓட்டங்களை எடுத்தனர். இதுவும் தீர்மானிக்கப்பட்டதுதான்! ஆனால் தரகர்கள் சூதாட்டம் நடத்த வசதியாக இவர் அடையாளங்கள் எதையும் அவர்களுக்குக் காட்டவில்லை. இதனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட பணம் திருப்பி கேட்கப்பட்டதாம்.

மே 9

மொகாலியில் நடைபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் போட்டியில், ஸ்ரீசாந் தனது 2ஆவது ஓவரை வீசுவதற்கு முன் தனது நீளக்காற் சட்டையினுள் வெள்ளை கைக்குட்டை ஒன்றைப் போட்டுக் கொள்ளவேண்டும், இதுதான் அடையாளம். அதாவது, அந்த ஓவர் சூதாட்ட ஓவர் என்பது பொருள். அதேபோல் ஸ்ரீசாந்த் கைக்குட்டை பெற்றுக் கொள்கிறார். சிறிது நேரம் பயிற்சி செய்த பின்பு 13 ஓட்டங்களை வாரிக் கொடுத்தார். அந்த ஓவரை வீச ஆரம்பிப்பதற்கு முன் பந்தயம் செய்ய நேரம் வேண்டும் எனவே ஏதாவது செய். ஆனால் என்ன செய்யப் போகிறாய் என்பதை தெரிவித்துவிடு என்று தரகர் மூலம் ஸ்ரீசாந்துக்கு தகவல் வருகிறது. அந்த ஓவரில் மார்ஷ் மற்றும் கில்கிறிஸ்ட் பந்துகளை விளாசித் தள்ளினர். அந்த ஓவருக்குப் பின்னர், ஸ்ரீசாந்துக்கு பந்து வீச வரவில்லை.

மே 15

கடைசிப் போட்டியாக, புதன்கிழமை இரவு நடந்த மும்பை இந்தியன்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி. இதில், சண்டிலா, சவான் இருவரின் செயற்பாடும் சூதாட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

இந்தப் போட்டியில் சாண்டிலா களத்தில் இறங்கி ஆடவில்லை என்றாலும், சாண்டிலாதான் சூதாட்டத் தரகர்களுக்கும், சவானுக்கும் இடையே இடைத்தரகு வேலை செய்துள்ளார்.

இவரிடம் 60 இலட்சம் ரூபாய் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஓவரில் சவான் 13 ஓட்டங்கள் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி, அவர் ஏற்கெனவே வீசிய முதல் ஓவரில் கட்டுக்கோப்பாக வீசி 2 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்த சவான், இரண்டாவது ஓவரில், முதல் மூன்று பந்துகளிலேயே இரண்டு சிக்ஸர் ஒரு இரண்டு ஓட்டம் என 14 ஓட்டங்களை விட்டுக் கொடுத்துவிட்டு, அடுத்த மூன்று பந்துகளை கட்டுக்கோப்பாக வீசிவிடுகிறார். இது சூதாட்டக்காரர்கள் சொன்ன ஓட்டத்தை விட ஒரு ஓட்டம் கூடுதலாம்.

இத்தகைய விளக்கங்களை டில்லியில் பொலிஸ் ஆணையாளர் செய்தியாளர்களுக்கு வீடியோவாகப் போட்டுக் காண்பித்து விளக்கம் அளித்துள்ளார்.

## முன்னாள் ராஜஸ்தான் வீரரும் கைது

ஐ.பி.எல். போட்டியில் நடைபெற்ற சூதாட்டம் தொடர்பாக ராஜஸ்தான் அணியின் வீரர்கள் ஸ்ரீசாந்த், சவான் மற்றும் சந்திலாவை கைது செய்துள்ள நிலையில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ராஜஸ்தான் அணியின் முன்னாள் வீரர் அமித் சிங்கை அகமதாபாத்தில் வைத்து பொலிசார் கைது செய்துள்ளனர். இவர் ராஜஸ்தான் அணிக்காக 2009 முதல் 2012ஆம் ஆண்டு வரை விளையாடினார்.

## விலைபோயினர் பெண்களும்

பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் ஐபிஎல் ஸ்பாட் சூதாட்டத்தில் கிரிக்கெட் வீரர்களுக்கு பெண்களையும் தரகர்கள் விநியோகம் செய்ததாக டில்லி பொலிசார் பரபரப்பு தகவல்களை வெளியிட்டுள்ளனர். பொலிஸாரிடம் சிக்கியுள்ள தொலைபேசி உரையாடல்களில் விநியோகம் செய்யப்பட்ட பெண்கள் அனுப்பி வைக்கப்பட்ட மற்றும் சென்றடைந்த நேரங்கள் பதிவாகி இருக்கின்றன என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர். இதில் ஸ்ரீசாந்தும் அவரது நண்பரான பிஜு என்ற ஜிஜுவும் மும்பை ஹார் பகுதியில் பெண்களுடன் இருந்தபோதுதான் கைது செய்யப்பட்டதாகவும் டில்லி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## 15 போட்டிகள் சர்ச்சையில்...

6ஆவது ஐபிஎல் தொடரில் 15 போட்டிகளில் சூதாட்டம் நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இவை குறித்து தற்போது இரகசியமாக விசாரிக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. ஸ்ரீசாந்த் அஜீத் சண்டிலா, அங்கீத் சவான் ஆகியோ ருடன் கைதான தரகர்களிடம் இதுகுறித்து தீவிரமாக விசாரணை நடத்தி வருகிறது டில்லி பொலிஸ். இந்த 15 போட்டிகளில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி தவிர வேறு சில அணிகளும் விளையாடிய போட்டிகளும் அடங்குகிறது.

பல்வேறு மாநிலங்களிலும் உள்ள தர கர்கள் ஒருங்கிணைந்து சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்று பொலிஸார் தரப்பில் சந்தேகம் கிளம்பியுள்ளது. இந்த வலைய மைப்பு மிகப் பெரியது என்றும் பொலிஸார் கருதுகிறார்கள்.

## ஐசிசி, பிசிசிஐ தூக்கம்



சூதாட்ட சர்ச்சை தொடர்பாக ஐபிஎல் முன்னாள் ஆணையரான லலித் மோடி கருத்து வெளியிடுகையில்,

ஐசிசி, பிசிசிஐ மற்றும் அதன் நிர்வாகிகள் ஆகியோர் இதுவரை தூங்கிக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. சூதாட்டம் தொடர்பாக ஐசிசி மற்றும் பிசிசிஐக்கு எதுவும் தெரியவில்லை. டில்லி பொலிஸ் மூலமாகவே வெளிவந்துள்ளது.

இந்திய கிரிக்கெட்டின் அதிகார மையம் மாற்றப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து தான் ஆளப்படுகிறது. ஐசிசி மற்றும் பிசிசிஐ ஆகியவற்றை ஆண்டு கொண்டிருக் கிற தனி நபரிடம் இருந்து அதிகாரத்தைப் பறிக்க வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தானை வீழ்த்தியது ஹைதராபாத் சன்ரைசர்ஸ்



ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.








6-வது ஐ.பி.எல்.தொடரின் 68-வது லீக் போட்டி ஹைதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று இரவு 8 மணிக்கு நடைபெற்றது.

இப்போட்டியில் உள்ளூர் அணியான சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி, ராஜஸ்தான் றோயல்ஸ் அணியைச் சந்தித்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சன்ரைசர்ஸ் அணி முதலல்துடுப்பாடுத்தாடத்தீமானிததது.

இதன்படி முதலில் துடுப்பாடிய அவ்வணி 20 ஓவர்களின் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக அதிகபட்சமாக சமன்ரே 46 பந்துகளில் 55 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சார்பாக ஜேம்ஸ் போல்க்னர் 4 ஓவர்களில் 16 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

137 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பாடக் களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 113 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் அதிபட்சமாக கெவன் கூப்பர் 12 பந்துகளில் அதிரடியாக 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் சன்ரைசர்ஸ் அணி சார்பாக சிறப்பாக பந்துவீசிய அமித் மிஸ்ரா 4 ஓவர்களில் 8 ஓட்டங்களை மாத்திரமே கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் போட்டியின் நாயகன் விருதையும் தட்டிச் சென்றார்.

## நயினை அம்மனுக்கு போலி நகை தானம் செய்த பெண் கைது

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு போலி நகையினை தானமாகக் கொடுத்ததுடன் தகராறிலும் ஈடுபட்ட பெண்ணொருவரை பொலிஸாா கைது செய்துள்ளனர்.

புங்குடுதீவைச்சேர்ந்த பெண் ஒருவரையே அங்கு கடமையில் இருந்த பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

புங்குடுதீவைச் சேர்ந்த நடுத்தர வயதுடைய பெண் ஒருவர் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்குச் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சென்று வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார்.

வழிபாடுகளை முடித்துக் கொணட குறித்த பெண், தான் ஆலயத்திற்கு நகைகள் தானம் செய்வதாகக் கூறி தான் கொண்டு வந்த நகைகளை ஆலய நிர்வாகத்தினரிடம் கையளித்துள்ளார்.

தான் தானமாக கொடுத்த நகைகளின் பெறுமதி இரண்டு இலட்சம் ரூபாய் என்றும் தெரிவித்ததுடன் அந்த பெறும்திக்கான பற்றுச்சீட்டினையும் வாங்கிக் கொண்டுள்ளார்.

தானமாக கொடுத்த நகைகள் மீதும் அந்த பெண்ணின் நடவடிக்கையின் மீதும் சந்தேகம் கொண்ட ஆலய நிர்வாக சபையினர் நகைகளைச் சோதனை செய்த போது அது போலி நகைகள் என்பது தெரிய வந்தது.


இந்த போலி நகைகள் தொடர்பில் குறித்த பெண்ணிடம் நிாவாகத்தினா் விசாரித்த போது ஆலய நிர்வாக சபையினரை தகாத வார்த்தைகளினால் குறித்த பெண் ஏசியுள்ளார்.

அத்துடன் ஆலய நிர்வாகத்தினர் வழங்கிய பற்றுச்சீட்டையும் கிழித்து எறிந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் குறித்த பெண்ணை கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தினால் ஆலயவளாகத்தில் பதற்றம் ஏற்பட்டதுடன் ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்களும் சில மணிநேரம் பதற்றமடைந்தனர். (எ-11)

## டேவிட் பெக்காம் ஓய்வு



தொழில்சார் உதைபந்தாட்ட போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரரும் முன்னாள் தலைவருமான டேவிட் பெக்காம் தெரிவித்துள்ளார்.

பரிஸ் சென்ட் ஜோமனி கழகம், பெக்காமுடன் புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்த முன்வைத்திருந்த நிலையில்,

அவரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது,

இங்கிலாந்து அணிக்காக 115 போட்டிகளில் பங்கேற்றுள்ள அவர், ஆறு பிறிமியர் லீக் பட்டங்களையும், ஒரு சாம்பியன் லீக் பட்டத்தையும் வெற்றிகொண்டுள்ளார்.

மன்செஸ்டர் யுனைட்டட், ரியல் மெட்ரிட், ஏ.சி.மிலான், எல்.ஏ.கலஸ்சி மற்றும் பரிஸ் சென்ட் ஜேர்மனி ஆகிய கழங்களுக்காக அவர் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் போட்டி

இலங்கைக் கிரிக்கெட்கட்டுப்பாட்டுச் சபையால் நடத்தப்படும் பிரிவு 3 ற்கான தகுதிகாண்கிரிக்கெட்போட்டிகள்தற்போது நடைபெற்றுவருகின்றன.

யாழ்.மாவட்டத்திலிருந்து இக்கிரிக்கெட் போட்டிக்கு 16 அணிகள் தெரிவாகியுள்ளன.

மகாஜனக் கல்லூரியில் இன்று நடைபெறவுள்ள போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணியும் நெல்லியடி கிளாபோச் அணியும் மோதவுள்ளன.

## 'இலங்கை பௌத்...

கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள சம்புத்தத்வ மண்டபத்தில் இடம்பெற்ற பொதுபல சேனாவின் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை பல்லினங்களுக்குச் சொந்தமான நாடல்ல. சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமான அம்மக்களின் ஆட்சியதிகாரத்திற்கு உட்பட்ட நாடாகும். எனவே, இங்குவாழும்அனைவரும்இலங்கை சிங்கள பௌத்த நாடு என ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதனை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு, வெளிப்படுத்தாதவர்களுக்கு இங்கு இடமில்லை. அவர்கள் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். எதிர்காலத்தில் இதற்கான எமது போராட்டம் ஆரமபமாகும்.

சர்வமத அமைப்புக்கள் இங்கு அவசியமில்லை. இவ்வமைப்புக்கள் சிங்கள பௌத்தத்தை அழித்தொழிக்கும் நிகழ்ச்சி நிரலையே முன்னெடுக்கின்றன. எனவே, இவ்வமைப்புக்களை தடைசெய்ய வேண்டும் என கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் தெரிவித்தார்.

படைத்துறைச் செயலாளர் கோததபாய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டின் கீழ் பொதுபல சேனா இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## கிளிநொச்சியில் 6 ஆயி...

கணவனை இழந்த நிலையில் பல்வேறு துன்ப, துயரங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

மீளக் குடியமர்த்தப்பட்ட பின் இவர்களுடைய வாழ்வாதாரம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

இக் குடும்பங்களில் வசிக்கின்ற குழந்தைகளும் சிறுவர்களும் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகினறனர்.

இப் பிள்ளைகளின் அடிபபடைத் தேவைகள் மற்றும் கற்றல் நடவடிக்கைகளுக்கான தேவைகள் என்பனவும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

இதேவேளை எமது மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் பல இடம் பெற்றுவருகின்றமை பதிவு செய்யப்பட்டுள்ளன.

இச் சம்பவங்கள் இம்மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கை களை பெரிதும் பாதிப்பதாகவுள்ளன.

பெண் என்பவள் சமூகத்தில் தங்கையாக, சகோதரியாக, மனைவியாக, தாயாக போன்ற பல நிலைகளில் முக்கியம் பெற்று விளங்குகின்றாள். இதனால் பல்வேறு சமூக சவால்களை பெண்கள் எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

குறிப்பாக எமது மாவட்டத்தில் சுமார் 6 ஆயிரத்திற்கும் அதிகமான பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனால் பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் எமது மாவட்டத்தில் அதிகமாகவே காணப்படுகின்றன.

பெண்கள் மற்றும் சிறுவர்களின் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு பிரதேச, மாவட்ட மட்டங்களில் உத்தியோகத்தர்களை நியமித்துள்ளோம். ஆனால் இவர்களால் இப்பிரச்சினைகளைத் முழுமையாகத் தீர்த்துவிட முடியாது.

இப்பிரச் சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குச் சமூக மட்டத்திலுள்ள அனைத்துச் தரப்பினரும் முன்வர வேண்டும் என்றார். (எ-11)

## தற்கொலை முயற்...

இந்தப் பெண், தனது மூன்று பிள்ளைகளையும் கிணற்றில் தள்ளிவிட்டு தானும் பாய்ந்து தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ணுடன் தொடர்பு வைத்திருந்து குடும்பத்தைக் கவனிக்காமல் விட்டதனால், குடும்பம் வறுமையில் வாடியதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

கணவனின் ஆதரவு இன்றி பிள்ளைகளையும் வளர்க்க முடியாமல் இந்த இளம் பெண் மனமுடைந்திருந்த தாகவும் கூறப்படுகிறது.

உயிரிழந்த பிள்ளை களின் சடலங்கள் மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வவுனியா பொலிசார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் இன்று வெற்...

னொரு முள்ளிவாய்க்கால் உங்களுக்குப் பதில் சொல்லும்.

இவ்வாறு இராணுவப் புலனாய்வாளர்கள் எனத் தம்மை அடையாளம் காட்டிக்கொண்ட ஒரு குழுவினர் கிளிநொச்சி மக்களிடம் கடும் தொனியில் எச்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

கிளிநொச்சி நகரில் வசிக்கும் மக்களிடம் இந்த மிரட்டலை அவர்கள் விடுத்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு வனனியில் இறுதி யுத்தம் நிறைவுக்கு வந்த மே 18ஆம் திகதியை இலங்கை அரசு ஒவ்வொரு வருடமும் யுத்த வெற்றிவிழாவாகக் கொண்டாடி வருகின்றது. இன்று 18 ஆம் திகதியும் காலிமுகத் திடலில் யுத்த வெற்றிவிழாவைக் கொண்டாட அரசு பெரும் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இந் நிலையில் அன்றைய தினம் தமிழர் தாயகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பொது இடங்களில் முள்ளிவாய்காலில் மரணித்த தமிழ் உறவுகளை நினைவு கூரும அஞ்சலிநினைவுகளை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிபெடுத்துள்ளது.

அதேவேளை, அன்றைய தினம் ஆலயங்களிலும் வீடுகளிலும் முள்ளிவாய்க்காலில் மரணித்தவர்களை நினைவுகூர்ந்து விளக்கேற்றுமாறும் கூட்டமைப்பு தமிழ் மக்களைக் கேட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே கிளிநொச்சி மக்களிடம் இராணுவப் புலனாய்வாளர்கள் எனத தம்மை அடையாளம் காட்டிக் கொண்ட ஒரு குழுவினர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, இராணுவப் புலனாய்வாளர்களின் இந்த மிரட்டல் குறித்து தம்மிடம் மக்கள் முறையிட்டனர் எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், இன்று சனிக்கிழமை கூட்டமைப்பின் ஏற்பாட்டில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள பொது இடங்களில் ஒழுங்குசெய்யப் பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுதின நிகழ்வு திட்டமிட்டபடி நடைபெறும் எனவும், மக்கள் அச்சமடையாமல் அதில் கலந்து கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (எ-11)


## விற்பனைக்குண்டு

மிக நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மைனர் (9 P) கார் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு
0773447775 (c-3352)



உங்கள் அன்பு உறவுகளுக்கு ...!

www.creativedesk.lk/shop

மேலதிக விபரங்களுக்கு :-
(2610) 077 777 8529



அரிய வாய்ப்பு

கனடாவில் படிக்க உழைக்க 2 மாதங்களில் செல்லலாம்

A/L, O/L அவசியமில்லை
உணவு தங்குமிடம் இலவசம்

6 பேருக்கே அரிய வாய்ப்பு

சட்ட ஆலோசனைகளிற்கு;
(சி-3357)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175,பருத்தித்துறை வீதி ,ஆனைப்பந்தி ,யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 221 9016, 021 568 9090





## Deutsch, Dutch, French, English

**2013 புதிய வகுப்புகள் விபரம்**

ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

**தொடர்பு: விவேகானந்தா அக்கடமி**
221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C-3354) Tel: Hotline, 0774842464/ 021 321 6928



## FRENCH LANGUAGE CENTRE

யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்.!.

## FRENCH CLASSES

Canada, French Embassy மற்றும் சர்வதேச ரீதியில் அங்கிகரிக்கப்பட்ட International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

இது வரைக்கும் 700 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...

ஆரம்பம் : 25.05.13 Sat at 10am.
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ Hospital முன்பாக).

: 22.05.13 Wed at 11.30am.
No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)

0779 789 456 (C-3355)

English, Deutsch, Italian, & Sinhala வகுப்புக்களும்...



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

**Learn French The French Way**

**பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்**

பிரான்ஸ், கனடா செல்வோர், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்). France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "Alliance Francaise" மட்டுமே.

சர்வதேச நிறுவனமொன்றில் French கற்றிட இது ஓர் அரிய சந்தர்ப்பம். உடன் பதிவு செய்யுங்கள்.

**புதிய வகுப்பு :சனி, ஞாயிறுகளில் ...2 pm-4 pm** (2576)

61,Kachchery-Nallur Road,Jaffna. *T.P.:0212228093*

கச்சேரி பஸ் தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்


# யாழ்.மற்று...

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வன்னியிலும் கூடப் படைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

ஆயுதப்படைகளின் நிலை கொள்ளலானது, ஓர் அரசியல் விவகாரமாகவோ, எந்தவொரு வெளிநாட்டு சக்திகளின் கலந்துரையாடலுக்கான விவகாரமாகவோ இருக்கக்கூடாது.

போருக்குப் பின்னர் வடக்கில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் இராணுவத் தலையீடுகளால் முழுமையான குடியியல் ஆட்சியை ஏற்படுத்துவதில் தடங்கல்கள் உள்ளதாக, குற்றச் சாட்டுகளைக் கூறுவோர், 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் படிப்படியாக இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

எத்தகைய நிலையை எதிர்கொள் வதற்கும் ஏற்ற தயார் நிலையில் ஆயுதப்படையினா் இருக்க வேண்டும என்று குறிப்பிட்ட அவர், மீண்டும் தீவிரவாத எழுச்சி ஏற்படுவதைத் தடுப்பதற்கான பலமான அரணாக ஆயுதப்படைகளின் நிலை கொள்ளல் அமைந்திருக்கும்.

தேசிய பாதுகாப்பு விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் தாம் தயாரில்லை. இராணுவத்தினரின் பிரசன்னம் ஒரு அற்பமான விடயம், ஆனால் அது தவிர்க்க முடியாதது. இருந்தபோதிலும் பல்வேறு தரப்புகளும், ஒருபகுதிஊடகங்களும் பாதுகாப்பு விவகாரங்களுடன்அரசியல்விளையாட்டு நடத்துகின்றன.

முன்னைய அரசுகள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் விட்ட தவறுகளால் நாடு மிகக் கடுமையான விலைகளைக் கொடுத்துள்ளது.

அதே தவறை மீணடும் செய்வதற்கு நான் தயாராக இல்லை என தெரிவித்தார். (எ-11)

# தயா மாஸ்...

குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போது அவா இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியையும், புலிகளையும இணைத்து பல்வேறு சேறு பூசல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளாா.

பாரியளவு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடாபில் உரிய விசாரணை நடத்தப்படும் வரையில் தேர்தலில போட்டியிடுவது பொருத்த மற்றது என அவா சுட்டிக்காட்டி யுளளார்.

விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர்களுடன் தேர்தல் தொடாபுகளைப் பேணுவதில்லை என கட்சி தீர்மானித் துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# இந்தியா...

தாக தற்போது ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 26 இந்திய மீனவர்கள் விடுதலை குறித்தும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (எ-11)


*க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடையாவிட்டாலும் ... மலேசிய SEGi பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்று LONDON பல்கலைக்கழகச் சான்றிதழுடன்*

மாதம் 50,000/= வருமானமும் தரும்

## ஹொட்டேல் பயிற்சிநெறி

- பயிற்சிநெறி முடிவில் வேலைவாய்ப்பும், Singapore, Australia மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பும்.
- இலவச 3 மாத ஆங்கில வகுப்பு

3ஆம் அணி மாணவர்கள் மே 21இல் பயணம் – 4ஆம் அணி விரைவில் பயணம்
5ம் அணியில் இணைந்துகொள்ள உடனே அழையுங்கள்

இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 222 00 11, நேரடி: 0773 616 798
Email: edusikaram@gmail.com
www.sikaram.lk

சிகரம் SIKARAM MEDIA & EDUCATION கல்வி - தொழில் வழிகாட்டி



# வல்வெட்டித்துறையில் உதயமாகியுள்ளது

## மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையம்

யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த வைத்திய நிபுணர்களை ஒன்றிணைத்த தினசரி வைத்தியசேவை.

- வருகை தரும் வைத்திய நிபுணர்கள்
- குழந்தை வைத்திய நிபுணர்கள்
- சத்திர சிகிச்சை நிபுணர்கள்
- தோல் வைத்திய நிபுணர்கள்
- கண் வைத்திய நிபுணர்கள்
- காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள்
- உளநல வைத்திய ஆலோசனை
- பொது வைத்திய நிபுணர்கள்
- மகபேற்றியல் நிபுணர்கள்
- இதய சிகிச்சை நிபுணர்கள்



First to Care

ECG
ஸ்கான்
இரத்தப் பரிசோதனை



(2540)

Mathujan Medical Consulting Center
மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையம்
மருதடி வல்வெட்டி, யாழ்.வீதி, வல்வெட்டித்துறை.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org